# மூன்றாண்டு நிலைமை அறிக்கை

## 2021-2023

# மாகாண சபைகள்

# உள்ளடக்கம்


| | | | பக்க இல. |
|---|---|---|---|
| **1.** | நிறைவேற்று பொழிப்புரை | | 2 |
| **2.** | நிதிக்கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் | | 3 |
| **3.** | மாகாண சபைகளின் சுயாதீன அவதானிப்புக்கள் | | |
| | 3.1 | கிழக்கு மாகாண சபை | 5 |
| | 3.2 | வடமத்திய மாகாண சபை | 23 |
| | 3.3 | வடமேல் மகாண சபை | 37 |
| | 3.4 | சப்ரகமுவ மாகாண சபை | 60 |
| | 3.5 | ஊவா மாகாண சபை | 72 |
| | 3.6 | மத்திய மகாண சபை | 92 |
| | 3.7 | **தென் மாகாண சபை** | 125 |
| | 3.8 | மேல் மாகாண சபை | 177 |
| | 3.9 | வடக்கு மாகாண சபை | 202 |

## 1. நிறைவேற்று பொழிப்புரை

1987 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட 13 ஆம் அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 அ (1) உறுப்புரையின் மூலம் மேல், மத்திய, தென், வடமேல், வட மத்திய, ஊவா, கிழக்கு, வடக்கு, சபரகமுவ ஆகிய 09 மாகாண சபைகள் நிறுவப்பட்டதுடன், மாகாண சபைகளின் நிர்வாகம் ஆளுநரின் கீழ் காணப்படுவதுடன், மாகாண சபைகளின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக பிரதம செயலாளர் செயற்படுகின்றார். மாகாண சபையின் தலைவராக பிரதம அமைச்சர் செயற்படுவதுடன், பிரதம அமைச்சர் உள்ளடங்களாக 05 அமைச்சர்களை மாகாண சபை கொண்டுள்ளது.

மாகாண சபைகளால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், மாகாண சபையின் அரச சேவையில் உள்ளவர்களுக்குரிய விடயங்கள் மற்றும் அதனுடள் தொடர்புடைய அல்லது இணைந்த விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்காக 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அந்த அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(3) ஆம் உறுப்பரைக்கமைய மாகாண சபையொன்றின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாகாண சபையொன்றின் வருமானமாக அரச மானியங்கள், வரி வருமானம் மற்றும் வரி அல்லாத வருமானம் உள்ளடங்களாக பல்வேறு மூலங்களை கொண்டுள்ளது. நிதி ஆணைக்குழுவின் அமைப்புக் குறிப்பீடுகளின் பிரகாரம் ஒவ்வொரு மாகாண சபைக்கும் மத்திய அரசின் திறைசேரியிலிருந்து நிதியேற்பாடு வழங்கப்படுகின்றது. அவை அரசாங்க மானியம் ஆகும். அவை நீங்கலாக மாகாண சபையால் வரி மற்றும் வரியல்லாத வருமானமாக வருமானம் சேகரிக்கப்படுகின்றது. விசேடமாக முத்திரை ருமானம், வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் வருமானம் போன்ற வருமானங்கள் மாகாண சபையால் சேகரிக்கப்படும் பிரதான வருமானமாக குறிப்பிட முடியும். 09 மாகாண சபைகளால் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 458,566 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்த வருமானத்தினுள் வரி, வரி அல்லாத மற்றும் ஏனைய வருமானமாக ரூபா 83,566 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அரசாங்கத்தினால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 375,022 மில்லியன் அரசாங்க மானியங்களை கொண்டிருந்தது. அதற்கமைய 09 மாகாண சபைகளின் மொத்த வருமானத்தில் 82% அரசாங்க மானியங்களை கொண்டிருந்ததுடன், அனைத்து மாகாண சபைகளும் தொடர்ந்தும் திறைசேரியால் வழங்கப்படும் மானியங்களின் அடிப்படையில் தங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

தற்போது 09 மாகாண சபைகளின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்துள்ள காரணத்தால் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(உ) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய அந்த சபைகள் கலைக்கப்பட்டதாக கருதப்படும். அதற்கமைய சபையொன்று இல்லாது சபரகமுவ, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண சபைகள் 2017 ஆம் ஆண்டு முதலாகவும், வடமேல், மத்திய மற்றும் வடக்கு மாகாண சபைகள் 2018 ஆம் ஆண்டு முதலாகவும், மேல், ஊவா மற்றும் தென் மாகாண சபைகள் 2019 ஆம் ஆண்டு முதலாகவும் 1989 இன் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (தொடர்புடைய ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் (2)(1)(அ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு மாகாண சபைகளின் ஆளுநர்களால் நடாத்திச் செல்லப்படுகின்றன.

## 2. நிதிக்கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

மாகாண சபைகளால் ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல் தகவல்களின் பொழிப்புகளை உள்ளடக்கிய வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் உண்மையான மற்றும் நியாயமான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்டபில் சுயாதீனமான சான்றுபடுத்தலொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்படும். நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை வழங்குவதன் மூலம் இந்த சான்றிதழ் வழங்கப்படுகின்றது. மாகாண சபைகளின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றுக்களின் நியாயமான நிலைமைகள் வெளிப்படுத்தப்படுகின்றதா இல்லையா என்பது மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அல்லது தற்போது சர்வதேச பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இந்த நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றதா இல்லையா என்பது தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை கணக்காய்வு அபிப்பிராயத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இணக்கமின்மைகள் மற்றும் விடயப்பரப்பிலான மட்டுப்படுத்தல்கள் மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு ஆகியவற்றுக்கு இடையே ஏற்படும் இணக்கமின்மைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டதன் பின்னர் நான்கு முறைகளில் அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படுகின்றது. அவை பின்வருமாறு.

**முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அல்லது இணக்கமின்மைகள் அறிக்கையிடப்படாத போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அல்லது இணக்கமின்மைகள் அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும் அவை நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் வியாபித்திருக்காத போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**பாதகமான அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள பொருண்மையான / பிறழ் கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்களில் வியாபித்துள்ள போது பாதகமான கணக்காய்வு அபிபிராயம் வழங்கப்படும்.

**மறுப்பு அபிப்பிராயம்**

விடயப்பரப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் கணக்காய்வுக்கு கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் கணக்காய்வினால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாத பிறழ் கூற்றுகள் காணப்படும் என தீர்மானிக்கின்ற போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**மாகாண சபைகளின் அபிப்பிராயம் தொடர்பான தகவல்**

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக 09 மாகாண சபைகளுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| முனைப்பழியற்ற | - | - | - |
| முனைப்பழியுள்ள | 09 | 09 | 09 |
| பாதகமான | - | - | - |
| மறுப்பு | - | - | - |
| அபிப்பிராயம் இதுவரை தீர்மானிக்கப்படாத எண்ணிக்கை | - | - | - |
| நிதிக்கூற்றுக்கள் கிடைக்காத எண்ணிக்கை | - | - | - |

| | பெயர் | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|
| **1.** | கிழக்கு மாகாண சபை | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **2.** | வடமத்திய மாகாண சபை | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **3.** | வடமேல் மகாண சபை | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **4.** | சப்ரகமுவ மாகாண சபை | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **5.** | ஊவா மாகாண சபை | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **6.** | மத்திய மகாண சபை | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **7.** | **தென் மாகாண சபை** | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **8.** | மேல் மாகாண சபை | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **9.** | வடக்கு மாகாண சபை | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |

## 3. மாகாண சபை தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கிழக்கு மாகாண சபை

| | மொத்த சொத்து ரூபா. | மொத்த பொறுப்பு ரூபா. | உரிமையாண்மை ரூபா. | மிகை (பற்றாக்குறை) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 16,802,063,696 | 853,159,035 | 15,948,904,661 | 2,350,483,323 | முனைப்பழியுள்ளது |
| **2022** | 18,007,488,752 | 983,776,019 | 17,023,712,733 | 1,074,061,039 | முனைப்பழியுள்ளது |
| **2023** | 19,880,864,862 | 552,939,246 | 19,327,925,616 | 2,302,688,524 | முனைப்பழியுள்ளது |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையிடப்பட்ட வருடம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது பரிந்துரை | கணக்காய்வு உருவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | சமமான பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (BRDP) கீழ் மாகாண முதலமைச்சு ஏறாவூர், வீரமுனை மற்றும் சீதனாவெளி ஆகிய இடங்களில் 03 ஆடைத் தொழிற்சாலைகளை ரூபா 191.04 மில்லியன் கிரயத்தில் நிர்மாணித்து 2017 ஆம் ஆண்டில் பொது தனியார் பங்குடமை ஒப்பந்தத்தின் (PPPA) கீழ் ஒரு தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 440,000 மாதாந்த வாடகைக்கு வழங்கியிருந்தது. எனினும், வீரமுனி மற்றும் சீதனாவெளியில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் | 2021-1.5.3(ஆ) | ஆடை தொழிற்சாலைகளை பயன்படுத்துவதற்கும், நிலுவை வாடகையை அறவிடுவதற்கும் பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத சூழ்நிலை காரணமாக அந்த நடவடிக்கைகளில் பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி மற்றும் உபகரணங்களை வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் ஆடைத் தொழிற்சாலை தொடங்கப்படும் என தனியார் கம்பனி எமக்கு தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம் "சீதனவெளி" ஆடைத் தொழிற்சாலை 2022 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 36 தொழிலாளர்களுடன் | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 04 வருடங்களுக்கும் மேலாக குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2017 செப்தெம்பர் 01 முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 20.67 மில்லியன் நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை | | | இயங்கி வருகின்றது. | |
| 2 | 2011 முதல் 2013 வரையான காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள மல்வத்தை - சுறுப்போடை வீதியில் 02 பாலங்களை (0+360-2+920) அமைப்பது தொடர்பான முரண்பாடுகள் காரணமாக ரூபா 150 மில்லியன் பிணக்குத்தீர்த்தல் கொடுப்பனவு மீளாய்வாண்டில் மாகாண நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டது. எனினும் இக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டிருக்காததுடன் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் இதற்கான | 2021-1.5.4(ஆ) 2022-1.5.3 (உ) | முறையான விசாரணையை நடாத்தப்பட வேண்டியதுடன் இந்தக் கொடுக்கல்வாங்கல் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தால் அதற்குப் பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து அறவிடப்படுதல் வேண்டும். | அத் தொகையின் கொடுப்பனவிற்கு முன்னர் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பொது திறைசேரியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததென்பதை இது உறுதிப்படுத்துகிறது. நடுவர் 2014 பெப்ரவரி 12 இல் தனது தீர்மானத்தை வழங்கினார், தீர்மானம் அறிவிக்கப்பட்ட நேரத்தில் செயற்திட்டப் பணி முடிவடையும் நிலையில் இருந்ததுடன் தீர்மானத்தின் பிரகாரம் அது ஒப்பந்ததாரருக்கு சாதகமாக இருந்தது. எனவே, கிழக்கு மாகாண சபையானது உள்ளக மற்றும் | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

அங்கீகாரத்தை வழங்கியிருந்தார். மேலும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் இந்த முரண்பாடுகளை தீர்க்கும் வாய்ப்பை இழந்ததால் ஒப்பந்ததாரருக்கு ரூபா 11 மில்லியன் செலுத்தப்பட்டது. இதனால் ரூபா 150 மில்லியன் பிணக்குத்தீர்த்தல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ரூபா 139 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த பிணக்குத் தீர்த்தல் கொடுப்பனவை உரிய உத்தியோகத்தர்கள் செலுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டால், அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் திறைசேரியின் தற்போதைய நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த கொடுப்பனவுகள் திறைசேரியால் மேற்கொள்ளப்படும் என திறைசேரியின் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் பிரதம செயலாளருக்கு முகவரியிடப்பட்ட

உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நியமிக்கப்பட்ட அப்போதைய மேற்பார்வை ஆலோசகர்களின் பரிந்துரையுடன் ஒரு பிணக்குத் தீர்த்தலை ஆரம்பித்தது. 1995 இன் 11 ஆம் இலக்க பிணக்குத்தீர்த்தல் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் நடுவர் தெரிவுசெய்யப்பட்டார். உலக வங்கி நிதியிடப்பட்ட வீதிச் செயற்திட்டம் செயற்பாட்டில் இருந்தபோது பிணக்குத்தீர்த்தல் செயன்முறை தொடங்கப்பட்டதுடன் உலக வங்கி கடன் காலாவதியான பின்னர் செயற்திட்ட நிதியிலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது, மாகாண சபை நிதியிலிருந்து சட்டத்தரணியின் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2019 ஏப்ரல் 09 ஆம் திகதிய பீடி/ஜீபிஎஸ்/321/02/02 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்டது. எனினும், மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படாமல் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இந்த நடுவர் மன்ற நடைமுறையை மேற்கொள்வதற்காக சட்டத்தரணியின் கட்டணமாக ரூபா 6.6 மில்லியன் தொகையும் தாங்கிக்கொள்ளப்பட்டிருந்தது. | | | | |
| 3 | கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் சார்பில் மாகாண சபையின் வருமானப் பிரிவால் சேகரிக்கப்பட்ட ரூபா 274.74 மில்லியன் மற்றும் ரூபா 4.64 மில்லியன் தொகையான முறையே நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைத் தீர்வை என்பன உரிய உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பப்பட்டதை உறுதிப்படுத்தி வருடாந்த செயலாற்றல் அறிக்கை அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021-1.5.5(அ) | வருமானம் தொடர்பான தகவல்களை பயனர் புரிந்து கொள்ளும் வகையில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | பல்வேறு தரங்கள் தொடர்பான பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 19,418 ஆக காணப்பட்ட போதிலும் அதில் 30 சதவீதம் அல்லது 5,827 ஊழியர் வெற்றிடங்கள் 05 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்பட்டன. எனினும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2,607 உத்தியோகத்தர்கள் பல்வேறு பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | 2021-1.5.7(இ) | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிக பதவியணியினரை தேவையான மாகாணத்திற்கு இடமாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதி பிரதம செயலாளர் – ஆளணி மற்றும் பயிற்சியானது கிழக்கு மாகாண சபையின் அனைத்து நிறுவனங்களினதும் பதவியணி விபரங்களை நாளதுவரையாக்குவதற்கு மாத்திரமே பொறுப்பாகும். | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 5 | பாரம்பரிய உணவு ஊக்குவிப்பு நிலையத்தை நிறுவுவதற்கும் உபகரணங்களை வழங்குவதற்கும் ரூபா 7.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது 2020 ஒக்தோபர் 12 இல் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட போதிலும், கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் அந்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாததுடன் 2022 நவம்பர் 30 வரை விளைவற்றிருந்தது. | 2021-1.5.11(ஈ) | பாரம்பரிய உணவு ஊக்குவிப்பு நிலையத்திற்காக கொள் வனவு செய்யப்பட்ட கட்டிடம் மற்றும் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020.09.07 இல் "ஹெல பொஜுன்" ஐ திறப்பதற்காக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் எதிர்பாராதவாறு கொரோனா பெருந்தொற்றின் எதிர்பாராத சூழ்நிலை காரணமாக இயல்பு நிலைக்கு வரும் வரை இது தாமதமானது. எனினும் அது செயற்படுவதாகக் கூறப்பட்ட நேரத்தில், கலவை கலப்பான், ஈர கிரைண்டர் (Mixture blender, Wet grinder) மற்றும் | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | காஸ் குக்கர் (சிறியது) ஆகியவற்றுக்கான உத்தரவாத காலம் காலாவதியாகியிருந்தது. இந்த நிலைமை எமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருந்தது. | |
| 6 | கிழக்கு மாகாணத்தில் 17 வலயக் கல்வி அலுவலகங்கள் உள்ள நிலையில், அதில் 11 வலயக் கல்வி அலுவலகங்களில் 1,509 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ள போதிலும், 06 வலயக் கல்வி அலுவலகங்களுக்கு மேலதிகமாக 664 ஆசிரியர்களை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நியமித்திருந்தார். இதனால் கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் 18 பாடங்களுக்கு 100 ஆசிரியர்கள் மேலதிகமாக இருந்தனர். | 2021-1.5.14(ஏ) | மாகாணத்தினுள் உள்ள ஆசிரியர்களின் மேலதிகம் மற்றும் பற்றாக்குறையை சமநிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 7 | 2018 செப்தெம்பர் 01 முதல் 2021 மே 31 வரையான காலப்பகுதிக்கு அதிகாரசபையால் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட 38 ஊழியர்களின் சார்பாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பங்களிப்பை | 2021-1.5.19(ஈ)(iii)<br>2022-1.5.4(ஈ)(i) | தொழிலாளர் விதிகள் மற்றும் பிரமாணங்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 7 வருடங்களுக்கும் மேலாக நிலுவையாகவுள்ள பங்களிப்பை செலுத்துவதற்கு கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை (EPHA) திருகோணமலை தொழில் திணைக்களத்துடன் இவ் விடயம் தொடர்பாக | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலுத்தாததற்காக ரூபா 4.64 மில்லியன் தண்டப் பணம் விதிக்கப்பட்டது. மேலும், அதிகாரசபை மேற்படி பங்களிப்புக்கள் மற்றும் தண்டப்பணத்தை உரிய நிதியங்களுக்கு இதுவரை அனுப்பத் தவறியிருந்தது. | | | பேச்சுவார்த்தை நடாத்தியது. அதன் பிரகாரம், செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை கணிப்பிடுவதற்கு 7 ஆண்டுகளாக செலுத்திய சம்பள விபரங்களை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளனர். EPHA சம்பள விபரங்களைத் தயாரித்து 2022.03.04 இல் திருகோணமலை தொழில் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளது. திருகோணமலை தொழில் திணைக்களம் செலுத்த வேண்டிய தொகையை அறிவித்தவுடன் நிலுவைத் தொகை செலுத்தப்படும். எனினும், EPF மற்றும் ETF இற்கான பங்களிப்பு 2021 யூன் முதல் செலுத்தப்பட்டு வருகிறது. | |
| 8 | கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை மற்றும் சுற்றுலா பணியகத்திற்கு தேவையான பணியாளர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத நிலையில், அதற்கமைவாக 79 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையின்றி | 2021-15.19(அ)(iv), (ஆ)(iii), (இ) | ஆளணியை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | 22.02.2022 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் புதிய ஆளணியை அங்கீகாரத்திற்காக மீண்டும் சமர்ப்பிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் ஆளணிக்கு முகாமைத்துவ | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்காக ரூபா.26.77 மில்லியன் சம்பளம் மற்றும் புடிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கிழக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக 06 இரண்டாம் நிலை அதிகாரிகள் மற்றும் 35 முதன்மை மட்ட அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அந்த அதிகாரிகளுக்கு பணியாளர் ஊதியமாக ரூபா.9.06 மில்லியன் வழங்கப்பட்டது. | | | சேவை திணைக்களத்தின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் சேவைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக அதிகளவான பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் அத்துடன் முதலமைச்சின் முன்னாள் அமைச்சர் மற்றும் (கி.மா) ஆளுநரின் பரிந்துரையின் பேரில் இந்தப் பதவிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டன. | |
| 9 | கிழக்கு மாகாணத்தில் பல்வேறு திணைக்களங்கள், செயலகங்கள் மற்றும் அமைச்சுக்கள் என்பவற்றிற்கு உரியதான 81 காணிகள், 98 வாகனங்கள், 71 மோட்டார் சைக்கிள்கள், 97 அரச உத்தியோகபூர்வ இல்லங்கள், 28 அலுவலக கட்டிடங்கள், 02 வாடிவீடுகள் மற்றும் 51 நீர்பாசன | 2022-1.5.3(இ) | நிதியல்லா அனைத்து சொத்துக்களையும் தாமதமின்றி பெறுமானமிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | விவசாய வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை பெறுமானமிட தேவையான நடவடிக்கை எடுத்து வருவதுடன் அவை எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்படும். இதற்காக கோரிக்கை விடுத்து மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எமது தகவல்களின் பிரகாரம் 10 பட்டியற்படுத்தப்பட் | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குளங்களை மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்திருக்காததுடன் மேலே உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் வாடிவீடு அமைந்துள்ள காணிகளின் உறுதி, நிலஅளவை திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | | | இல்லங்கள், 20 குடும்ப உத்தியோகபூர்வ இல்லங்கள், 1 சிரேஸ்ட உத்தியோகத்தர் இல்லம் மேலும் ஆண்கள் மற்றும் பெண்கள் இருதரப்பினரிற்கும் 03 இல்லங்கள் உள்ளடங்களாக உத்தியோகபூர்வ இல்ல வகையின் கீழ் சமஅளவான 34 வளவுகள் எமது விடய எல்லைக்கு உரித்தாகின்றன. மேற்குறிப்பிட்ட வளவு பட்டியலிற்கிடையில் பட்டியலிடப்பட்ட 10 உத்தியோகபூர்வ இல்லங்கள் திணைக்களத்தினால் மதிப்பீட்டிற்குட்படுத்தி உள்ளதுடன் அதனை மதிப்பிடும் அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மதிப்பீட்டு செயன்முறைக்கு உட்பட்ட நிலஅளவை திட்டமொன்று உடமையில் வைத்துக் கொள்ள குறித்த பிரதேச செயலாளரிற்கு நாம் கடிதம் அனுப்பியுள்ளோம். | |
| 10 | சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைக்காக 57,786,846 ஆன தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை | 2022-1.5.3(ஈ) | ஒப்பந்ததாரரினால் ஊழியர் சேமலாப நிதி மற்றும்ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு | ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை பிரகாரம் செலுத்திய மொத்த சம்பளப் பெறுமதியின் மீது பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்பாக குறித்த சேவை வழங்கும் நிறுவனத்திற்கு மீளாய்வாண்டில் செலுத்தியிருந்த போதும், இந்த பங்களிப்புத் தொகை குறித்த நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதா என உறுதி செய்து கொள்ள எவ்வித சான்றுகளையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. மேலும் மேற்குறித்த பங்களிப்புத் தொகையின் மீது கணக்கிடப்பட்ட ரூபா 6,304,937 ஆன பெறுமதி சேர் வரி அந்த நிறுவனத்திற்கு முறையற்றதாக செலுத்தி இருந்த போதும் அம் முறையற்ற கொடுப்பனவை இது வரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | செலுத்தியுள்ளதற்கான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க மாகாணசபை வேண்டப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மீது செலுத்தியுள்ள பெறுமதி சேர் வரியை மீள் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்ததாரரால் இத் தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. | |
| 11 | 2018 முதல் 2022 ஆண்டு வரை கொடுப்பனவை புறுக்கனித்தவர்களிடம் இருந்து முத்திரைக் கட்டணத்தை அறவிடும் செயன்முறையை வினைத்திறனாக மேற்கொண்டிருக்காத போதும் மாகாண வருமான திணைக்களத்தினால் அதற்குரிய அலுவலர்களுக்கு | 2022-1.5.4(ஈ) | சொத்துக்களை மாற்றுபவரினால் முத்திரைக் கட்டணம் செலுத்துவதால் இலக்குகளை அடைந்து கொள்ள முடியும். எவ்வாறாயினும், தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்திலிருந்து பெற வேண்டிய சேமிப்பை வருமான அலுவலரினால் சேகரிக்கப்படும். | அலுவலக வருமான சேவை ஊழயர் எண்ணிக்கையில் சில பற்றாக்குறை / வெற்றிடம் காணப்பட்ட போதும் கடமைகளில் ஓரளவு முன்னேற்றம் காணப்படுவதுடன் முத்திரைக் கட்டணம் சேகரித்தல் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு பணம் மீண்டும் வழங்கும் போது அலுவலகம் | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

<table>
<tr><td></td><td>ஊக்குவிப்பு படியாக ரூபா 11,188,360 தொகை செலுத்தப்பட்டிருந்தது.</td><td></td><td>அதனால் மீண்டும் வரி சேகரிப்பதனை அதிகரிக்க பரிந்துரைக்கப்படுகின்றது.</td><td>பின்வருமாறு குத்தகை சேகரிக்கும் இலக்குகளை அடைந்துள்ளது.
<table>
<tr><th>Year</th><th>Target(Mn)</th><th>Achievement</th></tr>
<tr><td>2019</td><td>360</td><td>469,216,920.35</td></tr>
<tr><td>2020</td><td>337.5</td><td>449,580,571.00</td></tr>
<tr><td>2021</td><td>500</td><td>714,810,468.50</td></tr>
<tr><td>2022</td><td>550</td><td>828,752,253.58</td></tr>
</table>
அதன் பிரகாரம், ஆளணியினரிற்கு அவர்களின் ஊக்குவிப்பை பெற்றுக் கொள்ள உரிமை உள்ளதுடன், அதனூடாக எதிர்காலத்திலும் திணைக்களத்தின் இலக்குகளை அடைந்து கொள்ள அனைத்து ஆனணியினரின் வேலை செய்யும் இயலுமை மேம்படுத்தப்படும்.</td><td></td></tr>
<tr><td>12</td><td>இயற்கை சேதனை பசளை உற்பத்திற்காக விவசாய திணைக்களத்தினால் 2021 ஆண்டின் போது ரூபா 35,348,600 ஆன பெறுமதிக்கு 60 புல் வெட்டும் இயந்திரங்களை கொள்வனவு செய்து கிழக்கு மாகாணத்தில் 60 நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2023 ஏப்பிரல் 30 கணக்காய்வு திகதி வரையும் அவ் இயந்திரங்களை செயற்படுத்துவதற்கா</td><td>2022-1.5.8(ஆ)</td><td>கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள தேவையான மேலதிக உபகரணங்களை கொள்வனவு செய்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.</td><td>நிலவிய அரச சேதன விவசாயக் கொள்கையை கைவிட முன்னர் அறிவிக்கப்பட்ட இந்த இயந்திரத்திற்காக கமநல சமூகத்திலிருந்து கேள்வி குறைவடைந்தது. அதனால் இந்த இயந்திர உபகரணங்கள் 50 சதவீதம் பயன்படுத்தப்பட்டது. அவ்வாறான நிலைமையின் கீழ் பயன்பாட்டிற்கு எடுக்காத இயந்திர உபகரணங்களை மீண்டும் மாகாண</td><td>குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | க நான்கு சில்லு டெக்டர் ஒன்று இல்லாததனால் இயந்திரங்களின் 50 சதவீதம் எதிர்பார்த்த வேலைக்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | | | சபைக்கு பெற்றுக் கொண்டு அந்த இயந்திரங்களின் பெறுமதியில் 50 சதவீதத்தை கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்திற்கு செலுத்தும் மற்றும் எஞ்சிய 50 சதவீதத்தை மாதாந்த தவணைகளாக செலுத்தும் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | |
| 13 | மாகாணத்தில வெற்றிகரமாக செயற்படும் கமநல சமூகத்திற்கு பரிசில் வழங்கும் நோக்கில் மாகாண விவசாய திணைக்களத்தினால் ரொடர்வேடர் உடன்கூடிய 32 கைடெக்கடர்களை ரூபா 14,816,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2023 ஏப்ரல் 30 கணக்காய்வு திகதி வரையும் வெற்றிகரமான கமநல சமூகத்தை தெரிவு செய்யும் செயற்பாடுகளை மேற்கொள்ள அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அந்த டெக்டர்கள் 01 ஆண்டிற்கு அதிக காலமாக விளைவற்று நிலவின. | 2022-1.5.8(இ) | ஒதுக்கிய நிதியத்திலிருந்து உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதனூடாக கமநல சங்கங்களை ஊக்குவிக்க திட்டமிட்டிருந்த போதும் ஈருருளி உளவியந்திரம் கிடைக்கும் போது பெரும்போகம் முடிவடைந்திருந்தது. அதனால் திட்மிட்டவாறு இவ் வேலைகளை கொண்டு செல்ல முடியவில்லை. | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | 2022 ஆண்டினுள் விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ரூபா 30 மில்லியன் தொகை விவசாய திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள போதும், அவற்றில் ரூபா 21,934,350 தொகை 2023 ஏப்ரல் 17 திகதி வரையும் மேற்குறித்த பணிக்காக பயன்படுத்தி இருக்கவில்லை. | 2022-1.5.9(அ) | இந் நிதியத்தை குறித்தொதுக்கிய நோக்கத்திற்காக காலரீதியாக ஈடுபடுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கொள்வனவிற்காக விலை கோரி கொள்வனவுக் கட்டளையும் விநியோகிக்கப்பட்டது. எவ்வாறாயினும் covid தொற்று மற்றும் நாட்டில் நிலவிய டொலர் பற்றாக்குறை காரணமாக மற்றும் பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்ததன் மீது குறித்த வழங்குனரிற்கு பொருட்களை இறக்குமதி செய்து வழங்க இயலாது போனது. | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 15 | 2018 முதல் 2022 ஆண்டு வரையான காலத்தினுள் மாகாண உயிரியல் மருத்துவ பொறியியல் அலகிற்கு கிடைத்திருந்த ரூபா 25,461,600 பெறுமதியான 51 மருத்துவ உபகரணங்கள் திருத்த வேலைகளிற்காக சேவை வழங்குனரிற்கு விநியோகித்திருந்த போதும், இவ் அறிக்கை விநியோகிக்கும் திகதி வரையும் அவ்வுபகரணங்களின் திருத்த வேலைகளை பூர்த்தி செய்து மீண்டும் பெற்றிருக்கவில்லை. | 2022-1.5.11(உ) | சொத்துக்களை செயலற்று வைத்துக் கொள்ளாது ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். | உதிரிப்பாகங்கள் இல்லாமை மற்றும் உதிரிப்பாகங்களின் அதிகரித்த விலை காரணமாக இத் தாமதத்திற்கு காரணமாகவுள்ளது. பகுதிகளை மாற்றீடு செய்து ஒன்றை திருத்த முடியமாகையால் சில போது அரைவாசி பழுதடைந்த வரும் வரை உபகரணத்தை வைத்துக் கொள்ளப்படும். தற்போது திருத்திய அனைத்து உபகரணங்களும் மீண்டும் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 16 | கணக்காய்விற்கு வழங்கியிருந்த தகவல்கள் பிரகாரம் | 2022-1.5.11(i) | இந்த வாகனங்களை திருத்தி | இந்த வாகனங்களை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 40,950,000 பெறுமதியான 06 வாகனங்கள் மற்றும் குறித்த பெறுமதியற்ற 05 வாகனங்கள் உள்ளிட்ட 11 வாகனங்கள் 05 வருடங்களுக்கு அதிகமான பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் திருத்த முடியுமான நிலையில் கீழ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 2023 ஏப்ரல் 24 ஆம் கணக்காய்வு திகதி வரையும் அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுக்கப்பட்டு வருகின்றன. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 17 | பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 13 அரச காணிகளிலிருந்து ரூபா 245,513,346 ஆன வரி 01 முதல் 16 வருடகாலத்திற்கிடையிலான காலத்தினுள் நிலுவை தொகையாக காணப்பட்டது. எவ்வாறாயினும், அந்நிலுவை தொகை அறவிடுவதற்கு 2022 திசெம்பர் 31 திகதி வரையும் காணி நிருவாக திணைக்களத்தினால் உரிய செயற்பாடு எடுத்திருக்கவிலலை. | 2022-1.5.13 | நிலுவை மீதி விரைவில் குறித்த பிரதேச செயலகமிடமிருந்து அறவிட வேண்டும். | ரூபா 245.51 மில்லியனான அளவில் ஆண்டு 1 முதல் 3 வரை காலத்திற்குரிய நிலுவை தொகை அளவான ரூபா 19.5 மில்லியனான தொகையை நடைமுறை ஆண்டில் அறவிட முடியுமாவதுடன் இந்த நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது மாவட்ட இணைப்பு குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 3 ஆண்டுகள் முதல் 16 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய | நிலுவைப்பணம் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எஞ்சிய நிலுவைத் தொகை ரூபா 225.9 மில்லியனிற்குரிய வாடகை கொள்வனவு இரத்துச் செய்வதற்கு டுஊபு இற்கு அனுப்பப்பட்டுள்ளது. காணி கட்டளைச் சட்ட இலக்கம் 86.1 பந்தி பிரகாரம் செலுத்தாத குத்தகை நிலுவைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பிரதேச செயலாளரின் பொறுப்பாகும். அவ்வாறே எம்மால் குத்தகைதாரருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது அக் குத்தகை தொகையை செலுத்துமாறாகும். அதன் பிரகாரம் 2023.07.18 திகதி வரை ரூபா 7,304,439.60 தொகை அறவிடப்பட்டது. | |
| 18 | இந்த மாகாணத்தில் 48 சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2016 மார்ச் 18 இன் 1985/73 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் IV(அ) பகுதியின் பிரகாரம் 10 முக்கிய பணிகளைச் செய்வதற்கு | 2023-2(அ) | பிரதான 10 தொழிற்பாடுகளை நிறைவேற்றி தனது வருமானத்தினை உழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பெடுக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அல்லது கடந்த 05 ஆண்டுகளில் அதன் சொந்த வருமானத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை பணியகத்தின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக கூட்டுமொத்தம் ரூபா 128.40 மில்லியன் மாகாண நிதியக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது | | | | |
| 19 | ரூபா 88.06 மில்லியன் கூட்டுமொத்தமான 04 லொறிகள் மற்றும் 18 இயந்திரங்கள் 02 முதல் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பல்வேறு அலுவலகங்களில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு குறித்துரைத்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காது விளைவற்றிருந்தன. | 2023-1.5.10 | குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வாடகைக் கட்டணத்தை அதிகரித்து வாடகைக்கு விடப்படும். | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 20 | சத்துணவு நிகழ்ச்சித்திட்டம், மாகாணக் குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியப் பணிகள், பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டப் | 2023-1.5.8(உ) | கட்டுநிதியானது குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது என கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பணிகள் மற்றும் யுனிசெவ்வின் செயற்றிட்டப் பணிகள் ஆகியவற்றுக்காக மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மீளாய்வாண்டு மற்றும் நேர் முன்னைய ஆண்டுகளில் பெறப்பட்டிருந்த ரூபா 96.97 மில்லியன் கூட்டுமொத்தமான கட்டுநிதி குறித்துரைக்கப்பட்ட செயற்றிட்டப் பணிகளிற்காக பயன்படுத்தப்படாமல் அரசாங்க உத்தியோகத்தரின் முற்பணக் கொடுப்பனவிற்காகவும் பொது வைப்பு மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. | | | | | |
| 21 | மாகாண விவசாய அமைச்சினால் சேதன உரம் தயாரிக்கும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 17.67 மில்லியன் கூட்டுமொத்தமான 30 நிலையான துண்டாக்கும் இயந்திரங்களினை (static shredder machines) இயக்குவதற்கு தேவையான நான்கு சக்கர உழவு இயந்திரம் கிடைத்திருக்காமையி | 2023- | 1.5.5 | பயன்பாட்டிற்கான சரியான திட்டம் / சாத்தியக்கூறு ஆய்வுடன் கையகப்படுத்தல் செய்யப்பட வேண்டும் | இந்த சொத்துக்களை வேறு நிறுவனங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | குறிப்பிடப்பட்ட பிரச்சனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

னால் அவற்றை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காது 02 ஆண்டுகளிற்கு மேல் விளைவற்றிருந்தன.

## 3.2 வடமத்திய மாகாண சபை

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | மிகை/பற்றாக்குறை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| 2021 | 31,396,165,220 | 1,738,330,135 | 29,657,835,085 | 245,732,609 | முனைப்பழியுள்ள |
| 2022 | 31,996,870,784 | 1,000,469,385 | 30,996,401,399 | (135,926,957) | முனைப்பழியுள்ள |
| 2023 | 35,864,257,855 | 1,118,216,965 | 34,746,040,890 | 1,737,902,832 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01. | அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை கருத்திட்ட ஏற்பாட்டின் மீது மேற்கொண்ட நிர்மாணத்திற்காக அளவை பத்திரம், வேலை பூர்த்தி அறிக்கை மற்றும் பட்டியல் கொடுப்பனவு பொழிப்பு உள்ளிட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகளின் மீது ஒரு சந்தர்ப்பத்தில் மற்றும் அவ் ஆவணங்களின் நிழற் பிரதிகளின் மீது இன்னுமொறு முறையாக வடமத்திய மாகாண பிரதம அமைச்சினால் இரட்டை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு மாதிரி பரிசோதனையின் போது | 2021 | மொத்த தொகையையும் அறவிட மற்றும் இரட்டை கொடுப்பனவு செய்த அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரட்டைக் கொடுப்பனவு மேற்கொண்ட உத்தியோகத்தர்களை இடம் மாற்றுதல் மற்றும் புதிய உத்தியோகத்தர்களுக்காக ஆலோசனை வழங்குதல். | முழுமையாக அறவிடப்பட்டிருந்த போதிலும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் 2020 பெப்ரவரி 26 அளவில் இரட்டை கொடுப்பனவு மூலம் மோசடியாக பெற்றிருந்த நிதி ரூபா 8,608,290 ஆகும். இம் மொத்த தொகையையும் அறவிட மற்றும் இரட்டை கொடுப்பனவு செய்த அலுவலர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. | | | | |
| 02. | அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை கருத்திட்ட ஏற்பாட்டை பயன்படுத்தி செயற்படுத்தியிருந்த உடன்படிக்கை தொகை ரூபா 21,946,785 ஆன 02 நிர்மாண ஒப்பந்தங்களிற்காக ரூபா 9,066,775 ஆன வேலை ஆரம்ப முற்பணம் வடமத்திய பிரதம அமைச்சு 2016 ஆண்டு செலுத்தியுள்ள போதும் உடன்படிக்கை பிரகாரம வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்வில்லை. அவ்வாறாயினும் அம் முற்பணத்தை அறவிட மற்றும் உடன்படிக்கை பிரகாரம் வேலைகளை | 2021 | வேலை ஆரம்ப முற்பணத்தை அறவிட மற்றும் உடன்படிக்கை பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்யாத ஒப்பந்ததாரர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதுகாப்பு தொடர்பாக குறித்துரைத்த பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஒரு ஒப்பந்தத்திற்காக ரூபா 3,193,462 அறவிட வேண்டியிருந்ததுடன் பிணை முறிகள் காலவதியாவதற்கு இடமளித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பூர்த்தி செய்யாத ஒப்பந்ததாரர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 03. | வடமத்திய மாகாணத்தில் சுற்றுலாதுறையின் மேம்பாட்டிற்காக தொழிநுட்ப தரத்திலான அறிக்கை ரீதியான வீடியோ வேலைத் திட்டத்தை தயாரித்தல், கவர்ச்சியான படங்களுடன் கூடிய தரத்திலான புத்தகமொன்றை வடிவமைத்தல் மற்றும் முறையான தகவல்களைக் கொண்ட இணையத்தளம் ஒன்றை வடிவமைப்பதற்காக பிரதான செயலாளரினால் தனியார் வழங்குனர் ஒருவருடன் ரூபா 15,797,500 ஆன தொகையிற்கு 2016 மார்ச் 23 திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்பட்ட தொகையிலிருந்து ரூபா 12,144,500 தொகை 2016 திசெம்பர் 26 திகதியளவில் செலுத்தியிருந்த போதும் 2021 மே 10 திகதியளவிலும் வழங்குனரால் இக் கருத்திட்டத்தை பூர்த்தி செய்து வடமத்திய மாகாணத்தில் சுற்றுலாதுறை மேம்பாட்டிற்காக | 2021 | வீடியோ வேலைத்திட்டம், கவர்ச்சியான படங்களுடன் கூடிய தரத்திலான புத்தகம் மற்றும் முறையான தகவல்களைக் கொண்ட இணையத்தளத்தை வழங்குனரால் வழங்குவதற்கு முன்னர் கொடுப்பனவு செய்த அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது இந்த மாகாண சபையில் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் உரிய திட்டத்துடனும், மேற்பார்வையுடனும் மற்றும் எந்த ஒரு முறைகேடுகள் இடம்பெறாத வகையிலும் அமுல்படுத்த வேண்டும் என மாகாண சபையின் பிரதான கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் போது சகல உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் உரிய கடமைகளை கையளித்த உத்தியோகத்தர்கள் சிலருக்கு குற்றப்பத்திரிகை விநியோகித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானதாக இருந்ததாக பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயன்படுத்த முடியுமான வகையில் மாகாண சபைக்கு ஒப்படைத்திருக்க வில்லை. | | | | |
| 04. | 2018 ஆண்டு முதல் செயற்படுத்த இருந்த பந்தாண்டு நிலைபேறான கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்காக ரூபா 27,606,176 ஆன தொகை செலவிடப்பட்ட போதும் 2022 ஒக்டோபர் 17 திகதியளவிலும் அந்த திட்டத்தை தயாரித்து இருக்கவில்லை. | 2021 | நிலைபேறான கூட்டிணைந்த அபிவிருத்தி நோக்கத்தை அடைந்து கொள்ள இத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். | தற்போது எந்த ஒரு முறைகேடுகளும் இடம் பெறாத வகையில் செயற்திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என மாகாண சபையின் பிரதான கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் போது சகல உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பத்து வருட நிலைபேறான ஒன்றிணைத்தல் அபிவிருத்தித் திட்டம் தயாரித்து பூர்த்தி செய்யப்பட வில்லை. |
| 05. | முகவராண்மையின் வாகனங்கள் பழுதுபார்க்கும் பிரிவினால் மீளாய்வாண்டில் ரூபா 22,702,451 உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் போட்டியாளர் விலை கோரப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2021 | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாகனங்களைப் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மற்றும் சேவைப் பிரிவுகளுக்காக தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் இலகு உராய்வு எண்ணெய் பொருட்களை கொள்வனவு செய்தல் குறித்துரைத்த பெறுகை திட்டத்தைப் பின்பற்றி உரிய கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உத்தேசிக்கப்பட்ட பெறுகை முறைமையை பின்பற்றி அமுல்படுத்தியிருக்க வில்லை. |
| 06. | வட மத்திய மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள | 2021 | உரிய ஆசிரியர்கள் பாடசாலைக்கு நியமிக்கும் போதும், | ஆசிரியர் / அதிபர் சேவையில் அறிக்கையிடாத உத்தியோகத்தர்கள் | மீண்டும் சேவைக்கு அறிக்கை இடப்பட்டமை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களில் 63 பேர்கள் 02 மாதங்கள் முதல் 32 வருடங்கள் வரையிலான கால வீச்சில் இருந்து ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களில் 61 பேர்களுக்காக விடுவிக்கப்பட்ட திகதியில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், உரிய உத்தியோகத்தரின் சேவையாற்றல் அறிக்கை, சேவைக்கு அறிக்கையிடல், வருகை மற்றும் வெளிச்செல்லல், விடுமுறை போன்றவை தொடர்பான தகவல்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட படிகள் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தாமல் வலய கல்வி அலுவலகத்தால் அந்த உத்தியோகத்தர்களுக்கு உரியதாக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகளின் கூட்டுமொத்தம் ரூபா 257,490,892 ஆகும். | | சம்பளத்தை செலுத்தும் போதும் போதியளவான உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். | சேவையை விட்டுச் செல்லும் கடிதம் விநியோகிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அல்லது சேவையை விட்டுச் சென்றமைக்கான கடிதம் விநியோகிக்கப் பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. |
| 07. | உத்தியோகத்தரின் தகுதிகாண் காலம் முடிவடையும் போது அவர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கே | 2022 | உரிய ஆசிரியர்களை விரைவாக நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை | உரிய ஆசிரியர்களை விரைவாக நிரந்தரமாக்குவதற்கு தேவையான | ஆசிரியர் சேவைக்கு நியமனம் கிடைத்த ஆசிரியர்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கா அல்லது அவர்களின் தகுதிகாண் காலத்தை நீடிப்பதற்கோ அல்லது தகுதிகாண் நியமனத்தை முடிவுறுத்துவதற்கோ திணைக்கள தலைவர் கண்காணிக்க வேண்டியிருந்த போதிலும், வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் 1989 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஆசிரிய சேவைக்கு நியமிக்கப்பட்ட 313 ஆசிரியர் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | எடுத்தல் வேண்டும் . | நடவடிக்கைகளை எடுப்பதற்காக சில உத்தியோகத்தர்கள் வலய அலுவலகங்களுக்கு சென்று பிரச்சனைகளுடனான கோவைகளைத் தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் நிரந்தரப்படுத்தும் நடவடிக்கைகள் செயற்திறனாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | போலயான சான்றிதழ் சமர்ப்பித்த 26 பேர்களின் ஆகக் குறைந்த தகைமை காணப்படாத 14 பேர்கள் மற்றும் ஏனைய பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 23 ஆசிரியர்களாக 63 ஆசிரியர்களின் சேவை முடிவுறுத்தப்படாமல் மேலும் ஆசிரியர் சேவையில் தொடர்ந்தும் அமர்த்தப்பட்டிருந்தனர். |
| 08. | பொலன்னறுவை பொது சந்தைக் கட்டிடத் தொகுதியின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்யும் செயற்திட்டம் 2019 ஒக்டோபர் 15 ஆம் திகதி பூர்த்தி செய்து கையளிக்கப்பட்டதுடன் அந்த நிர்மாணங்களில் காணப்பட்ட குறைபாடுகளைக் கவனத்திற் கொள்ளாமல் ரூபா 16,745,178 இறுதி பட்டியல் செலுத்தப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.6 பந்தியின் பிரகாரம் | 2023 | நிர்மாணங்களில் காணப்பட்ட குறைபாடுகளை விரைவாக சரிசெய்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் நிறுத்திவைத்தல் பணத்தை பெற்ற பிணை முறியின் காலம் முடிவடைவதற்கு இடமளித்தல் உத்தியோகத்தரிடமிருந்து அந்தப் பணம் அறவிடப்படல் வேண்டும். | தற்போது இவ்வாறான அவதானிப்புக்களை குறைப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | முற்பண காப்புறுதி காலாவதியாகியமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் யார் எனப் பரீட்சிப்பதற்காக ஆரம்ப விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. உரிய கட்டிடம் பொலன்னறுவை மாநகர சபைக்கு முறையான பிரகாரம் கையளிப்பதற்காக ஐந்து நபர்களை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒப்பந்தத்திற்காக நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 6,655,599 நிறுத்திவைத்தல் பணம், வணிக வங்கி பிணை முறியின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட போதும் செயற்திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகள் கையில் நிறுத்திவைக்கப்பட்ட காலத்திலும் பூர்த்திசெய்யப்படா திருந்ததுடன் உரிய வங்கி பிணையின் காலமும் காலாவதியாகியிருந் ததன் காரணமாக அந்த பணத்தில் இருந்து குறைபாடுகளை சரிசெய்வதற்கும் தவறியிருந்தது. | | | | உடைய குழு ஒன்று நியமிக்கப்பட்டு ள்ளது. |
| 09. | ஹபரண சுற்றுலா தகவல் நிலையத்தில் நிர்மாணத்திற்காக ரூபா 598,013,000 தொகையில் உடன்படிக்கை செய்த கம்பனி செயற்திட்டத்தில் அரைவாசியை பூர்த்தி செய்து ரூபா 369,171,165 கொடுப்பனவைப் பெற்று செயற்திட்டத்தை நிறுத்தி இருந்தது. இந்த செயற் திட்டத்திற்காக ரூபா 119,602,600 வேலை ஆரம்பித்தல் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நிர்மாணம் | 2023 | வழங்கப்பட்ட மிகைப் நிதியில் மேலும் அறவிடவேண்டிய நிதியை அறவிடுவதற்கும், ஆக்கபூர்வமான செயற்திட்டமாக அமுல்படுத்துவதற் கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தற்போது இவ்வாறான அவதானிப்புக்களைக் குறைப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிறுத்தப்பட்டுள் ள இந்த செயற் திட்டத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்தல் தொடர்பாக கலந்துரையாட ல் மாத்திரம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறுத்தப்பட்டு 06 வருடங்களைக் கடந்திருந்த போதும் வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 45,171,484 ஆக இருந்தது.<br>முற்பணத்திற்காக பெறப்பட்ட முற்பண காப்புறுதி பிணை காலாவதியாகி இருந்தது.<br>செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைமைக்கு உட்படுத்து வதற்கு தவறியதன் காரணமக இதுவரை செலவிடப்பட்ட ரூபா 369,171,165 தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது.<br>ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த 12 ஆவது உப இடைக்காலப் பட்டியலின் வேலைத் தளத்தில் உள்ள நிர்மாண பொருட்களுக்காக ரூபா 11,611,385 செலுத்தப்பட்டிருந்த போதும் 2023 திசெம்பர் 15 ஆம் திகதி வரையிலும் அவ்வாறான பெறுமதிக்குரிய பொருட்கள் வேலைத்தளத்தில் காணப்படவில்லை. | | | | |
| 10. | உள்ளூராட்சி திணைக்களத்தால் சக்கர நாற்காலிகள் கொள்வனவு | 2023 | பெறுகை செயற்பாடுகளின் போது இடம் பெற்ற மோசடிகளை | தற்போது இவ்வாறான அவதானிப்புக்களை குறைப்பதற்காக | இது தொடர்பாக கண்டறிந்து கொள்வதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்வதற்காக மேற்கொள்ள பெறுகை செயற்பாடுகளின் போது தகைமை பெற்ற ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த கேள்வி ஆவணங்களின் மாதிரிகளில் உள்ளடக்கப்பட்ட ஆவணங்கள் பெறுகை செயற்பாடுகள் தொடர்பாக ஏதாவது தரப்பினரால் அகற்றப்பட்டு அந்தக் கேள்வி, கேள்வி மதிப்பீட்டு செயற்பாடுகளிலிருந்து நீக்கப்பட்டு அதனை விட ரூபா 256,100 அதிக கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. | | இனங் காண்பதற்காக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அநுராதபுரம் மாநகர சபையின் கணக்காளரின் தலைமையில் குழு ஒன்று 2024 செப்தெம்பர் 01 ஆந் திகதி நியமிக்கப்பட்டுள்ளது. |
| 11. | 2017 ஆம் ஆண்டின் போது பளுகஸ்தமன மகா வித்தியாலயத்திற்காக கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 542,019,300 ஆன தொகை நிர்மாணக் கம்பனியுடன் உடன்படிக்கை செய்து ரூபா 100,000,000 முற்பணத் தொகை ஒப்பந்த காரருக்கு வழங்கப்பட்ட போதும் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போதே | 2023 | நிதி ஏற்பாடின்றி உடன்படிக்கை செய்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் நிலுவை முற்பணத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது இவ்வாறான அவதானிப்புக்களை குறைப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆரம்ப விசாரணைக் குழு ஒன்று நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிர்மாணங்கள் நிறுத்தி செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 100,000,000 முற்பணக் காப்புறுதி காலாவதியாகியிருந்ததுடன் வழங்கப்பட்ட முற்பணத் தொகையை மீள அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 12. | வடமத்திய மாகாணத்தில் 258 பாடசாலைகளுக்குரிய தரம்பெற்ற உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமல் ஆசிரியர் சேவைக்குரிய ஆசிரியர்கள் அதிபர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பதிற்கடமைப் பதவி வழங்கப்பட்டிருந்த போதும் 397 பாடசாலைகளில் தரம்பெற்ற அதிபர்களில் பிரதி அதிபர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. | 2023 | அதிபர் சேவைக்கு சமமான ஆசிரியர்களுக்காக அதிபர் சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்காக அதிபர் பதவி வழங்கப்படல் வேண்டும். | அதிபர் சேவைக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. | மிகையான அதிபர்கள் நீண்ட காலமாக பதிற்கடைமை அதிபர்களாக இருக்கின்ற பாடசாலைகள் தவிர ஏனைய பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| 13. | சுஹூறு நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் நிதி ஏற்பாடுகளில் அமுல்படுத்தப்பட்ட நிர்மாணங்கள் உப செயற்திட்டத்தின் கீழ் பெறுமதி ரூபா 16,731,899 இற்கு | 2023 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது இவ்வாறான அவதானிப்புக்களை குறைப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிர்மாண உப செயற்திட்டங்கள் இரண்டில் இருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 1,268,976 ஆக இருந்ததுடன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்குரிய பணிகளை நிறைவேற்றுதல் கைவிடப்பட்டிருந்ததுடன் 03 ஒப்பந்தகாரர்களுக்காக செலுத்தப்பட்டிருந்த வேலை ஆரம்பித்தல் முற்பணம் செய்யப்பட்டிருந்த 03 வேலை ஆரம்பிப்பு முற்பணங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 3,575,068 இனை மீள அறவிடுவதற்கு முடியாதிருந்தது. அந்த ஒப்பந்தத்திற்காக பெறப்பட்ட ரூபா 3,575,068 முற்பண பிணைமுறி மற்றும் ரூபா 462,281 ஆன செயலாற்றல் பிணை முறியின் காலம் முடிவடைவதற்கு முன்னர் பணமாக்கி பெறுகை நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டம் தீர்க்கப் பட்டிருக்கவில்லை. | | | | வேலை ஆரம்பித்தல் முற்பணம் பிணை முறி மற்றும் செயலாற்றல் முற்பணப் பிணைமுறிகள் காலாவதியாவதற்கு முன் பணமாக்கிக் கொள்ளாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| 14. | முழுமையான சிறுநீரக நோய் பரிசோதனைக்குரிய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் விஷேட தரவு தயாரிக்கும் மென்பொருள் (LIS) முறைமை ஸ்தாபிப்பதற்காக சேகரிக்கப்பட்ட ரூபா 3,000,000 ஆன 12 | 2023 | தரவு தயாரிக்கும் முறைமையை ஸ்தாபித்து சேவைகளை செயற்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது இவ்வாறான அவதானிப்புக்களை குறைப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுகாதார மருத்துவ அலுவலகங்கள் 03 மாத்திரம் தரவு தயாரிக்கும் முறைமை அமுல்படுத்தியிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Laptop கணனிகள், 12 அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் அதற்குரிய 12 துணைப்பாகங்கள் என்பன சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 05 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் அந்த தரவு தயாரித்தல் முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 15. | அநுராதபுரம் பிரதேச சுகாதார சேவை அதிகாரப் பிரதேசத்தில் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக இலங்கை திரிப்போஷா கம்பனியிலிருந்து பெறப்பட்ட பெறுமதி ரூபா 26,065,432 ஆன திரிப்போஷாக்களின் பெறுமதி ரூபா 1,094,657 ஆன 30 திரிப்போஷா பக்கற்றுக்கள் வீதம் அடங்கியுள்ள 77 உறைகள் தொலைந்துபோய் இருந்ததுடன் ரூபா 23,497,597 ஆன 30 திரிப்போஷா பக்கற்றுக்கள் அடங்கியுள்ள 1750 உறைகள் அநுராதபுரம் புகையிரத நிலைய பெட்டிகளில் | 2023 | சுகாதார அமைச்சின் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் இடமாற்றப்பட்டு திரிபோசா பகிர்ந்தளிக்கும் மேற்பார்வை நடவடிக்கைகள் நேரடியாக கணக்காளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனையின் மூலம் மேற்கொண்டு நட்டத்தை இனங்கண்டு அறிக்கை இடாதிருந்ததுடன் செலுத்த வேண்டிய தாமதக் கட்டணத்திற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (Wagon) 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் விடுவிக்கப்படாமல் வைப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. புகையிரத பெட்டிகளில் திரிப்போஷா காணப்பட்ட காலத்தில் காணப்பட்ட 45 செல்சியல் வெப்பநிலையில் திரிப்போஷாக்களின் தரத்தன்மை குறைவடையும் ஆபத்து காணப்பட்டது. பெறுமதி ரூபா 26,065,432 ஆன திரிப்போஷா இருப்புக்கள் நலனாளிகளுக்கு பெற்றுக்கொள்வதற்கு காலாவதியாவதற்கு அண்மித்து காணப்பட்டது. இந்த திரிப்போஷா இருப்புக்கள் குறித்துரைத்த காலப்பகுதியில் புகையிரதப் பெட்டிகளில் இருந்து அகற்றப்படாமையினால் தாமதக் கட்டணமாக ரூபா 1,080,000 தொகை புகையிரத திணைக்களத்திற்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | | |
| 16. | அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 43 மில்லியன் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் | 2023 | சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படல் வேண்டும். | கடன் வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளது. | விநியோகிக்கப் பட்ட கடன் தொகையில் ரூபா 27.65 மில்லியன் தொகை மேலும் |

வடமத்திய மாகாண கூட்டுறவுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது டன் அந்த தொகையில் வ/ப அநுராபுர மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2021 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 33 மில்லியன் கடன் தொகையில் 2024 பெப்ரவரி 26 ஆம் திகதி வரையிலும் ரூபா 27.65 மில்லியன் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த சங்கங்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் பணம் அறவிடாமையின் காரணமாக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் கடன் வழங்கும் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு மிகுதி பணம் ரூபா 15.35 மில்லியன் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டதன் காரணமாக மேற் கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமான ‘‘திறந்த சந்தையில் அரிசி பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் அரிசி விலையினை கட்டுப்படுத்துதல்’’ என்ற நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.

அறவிடபடாதிருந்ததுடன் மிகுதித் தொகையில் ரூபா 10.35 மில்லியன் 2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

### 3.3 வடமேல் மகாண சபை

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமையாண்மை ரூபா | அதிகரிப்பு (குறைவு) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| 2021 | 87,868,899,536 | 1,112,223,415 | 86,756,676,121 | 3,371,051,580 | முனைப்பழியுள்ள் |
| 2022 | 96,692,986,297 | 963,657,130 | 95,729,329,166 | 2,644,962,777 | முனைப்பழியுள்ள் |
| 2023 | 106,379,572,843 | 984,335,452 | 105,395,237,390 | 3,226,929,640 | முனைப்பழியுள்ள் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கை யிட்ட ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கையிடல் திகதியிலுள்ள வாறான பரிந்துரைகளின் அமுல்படுத்தல் நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | ஆளுநர் அலுவலகத்திற்கு சொந்தமானதாக காணப்பட்ட ரூபா 13,790,000 என்ற மேசிடன்ச் கார் 2013 ஆம் ஆண்டில் வடமேல் மாகாண பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டதுடன் உரித்து முறைகாக கையளிக்கப்படாதிருந்ததுடன் அந்த வாகனம் மாகாண சபை வளவில் செயற்பாடற்று பாதுகாப்பற்ற நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2023 | சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாக பயன்படுத்துவதை பயன்படுத்தாது இருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேசிடஸ் பென்ஸ் காரின் ஆரம்ப உரித்து ஆளுநர் அலுவலகத்திற்கு உரித்துடையதாக இருந்த போதிலும் 2013 சனவரி 04 ஆம் திகதி பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இது விற்பனைக்கு தயாராக உள்ளது. |
| 2. | முன்னாள் ஆளுநர் பயன்படுத்தபட்ட மோட்டார் வண்டி 2020 யூலை 01 ஆம் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததுடன் அந்த மோட்டார் வண்டியை | 2023, 2022, 2021 | நட்டம் மற்றும் இழப்புக்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அந்த பணத்தை அறவிடுதல் தொடர்பாக சாரதிக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் மீண்டும் வழக்கு | இக் கூறப்பட்ட தொகையினை மீள அறவிடுவது தொடர்பாக சாரதிக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பழுதுபார்ப்பதற்காக ரூபா 5,286,460 மாகாண சபையினால் செலவிடப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி நிறுவனத்தில் இருந்து ரூபா 3,865,731 தொகை மாத்திரமே கிடைத்திருந்தமமையால் மிகுதி தொகையான ரூபா 1,420,729 சாரதியிடம் இருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2024 மார்ச் 06 ஆம் திகதி வரையிலும் அந்த பணம் அறவிடபட்டிருக்கவில்லை. | | | 2024 நவம்பர் 27 ஆம் திகதியில் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் அந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ல் ஓர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த அழைப்பு 2024 நவம்பர் 27 இல் பட்டியலிடப்பட்டுள்ளது. |
| 3. | வடமேல் மாகாண சபை செயலகத்தின் பயன்பாட்டிக்கு வழங்கப்பட்டிருந்த வண்டி ஒன்று முறையான அங்கிகாரம் இன்றி மாகாண சபையின் பிரதி தலைவருக்கு வழங்கப்படிருக்கும் போது 2002 ஒக்டோபர் 11 அந்த வாகனம் பாதுகாப்பற்ற வகையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போது முழுமையாக தீப்பிடித்து அழிவடைந்தமையால் ஏற்பட்ட நட்டம் 2024 சனவரி 19 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை | 2023 | வழக்கு தீர்ப்பின் பிரதி ஒன்றை பெற்று நட்டத்தினை அறவிடல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது அந்த வழக்கு தீர்ப்பின் பிரதி அல்லது காணப்படுகின்ற நிலமை தொடர்பாக தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. | தற்போதும் தீர்ப்பினது ஒரு பிரதி கிடைக்கப்பெற்றிருக்கவில்லை , மேலும் நட்டம் மீளப்பெறப்படவுமில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எடுக்கபட்டிருக்கவில்லை. | | | | |
| 4. | ஜனகலா கேந்திரத்தின் கேட்போர் கூடத்தினை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டுவரை ரூபா 209,673,158 செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இந்த செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தபட்டிருந்தது. செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் சாத்திய வள ஆய்வொன்று சரியாக மேற்கொள்ளமையின் மூலம் இந்த நிலமை ஏற்பட்டிருந்தது. | 2023, 2022, 2021 | நிதி பொருளாதாரத்தை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியினால் () முன்மொழியப்பட்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றது என்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தற்போதய நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. |
| 5. | வடமேல் மாகாண சபை மற்றும் குருணாகல் மாநகர சபை ஒன்றிணைந்து நிர்மானிக்கின்ற ஆறு மாடி கட்டிடத்தின் நிர்மான செயற்திட்டம். | | | | |
| (i) | மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 15(1) மற்றும் 15(2)(ய) (டி) இல் குறிப்பிடப்பட்ட காரணத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் இரத்து செய்ய முடியுமாக | 2023 | உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒப்பந்தகாரரால் 2022 ஒக்டோபர் 14 திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேரடியாக வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன். 2023 மே 31 ஆம் திகதி அந்த வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்டு ஒப்பந்தகாரரிடமிருந் | சட்ட நடவடிக்கைகள் முடிவு செய்யப்பட்ட பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. |

இருந்ததாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி ஒப்பந்தத்தை முடிவுருத்துதல் (வுநசஅயைெவழைெ) அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஒக்டோபர் 06 ஆம் திகதி வங்கி பிணை முறியும் விடுவிக்குமாறு வடமேல் மாகாண பிரதம அமைச்சின் செயலாளரால் வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் 14 திகதி ஒப்பந்தகாரரால் பிணைமுறி பணம் விடுவித்தல் கைவிட பட்டமையால் நீதிமன்ற கட்டளை பெறப்பட இருந்த போதும் அது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் 2023 மே 31 ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வடமேல் மாகாண பிரதம அமைச்சரின் செயலாளரின் பெயரில் ஆன கூட்டு மொத்தமான ரூபா 260,618,293 பெறுமதியான 03 பிணை முறிகளை விடுவித்து கொள்வதற்கு உரிய சந்தர்ப்பத்தின் போது பொறுப்பு வாய்ந்த தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

து கோரல் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அத் தினமே பிரதம அமைச்சரினால் வங்கிக்கு உரிய பிணைமுறி பணமாக்கி தருமாறு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | செயற்திட்டத்திற்காக ஒப்பந்தகாரருக்கு 2020 திசம்பர் 24 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகையான ரூபா 185,124,755 தொகையில் செலுத்தப்பட்ட எட்டாவது (08) பட்டியலில் 24,237,977 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதி முதல் கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 28 ஆம் திகதி வரை ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிடப்படாதிருந்த முற்பத் தொகை ரூபா 160,886,778 ஆகும். | 2023 | செலுத்தப்பட்ட முன்பணத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒப்பந்தகாரரின் முற்பணத்தை அறவிடும் திட்ட முறைமை ஒப்பந்த நிபந்தனை 14.2 இல் தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளமையும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் ஒப்பந்தகாரர் பூர்த்தி செய்த பின்னர் நிலுவை முற்பணத்தை அறவிடுவதற்கு ஆரம்பித்தல் குறித்துரைத்த வங்கிக்கு அறிவிக்கப்பட்டு இருந்தமையும், ஒப்பந்தகாரரால் இடைக்கால கட்டளையை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பெற்று இந்த முற்பணம் மற்றும் செயலாற்றல் பிணை முறியை அறவிடுதல் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதுடன், அந்த செயற்பாடுகள் முடிவடைந்தவுடன் அதனை அறவிடும் தீர்மானம் இறுதி கொடுப்பனவு சான்றிதழ் மூலம் சேவை பங்களிப்பாளரின் சகல உரிமைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் இந்த முற்பணம் தொகை செலுத்தியதன் பின்னர் மாகாண சபைக்கு தீர்தல் ஒப்பந்தம் பூர்த்தி | சட்ட நடவடிக்கைகள் இன்னும் முடிவு செய்யப்படாததனால் அது இன்னும் மீளப்பெறப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | செய்யபடாமல் மேற்கொள்ள முடியாதிருந்ததை குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| 6. | 1966 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடமேல் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விநியோகிக்கப்பட்ட ரூபா 3,325,756 கூட்டுத் தொகையான 07 மிகை கட்டண சான்றிதழ் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் பொறுப்புவாய்ந்த தரப்பினரால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023, 2022, 2021 | மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 03 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக அமுல்படுத்த வேண்டிய 07 மிகை கட்டண சான்றிதழ் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கபட்டுள்ளது. | அது இன்னும் மீளப்பெறப்பட வில்லை. |
| 7. | 2023 ஆம் ஆண்டின் வடமேல் மாகாணத்தில் நலனாளிகளுக்காக சூரிய வலு மின் கட்டளை தொகுதியை வழங்குதல் மற்றும் ஸ்தாபிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 8,750,186 பெறுமதி உடைய உடன்படிக்கையின் பிரகாரம், 2023 டிசம்பர் 11 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்ய வேண்டி இருந்த போதிலும், அத் திகதியிலிருந்து நான்கு தடவை | 2023 | தேவையற்ற முறையில் நாட்களை நீடிக்காமல் விரைவாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செயற்திட்டத்தின் சூரிய வலு துணை பாகங்களை ஸ்தாபித்தல் நாட்டில் காணப்படுகின்ற இறக்குமதி கட்டுப்பாட்டினால் தாமதமடைந்து இருந்ததுடன் மின்சார துணை பாகங்கள் இந்த நாட்டிற்கு கொண்டு வந்து ஸ்தாபிக்கும்போது மேற்பார்வை நடவடிக்கைகள் தாமத வழுக்களினால், பிரதேச பொறியியலாளர் - புத்தளம் இற்கு கையளிக்கப்பட்டதுட | செயற்திட்ட நடவடிக்கைகள் இன்னும் பூர்த்திசெய்யப் படவில்லைஇ மேலும் செயற்திட்ட பிரிவில் மேற்கொள்ளப் பட்ட கள பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டவைகளின் அடிப்படையில் முன்னர் நிறுவப்பட்ட பேனல்களை (ீயநெடள) விட அதிகளவு மின்னழுத்தங்களுடனான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட கால நீடிப்புக்களின் பிரகாரம் 2024 மார்ச் 31 வரையும் நாள் நீடிக்கப்பட்டிருந்த போதும் கணகக்ாய்வு திகதியான 2024 ஏப்ரல் 02 திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்து கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | ன் பின்னர் அந்த சூரியகல மின் முன்மொழிவு திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அதற்கு குறித்துரைத்த பிரதேச பொறியியலாளர் பிரிவுகளில் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், இந்த செயற்திட்டத்திற்காக தொடர்புடைய நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றமையால் காலவீச்சு போதிய அளவில் இல்லாமையின் அடிப்படையில் மீண்டும் உடன்படிக்கைக் காலம் நீடிக்கபட்டுள்ளதுடன் கூடிய விரைவில் இந்த செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பேனல்களை (ீயநெடள) நிறுவ முயற்சிகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |
| 8. | வடமேல் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தினால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் | 2023 | அறவிடவேண்டிய நிலுவை வாடகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீளாய்வு ஆண்டின் இறுதியில் அறவிடவேண்டிய மீதி சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | ரூபா 97,392,829 தொகையான ஓர் பெறப்பட வேண்டிய மீதி இன்னும் மீளப்பெறப்படவேண்டியுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 31 இல் உள்ளவாறு நிறுவனங்கள் மற்றும் 55 நபர்களிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவை நீண்ட கால வாடகை பெறுமதி ரூபா 107,864,841 ஆகும். | | | | |
| 9. | குருநாகல் மாவட்டத்தில் நிக்கவரட்டிய, தம்பதெனிய என்ற 02 ஆரம்ப வைத்தியசாலைகள் மற்றும் நாரமல பிரதேச வைத்தியசாலைகளில் விடுதி, தங்கியிருக்கும் நோயாளர் வாட்டுகல் மற்றும் ஏனைய பிரிவுகளில் தேவைகளுக்காக போதியளவான உயிரியல் மருத்துவ உபகரணங்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கும்போது 2017 ஆம் ஆண்டு முதல் 2022 நவம்பர் வரை வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட 2023 ஆம் ஆண்டில் சந்தை பெறுமதி ரூபா 10,109,760 ஆன 15 சத்திர சிகிச்சை உபகரண வகைகளில் 101 அலகுகள் சத்திர சிகிச்சை களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | 2023 | சத்திர சிகிச்சை உபகரணங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொரோனா தொற்றுநோய் காலத்தில் பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் நன்கொடையாகவும் மற்றும் வரிசை சுகாதார அமைச்சினால் உயிரியல் மருத்துவ உபகரணங்கள் பகிர்ந்தளித்ததில் மிகையான உபகரணங்கள் வைத்தியசாலையில் காணப்படுகின்றது. இதன்மூலம் உபகரணங்கள் சில உதவி உபகரணங்களாக பயன்படுத்தப்படுவதுடன், ஏனைய உபகரணங்கள் யாவும் தேவையாக காணப்படுகின்ற வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்குமாறு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளதாக | இவற்றில் சில உபகரணங்கள் இன்னும் பயன்படுத்தப்படாமல் உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 10. | குறித்துரைத்த நாளாந்த சேவைக் காலத்தில் வழங்கப்படுகின்ற பகல் உணவு ஓய்விற்கான 30 நிமிட நேரத்தையும் உள்ளடக்கி மதியம் 12.00 முதல் பி.ப 1.00 வரையான ஒரு மணித்தியால காலத்திற்காக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக மேலதிக நேர படியாக குருணாகல் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நியமிக்கப்பட்ட 21 மருத்துவர்களுக்காக ரூபா 1,863,392 திரண்ட தொகையும், புத்தளம் பிரதான பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நியமிக்கப்பட்ட 11 மருத்துவர்களுக்காக ரூபா 1,241,141 மேலதிக படியும் செலுத்தப்பட்டிருந்தது. | 2023 | கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக வடமேல் மாகாண பிரதம செயலாளருடன் மாகாண கணக்காய்வு கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்ட பின்னர் வரிசை மற்றும் மாகாண நிறுவனங்களுக்கு உரிய அவ்வாறான செலுத்துதல்கள் செலுத்தும் முறைமை உத்தேச முறைமை ஒன்று முன்மொழியப்பட்டு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமையால் அந்த ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | இது தற்போது வரை சீர் செய்யப்படவில்லை. |
| 11. | 2021 டிசம்பர் 29 ஆம் திகதிய 13⁚.2008 (எ) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2(அ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தான உத்தியோகத்தருக்கு | 2023 | சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலக்கம் ீது-4705 மற்றும் ீபு-9401 என்ற கெப் வண்டிகள் மாகாண சுகாதார திணைக்களத்தின் குழாம் வாகனமாக இருந்ததுடன், குழாம் வாகனத்திற்காக எரிபொருள் எல்லை என்று காணப்படாது இருந்தமையால் எரிபொருள் | வரையறையை மீறி பெறப்பட்ட எரிபொருளின் பெறுமதி தொடர்பில் இன்னும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உரித்தான மாதாந்த எரிபொருள் லீட்டர் 135, இவ் எல்லையை விஞ்சி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆல் பிரதம செயலாளரின் முன் அங்கீகாரம் இன்றி 4,943.4 லீட்டர் எரிபொருள் மீளாய்வாண்டின் போது 02 வாகனங்களுக்காக பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன் அங்கீகாரமின்றி மாதாந்த எரிபொருள் எல்லையை விஞ்சி 2020 சனவரி முதல் 2023 மார்ச் 31 வரையான காலப்பகுதியில் ரூபா 1,989,376 பெறுமதி ஆன 4,943.4 லீட்டர் எரிபொருள் பெறப்பட்டிருந்தது. | | | வழங்குவதற்காக பிரதம செயலாளர் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லையென அறியத் தருகின்றோம். மாகாண சுகாதார சேவை பணிப்பாளரின் மத்திய அரசின் கடமைகளுக்கு ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களுக்கு மேலதிக எரிபொருள் வழங்குவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த கடமைகளுக்காக எரிபொருள் பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் இருந்து வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 12. | குருணாகல் பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகத்துக்குரிய இரண்டு வாகனங்கள் விபத்துக்கு உட்பட்டு முறையே 3½ வருடங்கள் மற்றும் 02 வருடங்களும் 03 மாதங்களும் கடந்திருந்த போதிலும் ஆரம்ப விசாரணைகளை பூர்த்தி செய்து ஒழுக்காற்று பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் கூட்டுமொத்தமாக | 2023 | மாகாண நிதி ஒழுங்குவிதியின் பிரகாரம். ஒழுக்காற்று பரிசோதனைகள் தாமதமின்றி நடாத்தி வழங்கப்படுகின்ற பரிந்துரைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். | டுறு-1790 நோயாளர் காவும் வண்டி சாரதியின் தவறினால் விபத்திற்குப்பட்டிருந்ததுடன் அதன் மொத்த நட்டமான ரூபா 11,705,790 (திணைக்கள கட்டணத்தையும் உள்ளடக்கி) சாரதியடமிருந்து அறவிடுவதற்கும் தவறிழைத்தவறான சாரதி சேவையிலிருந்து விலகியதற்காக ஒழுக்காற்று கட்டளை வழங்கப்பட்டு இருந்தமையும் | ஒழுக்காற்று விசாரணைகள் ஓர் வாகனத்திற்கு நடாத்தப்பட்டுள்ளது, மேலும் ஏனைய வாகனங்களிற்கு ஆரம்பகட்ட விசாரணைகள் நடைபெற்றக்கொண்டிருக்கின்றது. உரிய தரப்பினர்களிடமிருந்து நட்டம் அறவிடப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 18,334,550 நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | மற்றும் ஸ்ரீநு-4736 என்ற கெப் வண்டி விபத்துக்கு உட்பட்டதற்கு உரிய குழுவொன்றின் மூலம் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 13. | மாரவில ஆதார வைத்தியசாலையின் ஆரம்ப வைத்தியசாலையின் வெளிவாரி நோய் பிரிவு வலையமைப்பு செயற்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது சுகாதார அமைச்சிலிருந்து வழங்கப்பட்டிருந்த 09 மடிக் கணினிகள், 07 அச்சீட்டு பிரதி இயந்திரங்கள், 25 பார் கோட் ரீடர்கள் உட்பட உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | 2022 | தேவையான பயிற்சி பெற்ற பதவியணியினரை பெற்றுக்கொண்டு செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளல் வேண்டும். | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையான கணினி அறிவுள்ள பயிற்சி பெற்ற பதவியணியினர் பற்றாக்குறை இதற்கு காரணமாக இருந்தது. | இது தற்போது வரை அமுல்படுத்தப் படவில்லை. |
| 14. | புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு 2017 ஆம் ஆண்டின் போது மருத்துவ பிரிவுகளுக்கு இடையே வளையமைப்புகளை மேற்கொள்வதற்காக 33 மடிக் கணினிகள் கிடைத்திருந்ததுடன் அதில் 16 பிரிவுகளுக்கு 26 கனணிகள் மாத்திரம் பகிர்ந்து | 2022 | குறித்த உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | போதியளவு வைத்திய பதவியணியினரை ஈடுபடுத்துவதில் சிக்கலாக இருந்ததால் இவ்வாறான தாமதங்கள் ஏற்பட்டதுடன் எதிர்காலத்தில் குறைபாடுகளை பூர்த்தி செய்து நிகழ்ச்சி திட்டங்களை | இன் நிகழ்ச்சித்திட்டம் தற்போது வரை ஆரம்பிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அளிக்கப்பட்டிருந்தது . பகிர்ந்தளிக்கப்பட்ட அனைத்து கணினிகளும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்ற வகையில் காணப்பட்டதுடன் அவற்றின் உத்தரவாத காலமும் கடந்து காணப்பட்டன. | | | ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன . | |
| 15. | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டின் போது மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 4,866,842 செலவில் மீஹலேவ அமில செவன சிறுவர் வீடமைப்பு வளவில் நிர்மானிக்கப்பட்ட விவாகமாகாத கர்ப்பிணித் தாய்மார்களுக்காக பாதுகாப்பு நிலையமொன்றின் நடவடிக்கைகள் அந்த வீட்டில் மிகுதி வேலைகள் மற்றும் வீட்டின் மதில் மற்றும் வாய்க் கதவு நிர்மானிக்கும் நடவடிக்கைகள் தாமதமடைந் ததன் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டது. | 2023 | நிர்மான நடவடிக்கைகளை பூர்த்தி செய்து ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீஹலேவ அமில செவன சிறுவர் வீட்டு வளவில் நிர்மானிக்கப்பட்ட விவாகமாகாத கர்ப்பிணித் தாய்மார்களுக்காக மேவுகை பாதுகாப்பு நிலையமொன்றை நிர்மானிக்கும் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு 2023ஆம் ஆண்டில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் (தேசிய) இனால் நிதி ஏற்பாடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டமையால் அந்த ஆண்டில் மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் நிர்மானிப்பதற்கு உள்ளடக்கப்பட்டிருக்காத போதும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தால் (தேசிய) நிதி ஏற்பாடு வழங்குவதற்கு | நிர்மான செயற்பாடுகள் மீண்டும் தொடங்கியுள்ளபோதிலும் இது தற்போது செயலற்று உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தாமதமடைந்தமையினால் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக முடியாதிருந்தமையும். இந்த ஆண்டின் போது வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 16. | வலகும்புற மட்பாண்ட உற்பத்தி மற்றும் பயிற்சி நிலைய நிர்மானத்திற்காக மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 9,727,058 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 | பூர்த்தி செய்து குறித்த செயற்பாட்டுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிர்மாண நடவடிக்கைகளை 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிர்மானம் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தும்இ வேலைகள் இன்னும் பூர்த்திசெய்யப் படவில்லை. |
| 17. | கொஸ்கேனாகார மீரிஹாநேகம, வென்தருவ, கொஸ்கஹஅல மற்றும் ரண்தெனிகம ஆகிய புடவைக் கைத்தொழில் நிலையங்களுக்குரிய சேதமடைந்த ஐந்து கட்டிடங்கள் காணப்படுவதுடன் தற்போது அந் நிலையங்கள் | 2022 | குறித்த கட்டிடத்தை பயனுள்ள செயற்பாட்டிற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக்கட்டிடங்கள் அமைந்துள்ள காணியை அரசின் ஆக்கபூர்வமான நடவடிக்கை ஒன்றிற்காக பயன்படுத்துவதற்காக பிரதேச செயலாளருக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இது தற்போது செயலற்று உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விளைவற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. | | | | |
| 18. | கொடவல கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக திட்டவட்டமான மானிய நிதி ஏற்பாட்டின் கீழ் மற்றும் மாவட்ட திட்டவட்ட அபிவிருத்தி நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டில் ரூபா 3,148,922 செலவிடப்பட்டு இருக்கையில் திருத்த நடவடிக்கைகள் முறையான மேற்கொள்ளப்படாமை காரணமாக தற்போது சுத்திகரிப்பு முறை விளைவற்று காணப்படுகின்றது. | 2022 | சுத்திகரிப்பு முறைமையை விரைவில் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மீண்டும் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த செயற்பாட்டினை மேற்கொள்ளுமாறு பிரதான செயலாளருடன் 2023.05.10 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. | ஓர் புதிய ஒப்பந்ததாரருடன் ஓர் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது, மேலும் செயற்திட்டத்தினை பூர்த்திசெய்ய செப்பனிடுதல் வேலைகள் நடைபெற்று கொண்டிருக்கின்றது. |
| 19. | 2018 ஒக்டோபர் 10 ஆந் திகதி மாகாண சபை கலைப்பதற்கு முன் அரசியல் அதிகாரத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த இரட்டை பணி கெப்வண்டி 2014 திசெம்பர் 30 ஆம் திகதி ஏற்பட்ட விபத்திற்குரிய ரூபா 6,019,533 நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,960,000 தொகை காப்புறுதி கம்பனியின் மூலம் மீளளிப்பு | 2023 | அரசாங்க சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பாக முறையான விசாரணையோ அல்லது வழக்குத் தொடர்தலோ மேற்கொண்டு உரிய தரப்பினரிடமிருந்து இழப்பின் பெறுமதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவையாகக் காணப்படுகின்ற ரூபா 2,059,533 தொகையை அறவிடுவதற்காக உரிய சாரதிக்கு எதிராக சிலாபம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தற்போது விசாரணையில் உள்ளது. அவ்வாறே புதிய ஜெசி இலக்கம் அரசாங்க தொழிற் சாலைக்கு அனுப்பி அச்சிடப்பட்டுள்ளதுடன் இந்த திருத்தங்களை | நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்கு முடிவுறுத்தப்படவில்லை, மேலும் தொடர்புடய நட்டம் அறவிடப்படவுமில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 2,059,533 தொகை உரிய பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து 2023 ஆகஸ்ட் 08 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | மேற்கொள்வதற்கு உள்ள இயலுமை தொடர்பாக அரசாங்க தொழிற்சாலை இருந்து விசாரணை செய்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 20. | மாகாண நிச்சயிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்ட ரூபா 7,945,669 மதிப்பிடப்பட்ட கிரயத்திலான 11 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 1,128,892 செலவிடப்பட்டிருந்த போதும் அச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 | உரியகால கட்டத்தினுள் செயற்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணப்பட்ட அதிக மழை காரணமாக நீர்ப்பாசன செயல்திட்டங்கள் நீரினால் நிரம்பியமை மற்றும் கொரோனா தொற்று காரணமாக இச் செயட்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாது இருந்தது. | 11 செயற்திட்டங்களில் 02 செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. |
| 21. | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் இருந்தும் மற்றும் இலத்திரனியல் வருமான அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் முறைமை யில் இருந்தும் 288 வாகனங்களின் பதிவு தொடர்பாக பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் வடமேல் மாகாண சபையின் நிறுவனத்தின் | 2023 | மாகாணசபையின் பெயரில் பதிவு செய்த வாகனங்கள் தொலைந்து போனமை தொடர்பாக பரிசோதனை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அலுவலகத்தில் காணப்படுகின்ற ஆவணங்களில் குறிப்பிடப்படாமையினால் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | வாகன அடையாளப்படுத்தல் செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 38 வாகனங்கள் மாகாணசபை நிறுவனத்துக்கு சொந்தமாக காணப்படவில்லை. | | | | |
| 22. | நிக்கவெரட்டி, கொட்டவெஹர, பொல்பித்திகம, இப்பாகமுவ மற்றும் பன்னல என்ற 5 பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகால ஆக்கபூர்வமான மற்றும் வருடாந்த வரி வாடகையாக ரூபா 7,800,774 நிலுவை வாடகை பணம் அறவிடவேண்டி இருந்தது. | 2023 | நிலுவைப் பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் உரிய வாடிக்கையாளர்களுக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறப்பட வேண்டி தொகை வசூலிக்கப்படவில்லை. |
| 23. | **ஒன்றிணைந்த இன விருத்தி பண்ணை – மாவத்தகம** வடமேல் மாகாணத்திற்கு பொருத்தமான உயர்ந்த உற்பத்தி ஒன்றையும் தரமான இலட்சணையுடன் கூடிய உயர்ந்த வகை பசு மாடுகளை உருவாக்கி துறைக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மாவதகம கால்நடை இன விருத்தி பண்ணை நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டு வரை ரூபா 3,762,207 தொகை செலவிடப்பட்டிருந்த | 2021 | கால்நடை இனவிருத்தி பண்ணையை இயங்கும் பண்ணையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பண்ணை அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் (ீ) செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | இறுதி மும்மொழிவு இருந்த போதிலும், 2022.˙.09.˙.26 இல் கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தினால் இலங்கை கடற்படையிடம் கையளிக்க ஓர் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போதும் 2022 பெப்ரவரி 03 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலைய பரிசோதனை சந்தர்ப்பம் வரை மேற்படி நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதமையால் குறித்த கட்டிடங்கள் விளைவற்றும் காணப்பட்டன. | | | | |
| 24. | 2022 ஆம் ஆண்டின் பெப்ரவரி 02 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட கல்கமுவ அரச பண்ணையில் காணப்படுகின்ற ரூபா 3,662,756 பெறுமதியான வெங்காய களஞ்சியம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | 2023, 2022 | பயனற்ற சொத்துக்களை உரிய நோக்கங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. | அது இன்னும் பயன்படுத்தப்படாமல் செயலற்று உள்ளது. |
| 25. | மனிதவள அபிவிருத்தி அதிகார சபையால் 2006 – 2017 காலப் பகுதியில் 08 செயற் திட்டங்களுக்காக 178 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 24,286,413 கடன் தொகையில் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 7,502,349 அறவிட வேண்டி காணப்பட்டது. | 2023 | நீண்டகால நிலுவை கடனை தாமதமின்றி அறவிடல் வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கடன் மீதிகளுக்குரிய 2023.05.31 ஆந் திகதி காணப்பட்ட ரூபா 8,992,220.00 ஆன தொகை 2023.12.31 ஆந் திகதி வரையில் ரூபா 7,502,349.00 வரை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. | நிலுவை மிகுதி ரூபா 7இ502இ349.00 மாறாமலுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26. | வடமேல் மாகாணத்தின் சகல முன்பள்ளி பாடசாலைகளும் வடமேல் மாகாண முன்சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு வடமேல் மாகாணத்தில் செயற்படுகின்ற 2,152 முன்பள்ளி பாடசாலைகளில் 910 முன்பள்ளி பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள முன்பள்ளி பாடசாலைகளின் எண்ணிக்கையில் 42 சதவீத நிறுவனங்கள் ஒழுங்கு முறைக்கு உட்படுத்தப்பட்டிருக் கவில்லை. | 2023 | முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிறுவனங்களை பதிவு செய்ய வேண்டியிருந்தது டன் அதற்கு இணங்காத நிறுவனங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த 386 முன்பள்ளி பாடசாலைகளான சர்வதேச இலக்காகக் கொண்ட முன்பள்ளி பாடசாலைகள், அதிகார சபையின் அனுமதி மற்றும் உரிய நியமங்கள் இன்றி ஆரம்பிக்கப்பட்டுள்ள முன்பள்ளி பாடசாலைகள் ஆகும். விஞ்ஞாபனத்தில் இந்த முன்பள்ளி பாடசாலைகளுக்கு எடுக்க வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் குறிப்பிடப் படாதிருந்தமையால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்த போதிலும் எதிர்காலத்தில் விஞ்ஞாபனங்களைத் திருத்துவதன் மூலம் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | இம் முன்பாடசாலை களிற்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாததால் இம்முறை நடவடிக்கை எடுப்பது சாத்தியமற்றதாகவுள்ளது. இருப்பினும்இ எதிர்காலத்தில் அறிவித்தலில் மாற்றம் செய்வதனூடாக சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நம்பப்படுகின்றது. |
| 27. | வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு சட்டரீதியான நிதி ஏற்பாடு இன்றி 2015 முதல் 2023 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் நிறைவேற்று படியாக ரூபா 4,525,000 செலுத்தப்பட்டிருந்த | 2023 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த படி இதற்காகவும் பரிசோதனைகள் மேற்கொண்டு விடயங்களை அறிக்கையிடுவதற்காக பரிசோதனைச் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் 05.∴2017 இலக்க சுற்றறிக்கை வடமேல் மாகாண சபையின் நியதிச்சட்டப்படி | அது இன்னும் பெறப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | து. | | | 2017.10.25 திகதி முதல் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அதற்கு முன்னைய காலப்பகுதிகளுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அறவிடல் தொடர்பான தகவல்கள் எதிர்காலத்தில் அறிக்கையிடப்படுவதாக அறிவிக்கபட்டுள்ளது. | |
| 28. | அதிகார சபையின் வளவில் அமைந்துள்ள காணியில் மீன்பிடி தடாகமொன்றை நிர்மானிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 4,925,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அந்நிர்மாணம் இதுவரை பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்பட்டது. | 2023 | முறையான சாத்தியவள ஆய்வு ஒன்றின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டு திட்டமிடப்பட்ட பிரகாரம் பராமரித்துச் செல்லப்பட வேண்டும். | இந்த மீன்பிடி தடாகத்தின் அத்திவாரத்தின் மீது மீண்டும் நிர்மாணங்களை செய்வதற்கு பொருத்தமான மட்டத்தில் காணப்படாமையால் இத்தாங்கியின் பகுதிகள் மண் நிரப்பப்பட்டு அந்நிலப் பிரதேசத்தை அதிகாரசபையின் பயன்பாட்டிற்கு இருக்கக் கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோல்கள் அடையப்பெறவில்லை. |
| 29. | இறால்களுக்கு தொற்றும் வெள்ளை புள்ளி வைரஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக ரூபா 7,511,710 ஆன கிரயமொன்று மேற்கொள்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட | 2023 | செயற்திட்டத்தை திட்டமிடப்பட்ட பிரகாரம் பேனிச் செல்வதற்கும் எதிர் காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை | இறால் வளர்ப்பிற்கு காலரீதியாக காணப்பட்ட தடைகள் மற்றும் வரையறைகள் ஆய்வு கூடங்களுக்கு இடையேயான போட்டி போன்ற | இயக்குனர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டிலிருந்து பீசிஆர் (ஷஊசு) ஆய்வுகூடம் மூடப்பட்டுள்ள |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | “ஊசு” ஆய்வு கூடத்தில் 2018 ஆம் ஆண்டு முதல் இரசாயன ஆய்வு கூட செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. | | எடுத்தால் வேண்டும். | காரணங்கள் அடிப்படையில் போதிய அளவு வருமானம் ஒன்று உழைப்பதற்கு முடியாமையால் ஆய்வு கூட நடவடிக்கைகளால் எதிர்பார்த்த இலக்கை நோக்கி செல்வதற்கு முடியாதிருந்தது. | து. |
| 30. | **வடமேல் மாகாண கைத்தொழில் சேவை பணியகம்.** 2023 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 24 ஆம் திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தின் 05 ஆம் பகுதியின் பிரகாரம் ஹெரலியாவடி கருநாத்தபுரயில் தற்போது செயல்படுகின்ற மற்றும் செயல்படாத நிறுவனங்களின் மூலம் 2006 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரிய கைத்தொழில் அபிவிருத்தி நிதியம் (ஜீகு) இற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 3,299,488 அறவிடப்பட்டிருக்க வில்லை. | 2023 | அறவிட வேண்டிய தொகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அது தொடர்பாக எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கபடும் என குறிப்பிடுகின்றோம். அதற்கு மேலதிகமாக இது தொடர்பாக பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளை அமுல்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அது இன்னும் பெறப்படவில்லை. |
| 31. | வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபைக்குரிய கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற விடுதிப்பாடசாலை 02 வருடங்களுக்கு வாடகைக்கு வழங்கும் போது | 2023 | நிறுவனத்தின் சொத்துக்களை மூன்றாம் தரப்பினருக்கு கையளிகும் போது அரசாங்கத்தின் மதிப்பீடொன்றைப் பெற்ற பின்னர் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படாத | அசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் படி ரூபா 360,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை சுற்றாடல் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ | 2025 ஆம் ஆண்டிற்கான உடன்படிக்கைகளிற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு அறிக்கை பெறப்படாமல் மாதாந்தம் ரூபா 200,000 இற்கு வாடகை உடன் படிக்கையில் 2021 திசம்பர் 27 ஆந் திகதி பொருட்கள் உபகரணங்களுடன் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது டன் 2022 சனவரி 10 ஆம் திகதி பொருள் உபகரணங்களுடன் கட்டிடத்தின் மாதாந்த வாடகை 360,000 ஆக மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக மதிப்பீட்டு வாடகையினை விட குறைந்த தொகையில் உடன்படிக்கை செய்யப்பட்டமையால் 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்குரியதாக வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபைக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 3,840,000 ஆகும். | | வகையில் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளைக் கவனத்திற் கொண்டு அவர்களால் 25 சதவீத பாடநெறிகளை நடாத்திச் செல்வதால் வடமேல் மாகாணத்தை உள்ளடக்கி ஏனைய மாகாண மாணவர்கள் தமது தொழில் இயலுமை விருத்தி செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது. மேலும் இந்த சுற்றாடலில் உள்ள பாதுகாப்பு செலவினம் மின்சாரம் மற்றும் ஏனைய சிறிய பராமரிப்பு நடவடிக்கைகள் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றமையால் வாடகையாக ரூபா 280,000 தொகை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| 32. | உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வடமேல் மாகாணத்திற்குள் சாதகமான சுற்றாடல் ஒன்றை கட்டியெழுப்பும் நோக்கில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 53.3 | 2021 | சொத்துக்களை ஆக்கப்பூர்வமாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | “ஊழுடழஅடிழ ளுயஜெஉவரயசல சுநளழசவ” தனியார் நிறுவனத்திற்கு 10 வருட காலத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் நீர் சிக்கல்கள் | இவ்வருடம் 2018 ஆம் ஆண்டில் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், தேவையான நிர்மானம் மற்றும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மில்லியன் செலவிடப்பட்டு அதிகார சபையால் நிர்மானிக்கப்பட்ட சுற்றுலா நிலையம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக எவ்வித வருமானமும் உழைக்காமல் குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | | | காரணமாக நீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டு எஞ்சிய நிர்மானங்கள் பூர்த்தி செய்யப்படும் வரை இதில் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. | செப்பனிடுதல்கள் செயற்பாடுகளினை ஆரம்பிக்க வேண்டிய காரணத்தால் வணிக நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாத நிலையில் உள்ளது. |
| 33. | அதிகாரசபையின் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதியான ரூபா 66,166,834 தொகையில் 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து வரும் ரூபா 7,049,985 ஆன நிலுவை செயற்பாட்டு வருமானமொன்றும் 2009 – 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மொத்தம் ரூபா 739,755 ஆன நிலுவை வருமானமொன்றாகும். | 2021 | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் தொடர்ந்தும் அறவிடப்படாத கடன் மீதியாக கணக்குகளில் காணப்படுவதால் மாகாண திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்று கணக்குகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இதுவரை தெளிவுபடுத்தப் படவில்லை. |
| 34. | 2013 ஆம் ஆண்டு முதல் 2023 டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு உரியததாக அதிகாரசபைக்கு கிடைக்கவேண்டிய மாதாந்த ஓட்ட அட்டவணை பத்திரக் கட்டணம் ரூபா 13,490,500 மற்றும் தாமதக்கட்டணம் | 2023, 2022 | கிடைக்க வேண்டிய மாதாந்த ஓட்டஅட்டவணை பத்திர கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த பணத்தை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் வடமேல் மாகாண பிரதம அமைச்சின் மூலம் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது . அந்த குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் அந்த | அதற்கு மேலதிகமாக மாதாந்த செயற்பாட்டு கட்டணம் ரூபா 13இ223,000 மற்றும் தண்டப்பணம் ரூபா 2இ628இ100 இன்னும் அறவிடப்படவேண்டியுள்ளது. |

| | | |
|---|---|---|
| ரூபா 2,706,150 என்பவற்றை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | | பரிந்துரைகளை வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 சப்ரகமுவ மாகாண சபை

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | மிகை (பற்றாக்குறை) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 14,625,000,000 | 1,276,400,000 | 13,348,600,000 | 2,234,800,000 | முனைப்பழியுள்ள் |
| **2022** | 16,436,400,000 | 1,256,900,000 | 15,179,500,000 | 273,300,000 | முனைப்பழியுள்ள் |
| **2023** | 38,992,200,000 | 1,020,900,000 | 37,971,300,000 | 1,573,800,000 | முனைப்பழியுள்ள் |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | அமப/21/1596/304/134 மற்றும் 2021 செப்டெம்பர் 07 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மூலதன அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பொருட்கள் மற்றும் உபகரணங்களை விநியோகித்தமை மீளாய்வு செய்யப்பட்டு அவற்றை இடை நிருத்தப்பட்டிருந்த போதிலும் குறை நிரப்பு தொகை கூற்றின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு ரூபா 11.6 மில்லியன் செலவிடப்பட்டு சுயேச்சை அமைப்புக்களுக்கு விநியோகிப்பதற்காக பிளாஸ்டிக் கதிரைகள், மின் | 2021 | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம நடவடிக்கை எடுக்கப்படாமையால் உரிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உற்பத்தி இயந்திரம் மற்றும் சமையலறை உபகரணங்கள் போன்றன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | | | |
| 2 | ஒவ்வொரு நபருக்கும் தகமையுள்ள எரிபொருள் படியினை மற்றுமொரு நபருக்கு வழங்குவதற்கு பீஎஸ்/சீஎஸ்ஏ/00/1/4/ 2 ஆம் இலக்க 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் மூலம் ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் கௌரவ ஆளுனர் அவர்கள் நாட்டிற்கு வெளியே இருந்த காலத்தில் அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 0.7 மில்லியன் எரிபொருள் படியானது அவரின் பிரத்தியேக செயலாளருக்குச் செலுத்தக்கட்டிருந்தது. | 2022 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செலுத்தப்பட்டுள்ள தொகையை மீண்டும் அறவிட்டுக் கொள்ளுமாறு ஜனாதிபதி செயலாளர் பிரதான செயலாளருக்கும் பிரதான செயலாளர் ஆளுநரின் செயலாளர்ருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | செலவிடப்பட்ட தொகையை அரசுக்கு மீண்டும் அறவிட்டிருக்கவில்லை. |
| 3 | ஆளுனரின் செயலாளர் அலுவலகத்திற்குரிய ஒரு வாகனம் 2020 ஆம் ஆண்டின் போது விபத்துக்குள்ளாகி திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தும் திருத்தம் செய்தல் தொடர்பான ரூபா 6 மில்லியன் இழப்பீட்டுப் பணம் | 2022 | இழப்பீட்டுப் பணத்தை துரிதமாக பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். | சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் மாகாண சபையின் சட்ட பிரிவின் மூலம் எஞ்சிய காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | காப்புறுதி இழப்பீடு ரூபா 1 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 4 | 2017 ஆம் ஆண்டின் போது முதலமைச்சிற்குரிய ஒரு வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை முழுமையான நட்டமாகக் கருதி காப்புறுதி நிறுவனத்தினால் ரூபா 25 மில்லியன் காப்புறுதி இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு இணங்கிக்கிக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அப்போதிருந்த பிரதம செயலாளரினால் அந்த இழப்பீட்டினை நிராகரித்தும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக்கு முரணாகவும் அதனை திருத்தம் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ஒரு தனியார் கராஜிற்கு ஒப்படைக்கப்பட்டு 2019 பெப்ரவரி மாதத்தின் போது ரூபா 3 மில்லியன் முற்பணமும் மேற்கூறிய காப்புறுதி முகவர் நிறுவனத்தினால் தனியார் கராஜிற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் தற்பொழுது 04 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் இன்றுவரை மோட்டார் வாகனம் மாகாண சபைக்கு கொண்டு வரப்பட்டிருக்காததது | 2022<br>2021 | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரசின் திருத்த வேலை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் இதுவரை காப்புறுதி இழப்பீடு இலங்கை காப்புறுதி கூட்டத்தாபனத்தினால் செலுத்தப்படாமை தொடர்பாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணை குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | காப்புறுதி இழப்பீடு அறவிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் வாகனம் மாகாண சபைக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டன் முழுமையான காப்புறுதி இழப்பீட்டுப் பணமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 5 | மாகாண பிரதம அமைச்சு செயலாளரினால் சப்ரகமுவ அபிவிருத்தி நிர்மான மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபை சம்பந்தமாக 2022 சனவரி மாதத்தில் வழங்கப்பட்ட தொடக்க புலனாய்வு அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்ட ரூபா 54.4 மில்லியன் தொகையான 03 சேதங்கள் தொடர்பான பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 | நட்டங்கள் சேதங்கள் சம்பந்தமாக நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களை அடையாளப்படுத்துவதற்காக இரண்டு சந்தர்ப்பங்களில் குழு நியமிக்கப்பட்டிருந்தது. | அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிட்டிருக்கவில்லை. |
| 6 | கைத்தொழில் அமைச்சின் 2007 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் தீர்த்துவைக்கப்படாத உப கட்டுநிதி மீதியாகிய ரூபா 0.9 மில்லியனை மீளாய்வாண்டின் போது தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மத்தியஸ்த சபைக்கு அனுப்புவதற்காக தேவையான சட்ட உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கட்டு நிதி செலுத்தியிருக்க வில்லை. |
| 7 | அருகாமையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் ரூபா 500.98 | 2022<br>2021 | இக்கட்டிடத்தினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைக்கு மாற்றுதல் | கட்டு நிதி கோரப்பட்டுள்ளது. | 04 செயத்திட்டங்களின் நிர்மான பணிகள் ஆரம்பிக்கப்பட் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மில்லியன் தொகையான 24 நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. | | வேண்டும். | | டிருந்தது. |
| 8 | இரத்தினப்புரி மாவட்டத்தின் 02 பிரதேச செயலகங்களின் 06 நீர் செயற்திட்டம் தொடர்பான ரூபா 2.5 மில்லியனான நிலுவையாகவுள்ள நீர் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2022 | நிலுவையான நீர் வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வரி கொடுப்பனவுகளை செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 9 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 90.2 மில்லியன் தொகையான காணிக் வரி மீதியானது அறவிடப்பட்டிருக்காததுடன் அதில் ரூபா 31 மில்லியன் தொகையானது 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும். | 2022 | நிதி விதியின் பிரகாரம் துரிதமாக நிலுவையாகவுள்ள வரிப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடிதம் மற்றும் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்தல், தவணை அடிப்படையில் செலுத்துவதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | மேலும் நிலுவை வரி ரூபா 79 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது. |
| 10 | மாகாண இறைவரித் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட ரூபா 90.8 மில்லியனான நிலுவை இறைவரியில் ரூபா.7.6 மில்லியன் தொகையானது 10 வருடங்களுக்கும் 22 வருடங்களுக்கும் இடையிலும், ரூபா 2.5 மில்லியன் தொகையானது 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலும், ரூபா | 2023 | நிலுவை இறைவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை இறைவரி அறவிடுதல் மற்றும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. | 2024 ஜூன் 30ஆம் திகதியில் நிலுவை இறைவரி ரூபா 48.1 மில்லியனை அறவிட வேண்டியுள்ளதுடன் நிறைவடையாத வழக்குகள் 130 ஆகும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 80.7 மில்லியன் தொகையானது 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலும் காணப்பட்டது. இதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் பூர்த்தி செய்யப்படாத 174 வழக்குகள் காணப்பட்டன. | | | | |
| 11 | 2023 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 165.3 மில்லியனான 32 நிர்மாண கைத்தொழில்கள் பெறுகை முறைமை இன்றி பிரதான செயலாளரின் பரிந்துரை மற்றும் ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில் அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் இயந்திரவியல் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. | 2023 | பெறுகை வழிகாட்டலுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போதும் கூட பெறுகைகள் நடைமுறைகளுக்கு அப்பால் அதிகார சபைக்கு நிர்மாண கைத்தொழில கையளித்தல் இடம்பெற்றுள்ளது |
| 12 | சப்ரகமுவ அபிவிருத்தி நிர்மாணங்கள் மற்றும் இயந்திரங்கள் அதிகார சபையின் 05 ஆண்டுகளை விட பழமையான ரூபா 23 மில்லியனான கடன்பட்டோர் மீதி, மொத்த கடன்பட்டோரில் 38 சதவீதமாகும். | 2023 | அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதற்காக ‘‘தீர்ப்பனவாளர்’’ ஒருவரை நியமிப்பதற்காக பிரதான செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. வெளிவாரி நிறுவனங்களுக்கு உரிய மீதிக்காக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு உரித்துடைய 150 லிட்டர் எரிபொருள் அளவினை தீர்மானித்து 2022 ஜனவரி 03 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PS/SP/Circu/01/02/2020 கொண்ட ஜனாதிபதி சுற்றறிக்கைக்கு முரணாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில் 2023 நவம்பர் மாதம் தொடக்கம் சப்ரகமுவ வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவருக்கு ஒரு மாதத்திற்கு 300 லிட்டர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. | 2023 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | புதிய பெண் ஆளுநரின் அறிவுரையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மேலதிகமான கொடுப்பனவுகளை அறவிட்டிருக்கவில்லை என்பதுடன் தற்போது தலைவர் பதவியில் இருந்து விலகி இருந்தார். |
| 14 | சப்ரகமுவ மாகாணத்தில் மாகாண சபையில் 1994 இன் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை பிரமாணத்தின், 17 ஆவது பிரிவிற்கு அமைய பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம் குறித்தொதுக்கப்பட முடியாத போதிலும், 2023 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் மட்டும் 197 சந்தர்ப்பங்களில் | 2023 | சாசனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | குறித்த பிரிவுகள் திருத்தப்பட்டு புதிய சாசனம் வரைவு படுத்தப்பட்டுள்ளது. | தற்போதும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் குறித்தொதுக்கப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 19.5 மில்லியனான பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வேறு நபர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டிருந்தது. | | | | |
| 15 | சப்ரகமுவ மாகாணத்தில் மாகாண சபையில் 1994 இன் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை பிரமாணத்தின், 09 மற்றும் 19 ஆம் பிரிவிற்கு அமைய, பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம் இல்லாத 192 பேருந்துகளில் இருந்து ரூபா 3.5 மில்லியனான அனுமதிப் பத்திர கட்டணம் மற்றும் மிகை கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டி உள்ளது. | 2023 | சாசனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | தண்டப்பணம் மற்றும் மிகை கட்டணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ரூபா 0.6 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. |
| 16 | 168 பேருந்துகளில் 03 வருடங்கள் பழமையான ரூபா ஒரு மில்லியனான நிலுவை தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதே போன்று, 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 119 பேருந்துகளில் இருந்து ரூபா 6.4 மில்லியனான லொக் பத்திர வருமானமும், 86 பேருந்துகளில் | 2023<br>2022 | நிலுவைத் தொகையினைத் தாமதமின்றி அறவிடுதல் வேண்டும். | இந்த நிலுவைத் தொகை அறவிடப்பட்டு வருவதுடன் நிலுவையாக காணப்படுவதற்கான காரணத்தை கண்டறிவதன் ஊடாக ரத்து செய்தல் மற்றும் விடுவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2024 ஜூலை 31 ஆம் திகதியில் தண்டப்பணம் மற்றும் மிகை கட்டணமாக ரூபா 0.7 மில்லியனும் லொக் பத்திர வருமானமாக ரூபா 5.4 மில்லியனும் மாகாணங்களுக்கிடையிலான நுழைவு கட்டணமாக ரூபா 3.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாகாணங்களுக்கு இடையிலான நுழைவுக் கட்டணம் ரூபா 1.1 மில்லியன் தொகையும் அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. | | | | மில்லியனும் நிலுவையாக காணப்படுகிறது. |
| 17 | கொடகவெல பிரதேச வைத்தியசாலையில் ரூபா 3.4 மில்லியன் செலவில் 2021 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட எக்ஸ்ரே அறை நிர்மாணிக்கப்பட்ட நாள் தொடக்கம் மற்றும் 2019 ஆம் ஆண்டில் வேறு வைத்தியசாலையில் இருந்து கிடைத்த 02 எக்ஸ்ரே இயந்திரங்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டில் கிடைத்த ஜெனரேட்டர் என்பன கிடைத்த நாள் தொடக்கம் பயன்பாடின்றி காணப்படுகின்றன. | 2023 | சொத்துக்களைப் பயன்பாடின்றி வைத்தல் ஆகாது. | நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஜெனரேட்டர் அலகுக்கான மதிப்பீடொன்றை பெற்றுக் கொள்ளுதல். X-Ray இயந்திரத்துக்கான தேவையான உதிரி பாகங்களை அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. | மேலும் விளைவற்று காணப்படுகிறது. |
| 18 | கேகாலை ஆயுர்வேத வைத்தியசாலைக்குச் சொந்தமான 2020 ஆம் ஆண்டில் வேலைகள் முடிவடைந்த ரூபா 67 மில்லியன் பெறுமதியான கட்டணம் செலுத்தும் வாட்டினைக் கொண்ட கட்டிடம் 2024 ஜனவரி மாதம் வரையிலும் பயன்பாடு இன்றி காணப்பட்டது. | 2023 | சொத்துக்களைப் பயன்பாடின்றி வைத்தல் ஆகாது. | திருத்த வேலைகள் சில இடம்பெற்றுள்ளன. தேவையான உபகரணங்கள் ஓரளவு கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | மேலும் விளைவற்று காணப்படுகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 2000 - 2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தினுள் 12 கூட்டுறவு சங்கங்களுக்குப் பெற்று கொடுத்திருந்த கடன்களில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 11.4 மில்லியனான கடன் அறவிடப்பட வேண்டி இருந்தது. | 2023 | கடனை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடனை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன. | 2024 ஆகஸ்ட் 30ஆம் திகதியில் ரூபா 3.7 மில்லியன் அறவிட வேண்டி காணப்பட்ட |
| 20 | இரத்தினபுரி மாவட்டத்தின் 08 உள்ளூராட்சி நிர்வாக நிறுவனங்களில் 2023 நவம்பர் வரையில் விற்பனை செய்ய முடியாத 6,001,815 கிலோ கிராம் உரம் களஞ்சியசாலையில் தேங்கி உள்ளது. இதற்குத் தீர்வாக இயற்கை உரத்திற்கான சந்தையொன்றினை உருவாக்குவதற்காக தர உத்தரவாதத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உர செயலாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், மாகாண நிர்வாக நிறுவனங்கள் எதுவும் உர செயலாளர் அலுவலகத்தில் பதிவு செய்து அந்த உரத்தினை | 2023 | தர உத்தரவாதத்தினைப் பெற்றுக் கொண்டு இயற்கை உரத்தினை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | உர செயலாளர் அலுவலகத்தில் பதிவு செய்தல் தொடர்பாக அனைத்து உள்ளூராட்சி தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | எந்த ஒரு நிறுவனமும் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை. களஞ்சிய சாலையில் உரத் தொகை மேலும் காணப்படுகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விற்பனை செய்வதற்குத் தேவையான வழிவகை மேற்கொண்டு இருக்கவில்லை. | | | | |
| 21 | பலவின்ன முன்செய்த கொங்கிரீட் செயற்களத்திற்கு உரியதான 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் தீர்க்கப்படாத 01 வருடத்திற்கும் அதிகமான ரூபா. 3 மில்லியன் கடன் மீதி காணப்பட்டது. | 2023 | நிலுவைக் கடனை விரைவில் அறவிடுதல் வேண்டும். | அறவிட்டுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடன் தொகையில் ரூபா 0.1 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. |
| 22 | 2021 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா. 2 மில்லியனான 143 செவிப்புலக் கருவிகள் மற்றும் 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 5.6 மில்லியனான 44 ஊன்றுகோல்கள், 98 கொமட் சக்கர நாற்காலிகள், 04 சக்கர நாற்காலிகள், 22 கொமட் நாற்காலிகள், 84 நடைப்பயிற்சி சட்டகங்கள், 63 கைத்தாங்கல்கள் மற்றும் 72 காற்று மெத்தைகள் என்பன 2024 மார்ச் வரையிலும் நன்னடத்தைகளும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக நலன்புரி தினைக்கள களஞ்சியசாலையில் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | 2023 | தேவையானவர்களுக்கு உடனடியாக அந்தப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உபகரணங்களில் நூற்றுக்கு 50 ஐ விட கூடுதலான அளவொன்று மேலும் காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | கடந்த 03 வருட காலத்தினுள் ஊழல் மோசடி தொடர்பாக மாகாண கல்வி தினைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற 68 ஒழுக்காற்று முறைப்பாடுகளில் 20 முறைப்பாடுகள் கிடைத்த தினம் தொட்டு ஒரு வருடத்திற்கும் அதிகமா காலம் கடந்து இருந்த போதிலும், முடிவுறுத்தப்பட்டிருக் கவில்லை. | 2023 | ஒழுக்காற்று முறைப்பாடுகள் தாமதமின்றி முடிவுறுத்தப்பட வேண்டும். | குறித்த முறைப்பாடுகளை பரிசீலித்து அறிக்கை பெற்றுக் கொள்வதற்காக அந்தந்த வலய அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது | ஒழுக்காற்று நடவடிக்கைக ள் நிறைவடைந்து இருக்கவில்லை . |
| 24 | முன்பள்ளிகளைப் பதிவு செய்தல் முன்பள்ளி கல்வி அபிவிருத்தி அதிகார சபையின் முக்கிய பணியாக இருந்த போதிலும், 1481 முன் பள்ளிகளில் 495 முன் பள்ளிகளின் பதிவுகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிரு க்கவில்லை. | 2023<br>2022 | பதிவு செய்யப்படாத முன் பள்ளிகளைக் கண்டறிந்து இற்றைப்படுத்தப்பட வேண்டும். | முன் பள்ளிக்கான அளவுகோல்கள் பூர்த்தியாக்கப்பட்டத ன் பின்னர் நாளது வரையாக்கப்படுவதற் கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2024 ஆகஸ்ட் வரை பதிவு செய்யப்படாத முன் பள்ளிகள் 577 காணப்பட்டது. |
| 25 | வீதி அபிவிருத்தியின் கீழ் நிர்மாணங்களுக்காக 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது வழங்கிய முற்பணம் ரூபா 4.8 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியளவில் 15 ஆண்டுகளைக் கடந்திருந்தும், தீர்த்துவைக்கப்படவி ல்லை. | 2022<br>2021 | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தீர்ப்பனவிற்கு அனுப்புவதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | முற்பணத் தொகை அறவிடப்பட்டிரு க்கவில்லை. |

## 3.5 ஊவா மாகாண சபை

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | மிகை (பற்றாக்குறை) ரூபா | அபிப்பிராயம் ரூபா |
|---|---|---|---|---|---|
| **2021** | 91,842,613,965 | 1,608,270,777 | 90,217,571,820 | (2,205,982,794) | முனைப்பழியுள்ள் |
| **2022** | 88,219,947,816 | 1,046,809,389 | 87,167,999,819 | (3,328,737,257) | முனைப்பழியுள்ள் |
| **2023** | 85,386,842,340 | 867,319,641 | 84,519,522,699 | (2,943,894,498) | முனைப்பழியுள்ள் |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | ஆளுநர் மற்றும் ஆளுநரின் இணைப்பு செயலாளருக்கு மாதாந்தம் ஆகக்கூடிய எரிபொருள் அளவிற்கு உரிய படிகள் வழங்கப்பட்டுள்ள போது 2020 செப்தெம்பர் மாதம் முதல் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேலதிக எரிபொருளுக்காக முறையே 5,247.37 லீட்டர் எரிபொருளுக்கு ரூபா 909,322 மற்றும் 3,420 லீட்டருக்கு ரூபா 426,100 செலுத்தப்பட்டிருந்தது. | 2021 (1.5.1) | 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதிய பீஎஸ்/சீஏஎஸ்/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாணத்திற்கு வெளியே கடமைகளுக்கு கௌரவ அளுநர் பங்குபற்றும் போது மேலதிக எரிபொருள் பட்டியல்களை விசேடமாக கருதி மீளளிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் கௌரவ ஆளுனரினால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கமைய இணைப்பு செயலாளர் மாகாணங்களுக்கு புறம்பாக கடமைகளை நிறைவேற்றுவதற்கு சமர்பித்த எரிபொருள் பட்டியல்களும் மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. | கூடுதலாக செலுத்தப்பட்ட எரிபொருளுக்காக செலுத்தப்பட்ட தொகையை மீண்டும் மீள் நிரப்பிக் கொண்டிருக்கவில்லை. |
| 2 | 6 ஆவது ஊவா மாகாண சபையில் அங்கம் வகித்த மாகாண சபை உறுப்பினர்களின் | 2021 1.5.2(இ)i) | முறைகேடாக வழங்கப்பட்ட படிகளை மீள அறவிட வேண்டும். | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தை அரச திணைக்களங்கள் | சட்ட விதிகளின்படி செலுத்தப்படாத கொடுப்பனவுகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தனிப்பட்ட உத்தியோகத்தர்கள் 187 பேருக்கு, 2019 அக்டோபரில் அவர்களின் சேவையை முடிவடைவதன் பொருட்டு செலுத்தப்படும் இறுதிக் கொடுப்பனவாக மேற்கூறிய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர கொடுப்பனவில் 12 சதவீதம் வரை மற்றும் அவர்கள் பணியாற்றிய மாதங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 8,867,895 பணிக்கொடைகள் வழங்கப்பட்டன. இந்த கட்டணத்திற்கு எந்த சட்ட ஏற்பாடும் காணப்படவில்லை. | | | மற்றும் அமைச்சுகளுக்கு பயன்படுத்த முடியாது. இந்தச் சட்டம் அரச நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் சார்பாக நடைமுறையில் உள்ளதுடன், இந்தச் சட்டத்தின் விதிகளின்படி இந்த பணம் செலுத்தப்படவில்லை. | மீளப்பெறப்பட வேண்டிய போதிலும் அவை மீளப்பெறப்பட வில்லை. |
| 3 | பாடசாலைகளில் அவசர அனர்த்த முகாமைத்துவத்திற்காக ஊவா மாகாண கல்வி அமைச்சினால் ரூபா.2,257,872 தொகை வெலிமடை விஜய கல்லூரியில் 05 மீற்றர் உயரமும் 12 மீற்றர் நீளமும் கொண்ட தடுப்புச்சுவரின் மேல் முனையிலிருந்து பதுளை வீதி வெலிமடை நோக்கி 100 மி.மீ துருத்திக் கொண்டு அபாயகரமான நிலைமை ஏற்பட்டது. | 2021 )1.5.11அ( | ஆபத்தான நிலையை குறைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்புச் சுவருக்கு மேலே உள்ள முற்றம் தண்ணீர் புகாதவாறு அமைக்கப்பட்டுள்ள துடன், தடுப்புச்சுவரின் துருத்திக்கொண்டிருக்கும் பகுதியை மீண்டும் கட்ட ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | தற்போதும் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 6 ஆவது ஊவா மாகாண சபையின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், பெயரளவிலான பதவியில் இருந்த தவிசாளரின் தனிப்பட்ட ஊழியர்களின் 11 அதிகாரிகள் சார்பாக, 2019 ஒக்டோபர் 08 முதல் 2021 திசெம்பர் 31 வரை, ஊவா மாகாண சபைக்கு எந்தவொரு சேவையையும் பெறாமல், ரூபா.14,034,374 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது. 2022 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2022 யூலை 31 ஆந் திகதி வரை ரூபா 4,170,265 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2021 1.5.2 இ).ii) 2022 )1.5.2ஆ( | தவிசாளரின் தனிப்பட்ட பதவியணிக்கு பணம் செலுத்துவதற்கு எந்த சட்ட ஏற்பாடும் செய்யப்படாததால் செலுத்தப்பட்ட தொகைகள் திரும்பப் பெறப்பட வேண்டும். | 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 7(2) க்கு இணங்க, மாகாண சபைத் தவிசாளரின் பதவிக்காலம் முடிவடையாது மற்றும் தவிசாளரின் வரப்பிரசாதங்களை குறைக்க எந்த சட்ட ஏற்பாடும் இல்லை. | சட்ட ஏற்பாடுகள் இன்றி செலுத்தப்பட்ட தொகை மீண்டும் அறவிடப்பட வேண்டிய போதிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 5 | ஊவா மாகாணத்தின் ஆளனருக்கு ஒரு மேலதிக வீடாக பிரதம அமைச்சின் உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகை அறவிடப்படாது ஆளனரின் பதவியினர்களுக்காக பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2021 சனவரியிலிருந்து 2022 ஒக்தோபர் | 2022 1.5.1 | பிரதம அமைச்சின் உத்தியோகபுர்வ இல்லத்தினை பயன்படுததுவதற்காக வீட்டு வாடகை அறவிட வேண்டியதுடன் மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல்களை தீர்த்துவைப்பதற்காக மாகாண சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகளை வீட்டை பயன்படுத்திய பதவியினர்களிடமிரு | பிரதம அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லமானது அதற்குச் சமமான தரத்திலுள்ள ஏனைய நபர்கள் இல்லாததனால் மற்றும் இந்த உத்தியோகபூர்வ இல்லம் முறையான பராமரிப்புடன் பேணப்பட வேண்டியிருந்ததனால் மேற்கூறிய தேவைப்பாட்டினைக் | சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட நீர் மற்றும் மின் கட்டண சீட்டைகளை அறவிடப் பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வரையான காலம் தொடர்பாக அந்த பதவியணியினர்களினால் செலுத்த வேண்டிய ரூபா 314,761 தொகையான நீர்ப் பட்டியல் மற்றும் மின்சாரப் பட்டியல் செலவுகள் ஊவா மாகாணசபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | | ந்து மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்தில் கொண்டு ஆளுனருக்கு தற்காலிக பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| 6 | பொதுத்துறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது தனது நிறுவனங்களின் பதவியணியினர்களுக்கு செலுத்தப்படுகின்ற படிகளைத் தீர்மானிப்பதனை தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் ஊவா மாகாண சபையின் சபை செயலாளர் அலுவலகத்தின் 30 உத்தியோகத்தர்களுக்கு 2017 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2022 யூன் மாதம் வரை அவர்களின் தொடக்க சம்பளத்தில் 25 சதவீதமான வகையில் ரூபா 13,222,231 விசேட படி செலுத்தப்பட்டிருந்தது. | 2021 )1.5.2அ ( மற்றும்<br><br>2022 ) 1.5.2அ( | அரசாங்க கணக்குகள் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் சட்டரீதியான நிலைமையை தெளிவுபடுத்தப்படல் வேண்டும். | ஊவா மாகாண சபையின் 2017 இன் 03 ஆம் இலக்க நியதிச் சட்டத்தின் பிரகாரம் இப்படிகள் செலுத்தப்பட்டன. மாகாண சபை செயற்திறனாக அமுல்ப்படுத்தப்படாததனால் தற்பொழுது இந்த படிகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் உரிய நியதிச்சட்டம் தொடர்ந்தும் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. 2023-05-09 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டத்தின் போது இது சம்பந்தமாக காணப்பட்ட சட்டரீதியான அதிகாரத்தை பரீட்சிப்பதற்காக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அரசாங்க கணக்குகள் குழுவினால் | இதுவரை சட்ட ரீதியான நிலைமையை தெளிவுபடுத்தி இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. | |
| 7 | ஊவா மாகாண சபையின் உத்தியோகத்தர்களுக்காக ஐந்து மாடி வீட்டுத் தொகுதியினை நிர்மாணித்தல் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 131.2 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 88.1 மில்லியனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2018 மே 09 ஆந் திகதி வேலையை முவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த இந்த நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 49.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் இன்றுவரை நிர்மாண வேலைகள் முடிவுறத்தப்பட்டிருக்கவில்லை. நிர்மாண வேலைகளின் மிகுதி 45 சதவீதமான தாமதித்த வேலைப்களைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக ரூபா 155.2 மில்லியன் மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிருவாகத்திலுள்ள பலவீனங்களினால் இந்த நிர்மாண வேலையின் நிர்மாண நடவடிக்கைகளில் 04 ஆண்டுகள் தாமதம் | 2022 .1.5.14(ii) | ஒப்நதத்திற்குரிய மிகுதி வேலைகளை துரிதமாகப் பூர்த்தி செய்து உத்தியோகபூர்வ இல்லங்களை உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த நிர்மாண வேலை 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்ட்டிருந்ததுடன் கேள்வி வழங்குதல் ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக நீதிமன்ற நடைமுறையின் மூலம் நிறுத்தப்பட்டது. அதற்கிணங்க இரண்டாவது பெறுகை 2017-09-14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரை வெற்றிகரமாக நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2019 ஆம் ஆண்டளவில் ஒப்பந்தக்காரரின் அதிக சுகவீன நிலைமை மற்றும் அவரின் வியாபார நடவடிக்கைகள் முறிவடைந்ததன் (Bankrupt) காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது மூன்றாவது பெறுகை நடவடிக்கைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அப்போது நாட்டில் காணப்பட்ட நிலைமைக்கு இணங்க அவரினால் ஒருதலைப்பட்சமாக உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் போது மீண்டும் ஒரு | தற்போதும் நிர்மான வேலை நிறைவடைந்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது டன் மதிப்பீட்டினை அடிக்கடி திருத்தம் செய்யப்பட்டதன் அடிப்படையில் ரூபா 88.1 மில்லியனுக்கு நிர்மாண நடவடிக்கைகளை மடிவுறத்தக்கூடியதா கவிருந்த நிர்மாண வேலைகளுக்காக ரூபா 204.9 மில்லியனை செலவு செய்ய வேண்டிய ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க தொடக்க மதிப்பீட்டினை மிகைத்து இன்னும் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளைப் புர்த்திசெய்வதற்கு ரூபா 73.7 மில்லியனை மிகையாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | | | தடவை பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது . அதன் போது போது காணப்பட்ட நிதி நிலைமைக்கு இணங்க பகுதியளவில் மிகுதிச் செயற்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. 2023-05-09 ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அரசாங்க கணக்குகள் குழுவிற்கு காணப்பட்ட நிலைமை தெரியப்படுத்தப்பட்டது. | |
| 8 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் படியினைச் செலுத்தும் போது உரிய மாதத்தின் முதலாம் திகதி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள சாதாரண பெற்றோல் மற்றும் டீசல்களின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்பட வேண்டி இருந்தது. அந்த அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ளாது | 2022<br>1.5.18(II) | 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.3 (ii) ஆம் பந்தியின் பிரகாரம் மிகையாக செலுத்திய பணத்தை மீள அறவீடு செய்தல் வேண்டும். | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படியினைச் செலுத்துவது சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட எரிபொருள் வகை குறிப்பிடப்படவில்லை. அதற்கிணங்க விசேடமாக அரசாங்கத்தின் புதிய வாகனங்களுக்காக தொழில்நுட்ப சிபாரிசின் பிரகாரம் விசேட எரிபொருள் வகை நிர்ணயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் வாகனங்களுக்காக | கூடுதலாக கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டுள்ள தொகையை மீண்டும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமை பெற்றுள்ள 72 உத்தியோகத்தர்களுக்கு மாதத்தின் முதலாவது திகதியில் காணப்பட்ட ஒரு லீற்றர் எரிபொருளின் விலையாக சுப்பர் பெற்றோல் மற்றும் டீசல் களின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த எரிபொருள் படி கணிப்பீடு செய்யப்பட்டு 2009 சனவரியிலிருந்து 2022 யுலை மாதம் வரையான காலத்தினுள் ரூபா 7,842,436 மேதிகமாக எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. | | | அந்த எரிபொருள் வகையினை பயன்படுத்துதல் மேற்கொள்ளப்படும். எவ்வாறாயினும் கடந்த காலத்ததின் போது எரிபொருள் விலை அதிகரித்தலும் எரிபொருள் தட்டுப்பாடும் அதற்கிணங்க எரிபொருள் வகைகள் சந்தையில் காணப்படாமை என்பவற்றை கவனத்தில் கொண்டு 2022 யூன் மாத்திலிருந்து சாதாரண எரிபொருளுக்காக கொடுப்பனவு செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| 9 | மாகாண சபைகளில் ஆளுனர்களிற்கு மற்றும் அவர்களின் தனிப்பட்ட ஆளணியினரிற்கு கிடைக்க வேண்டிய வசதிகள் பற்றி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள போதும் அதற்கு இணங்காதவாறு தனிப்பட்ட ரீதியில் செலவிட வேண்டிய ரூபா 808,334 ஆன செலவினம் மாகாண சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | 2023 . 1.5.1அ **(i)** | சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட்டு செலவினை முகாமைத்துவம் செய்ய வேண்டும். | ஊவா மாகாண ஆளுனர் உத்தியோகபூர்வ இல்ல பயன்பாட்டிற்காக எரிவாயு வழங்கப்பட்ட போதும் இவை மதிப்பிற்குரிய ஆளுனரின் தனிப்பட்ட பாவனைக்காக அவரிற்கு வழங்கப்படவில்லை. | தனிப்பட்ட வகையில் மேற்கொள்ளப் பட வேண்டிய செலவுகள் அரசு நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப் பட்டதனால் அவற்றை மீண்டும் அறவிடப்பட வேண்டிய போதிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | எரிபொருள் பட்டியல் மீது மேற்கொள்ளப்படும் மீள் நிரப்பல் ஒன்றல்லாது மாதாந்த படியொன்றாக செலுத்த வேண்டுமெனவும், அங்கு குறித்த மாதத்தின் முதலாம் திகதி உள்நாட்டு சந்தையில் நிலவும் எரிபொருள் விலையின் பிரகாரம் படிகள் தீர்மானம் செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும், அதற்கு இணங்காதவாறு ஊவா மாகாண ஆளுனர் மற்றும் அவறின் ஒருங்கிணைப்பு செயலாளர், அந்தரங்க செயலாளர், ஊடக செயலாளர் மற்றும் பொது மக்கள் ஒருங்கிணைப்பு அலுவலரிற்கு 2022 ஆகஸ்ட் முதல் 2023 ஜுன் வரை விஷேட டீசலிற்காக எரிபொருள் கட்டணம் ரூபா 2,439,475 உம் தலைவருக்கு ரூபா 344,800 உம் கூடுதலாக செலுத்தப்பட்டு இருந்தது. | 2023<br>)1.5.1அ) ii) )1.5.2அ( | எரிபொருள் பாவனையை முகாமைத்துவம் செய்து கொள்வது வாகனம் பயன்படுத்தும் அலுவலர்களின் பொறுப்பாவதுடன் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஊவா மாகாண மதிப்பிற்குரிய ஆளுனர் மற்றும் அந்த ஆளணியினரிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஐரோபா மற்றும் ஜப்பானில் உற்பத்தி செய்த நவீன வாகனங்களிற்காக இலங்கையில் பயன்படுத்தும் எரிபொருளில் விஷேட டீசலை பயன்படுத்துமாறு உள்நாட்டு முகவர் நிறுவனத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள காரணத்தால் பராமரிப்பு மற்றும் சேவை செலவினத்தை குறைத்துக் கொள்ளும் தேவைப்பாட்டிற்காக விஷேட டீசல் விநியோகிக்கப்பட்டு உள்ளது. தங்களால் சுட்டிக் காட்டிய சுற்றறிக்கை பிரகாரம் ஏனைய அனைத்து வாகனங்களிற்கும் 2023 ஏப்ரல் முதல் சாதாரண டீசல் பயன்படுத்திய போதும், அந்த வாகனங்களின் எரிபொருள் தெறி தொகுதியினுள் (Injector system) வழுக்கள் ஏற்பட்டு வாயு பரீசோதனை கூட தோல்வியடையும் நிலைமை அவதானிக்கப்பட்டதாக குறிப்பிடுவதுடன், அதன் காரணமாக பராமரிப்பு செலவுகள் | எரிபொருள் சீட்டைகளுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது சாதாரண சந்தை விலையை அடிப்படையாக கொள்ள வேண்டிய போதிலும் சூப்பர் எரிபொருள் பயன்படுத்த தேவைப்பட்டால் மேலதிக தொகையை பெற்றுக்கொண்ட தரப்பினர் தாங்கிக் கொள்ள வேண்டும். அதன் பிரகாரம் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள தொகையை அறவிடப்பட வேண்டிய போதிலும் அற விடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகரிக்கும் நிலைமை அவதானிக்கப்பட்டது. | |
| 11 | ஊவா மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, கலாச்சார மற்றும் நெசவுக் கைத்தொழில் மற்றும் குடிசைக் கைத்தொழில் அமைச்சு ஊவா மாகாணத்தில் சுற்றுலா கவர்ச்சியை மேம்படுத்துவதற்காக பன்டாரவெல புகையிரத நிலையத்திற்கு அருகில் 03 கட்டங்களின் கீழ் காட்சி மேடையொன்றை மற்றும் வாடி வீடொன்றையும் நிர்மாணிக்க திட்டமிட்டிருந்தது. அதன் முதலாம் கட்டத்தின் கீழ் ரூபா 2,232,537 செலவில் காட்சி மேடையை மாத்திரம் நிர்மாணித்திருந்தது. 2023 நவம்பர் 20 திகதி அளவிலும் காட்சி மேடைக்கு உட்பிரவேசிக்கும் படிக் கட்டை அரைவாசி பூர்த்தி செய்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட போதும் மதிப்பீட்டின் பிரகாரம் படிக் கட்டுகளிற்கு பூரண பொறுமதியான ரூபா 552,543 தொகை செலுத்தப்பட்டிருந்த துடன் பின்னர் | 2023 ) 1.5.4அ( | ஏதிர்பார்த்த நோக்கத்ததை அடைந்து கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | வரிசை சுற்றுலா அமைச்சின் ஏற்பாட்டு தொகையின் கீழ் பண்டாரவெல பிரதேச செயலகத்தின் ஊடாக கருத்திட்டத்தை மேற்கொள்ளும் நோக்கில் மாகாண சபை சுற்றுலா அமைச்சின் ஒருங்கிணைப்பின் கீழ் 2022 ஆண்டில் இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. அதன் பிரகாரம் ஆரம்ப கட்டத்திற்காக கிடைத்த தொகையிலிருந்து 2022 ஆண்டில் கருத்திட்டத்தின் ஒரு பகுதியை பூர்த்தி செய்துள்ளதுடன் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்காக வரிசை சுற்றுலா அமைச்சின் மூலம் இவ்வாண்டினுள் முற்பணம் வழங்கப்படவுள்ளது. | செயல்திட்டம் தற்போதும் நடைமுறைப்ப டுத்தப்பட்டிருக் கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கருத்திட்ட முன்நடவடிக்கைகள் நிருத்தப்பட்டிருந்ததால் கருத்திட்ட வளவில் புற்கள் முளைத்திருந்ததுடன் செலவிடப்பட்ட ரூபா 2,232,537 தொகை சிக்கனமற்ற செலவாக காணப்பட்டது. | | | | |
| 12 | தியதலாவ, மஹியங்கன மற்றும் வெலிமட வைத்தியசாலைகளின் மருந்து களஞ்சியங்களில் 2023 ஒக்டோபர் 11 திகதி ரூபா 6,737,293 பெறுமதி உடைய காலாவதியான மருந்துகள், ரூபா 1,168,303 பெறுமதியான தரமற்ற மருந்துகள் மருந்துகள் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. | 2021 )1.5.5அ ( )i)<br><br>2023 ) 1.5.9அ ( (i) | காலாவதியான மற்றும் தரமற்ற மருந்துகளை ஒழுங்கு முறையாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மருந்துகள் காலாவதியாக முன்னர் பயன்படுத்த செயன்முறை தயாரிக்கப்பட வேண்டும். | 2019,2020,2021 மற்றும் 2022 ஆரம்ப பகுதிகளில் காணப்பட்ட கொவிட் தொற்றின் முன்னால் கொவிட் நோயிற்கு அநேக நபர்கள் சிகிச்சை பெற்றதுடன் சாதாரண வெளி நோயாளர் பிரிவு மற்றும் ஏனைய நோய்களிற்கு செலவாகும் மருந்துகளின் பயன்பாடு குறைவடைந்தன. முழுத் தீவிலும் இந் நிலைமை தாக்கம் செலுத்துவதுடன் அந்த மருந்துகளை பயன்படுத்தாது காலாவதியாகியுள்ளன.<br>அவ்வாறே சில மருந்துகள் உயிர் காப்பு சேவைக்கு முக்கிய தேவையாக உள்ளதுடன் அவற்றை காலாவதியாகும் திகதி வரை வைத்தியசாலையினுள் வைத்திருக்க வேண்டியுள்ளது.<br>அவ்வாறே,<br>• Atrophin sulphate<br>• Aminophilin | காலாவதியாவதற்கான காரணத்தை பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | போன்ற மருந்துகளை ஏனைய வைத்தியசாலைகளிற்கு அனுப்பி அதற்கு பதிலாக புதிய இருப்புகளை அழைப்பித்துக் கொள்வதுடன், இந்த மருந்துகள் அநேகமானவைகள் உயிர் காப்பு மருந்துகளாகும். தரம் அற்றவைகளாக இனங்கண்டு அறிக்கையிடப்பட்டுள்ள மருந்துகள் தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்து ஒதுக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தேவையான அறிவுரை வழங்கப்பட்ட பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களிற்கு பதுள்ளை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| 13 | இரட்டை கல்விப் பிரிவு அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தின் (SESIP) கீழ் “தமது பிரதேசத்தில் நிலவும் கைத்தொழில்களிற்கு உரியதாக அவற்றின் ஆக்கபூர்வதன்மையை மேம்படுத்த முடியுமான புதிய | 2023<br>**1.5.10 )அ ((ii)** | கருத்திட்ட நோக்கத்தின் பிரகாரம் ஏற்பாட்டை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக அறிவூட்டும் நிகழ்சித் திட்டமொன்றை 2023 திசெம்பர் 18 மற்றும் 19 இரண்டு நாள் அதிபர் மற்றும் புத்தாக்க விடய ஆசிரியர்களிற்கு நடாத்தப்பட்டது.<br>அங்கு மொ/கதரகம தேசிய பாடசாலை மாணவர்களினால் | ஏற்பாடுகள் கருத்திட்ட நோக்கத்தின் பிரகாரம் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முறைகள் பற்றி ஆய்வு செய்தல் மற்றும் அதன் பிரகாரம் பொருத்தமான கருவிகளை தயாரிப்பதன் ஊடாக பிரதேசங்களில் போன்றே மொத்த தேசிய உற்பத்தியை உயர்த்த பங்களிப்பு செய்ய மாணவப் பருவத்திலிருந்து இடமளித்தல்'' நோக்காகக் கொண்டு போன்றே பாடசாலை மாணவர்களின் ஆக்கரீதியான திறமை, தர்க்க ரீதியான கற்பனை, குழு செயற்பாடு, சிறந்த தொடர்பாடல் மற்றும் சவால்களிற்கு முகம் கொடுக்கும் திறமையை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு, பாடசாலைக்கு ரூபா 44,000,000 நிதி ஏற்பாடு வழங்கி 2023 ஜுலை 31 திகதியளவில் 1 ½ ஆண்டுகள் கடந்திருந்த போதும், எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்திருக்கவில்லை. | | | நீரில் உள்ள ஆகிரமிக்கத்தக்க மூலிகைகளை திரட்டும் கருவியொன்றை தயாரித்துள்ளதாகவும், மொ/மல்லாத்தாபல தேசிய பாடசாலை மாணவர்களினால் color light கருவியொன்றையும் ப/தர்மபால வித்தியால மாணவர்களினால் விவசாய உற்பத்தி சார்ந்த பரீட்சிப்பை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களின் விருப்பு காணப்படுவது ரொபோ தொழிநுட்பம் மற்றும் புதிய கணனி தொழிநுட்பத்திற்கு ஆவதுடன், பிராந்திய பிரச்சினைகளிற்கு தீர்வு தேடுவதற்கு ஈடுபட பிற்போக்கு காட்டுகின்றனர். அதன் பிரகாரம் அந்த ரொபோ தொழிநுட்பம் மற்றும் புதிய கணனி தொழிநுட்பத்திற்கு உரியதான ஆக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. | |
| 14 | ஊவா மாகாண கல்வி திணைக்களத்திற்குரிய 06 வலயங்களினுள் முறையாக ஆசிரியர் சமநிலை மேற்கொள்ளமை | 2023 ) 1.5.10ஈ ( )i) 2022 ) 1.5.5ஆ( | மாகாணத்தினுள் ஒழுங்கு முறையாக ஆசிரியர் சமப்படுத்தலை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து வலய கல்விக் காரியாலயத்தினால் வருடாந்த இடமாற்றம் தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. அதன் | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காரணமாக அங்கீகார ஆசிரியர் எண்ணிக்கையை விஞ்சி ஆசிரியர்களை நியமித்து மிகை ஆசிரியர் ஆளணியை பேணிச் செல்வதால் 382 கிராமிய பாடசாலைகளில் 2214 ஆசிரியர் பற்றாக்குறை நிலவியதுடன் 165 நகர்புற பாடசாலைகளில் 583 ஆசிரியர்களின் மிகை காணப்பட்டது. மியை ஆசிரியர்களிற்கு 2022 சனவரி 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை சம்பளமாக ரூபா 549,754,310 செலுத்தப்பட்டு இருந்தது. | | | மூலம் ஆசிரியர்களை சமப்படுத்த நடடிவக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 15 | பண்டாரவலை, வெலிமட கல்வி வலயம் 02 இற்குரிய சில பாடசாலைகளில் பிரதி மற்றும் உதவி அதிபர் பதவிகளில் பற்றாக்குறை காணப்பட்ட போதும் அந்த வலயங்களிலேயே சில பாடசாலைகளில் அங்கீகார எல்லையை விஞ்சி 26 பிரதி மற்றும் உதவி அதிபர் பதவிகளும் 2021 மே 01 முதல் 2023 ஒக்டோபர் 31 வரையான காலத்தினுள் மாத்திரம் சம்பளமாக ரூபா | 2023 ) 1.5.10ஈ ( **)ii)** | ஒழுங்கு முறையான ஆளணியினர் சமப்படுத்தலின் ஊடாக அந்த அதிபர்களின் ஆக்கபூர்வ மற்றும் வினைத்திறனான சேவையை பெற்றுக் கொள்ள இயலுமானவாறு வெற்றிடம் காணப்படும் பாடசாலைகளிற்கு இணைத்து சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாடசாலைகளில் அங்கீகார எல்லைக்கு அதிகமாக நியமிக்கப்பட்டுள்ள பிரதி மற்றும் உதவி அதிபர்களை இடமாற்ற தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிடுகிறேன். | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 43,762,329 செலுத்தப்பட்டு இருந்தது. | | | | |
| 16 | ஆதிபர் பதிவிகளில் பதில் கடமைபுரிந்த இலங்கை ஆசிரியர் சேவையின் அலுவலர்களை இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான இலக்கம் அமப/12/1101/530/0 35 மற்றும் 2012 ஆகஸ்ட் 08 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஊவா மாகாணத்தில் 10 வலயங்களிற்குரிய 118 பாடசாலைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள 120 ஆசிரியர்களை இலங்கை அதிபர் சேவையின் 2 வகுப்பின் II தரத்திற்கு நியமித்து இருந்ததுடன், நியமனக் கடித நிபந்தனை பிரகாரம் சம்பளம் பெற்றுக் கொள்ளும் உரிமை தவிர வேறு எவ்வித உரிமையும் கிடைப்பதில்லை என குறிப்பிட்டு இருக்கும் போது நிபந்தனைகளிற்கு இணங்காதவாறு 110 அதிபர்களிற்கு 2013 ஆண்டு முதல் 2023 ஒக்டோபர் 31 வரை அதிபர் படிகளாக ரூபா 22,972,094 செலுத்தப்பட்டிருந்த து. | 2023<br>) 1.5.10ஈ ( )iii) | நியமனக் கடிதம் சுற்றறிக்கையிற்கு பின்னர் விநியோகிக்கப்பட்டு உள்ளதால் நியமன் கடிதத்தின் நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் ED/4/60/01/13 மற்றும் 2009 பெப்ரவரி 26 திகதிய கடிதம் மூலம் அதிபர்களிற்கு விஷேட படிகளை வழங்குவது தொடர்பாக அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அத்திகதி முதல் அதிபர்களாக கடமையாற்றும் அதிபர் தரமுடைய மற்றும் தரமற்ற எனினும் அதிபர்களாக பதில் கடமைபுரியும் உப ஆசிரியர்களிற்கு மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் ED/4/60/01/அ.படிக ள்/2017 மற்றும் 2017 மார்ச் 14 திகதிய கடிதம் மூலம் மற்றும் சுற்றறிக்கை இலக்கம் 16/2017 பிரகாரம் அதிபர்களிற்காக வழங்கும் விஷேட படிகள் திருத்தப்பட்டுள்ளன. அந்த திருத்திய படிகள் அதிபர்களான கடமையாற்றும் மற்றும் அப் பதவிகளில் பதில் கடமைபுரியும் | மேலதிகமாக கொடுக்கப்பட்ட அதிபர் படிகளை அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிரு க்கவில்லை. |

அலுவலர்களிற்கு 2017 ஆண்டு மார்ச் மாதாம் முதல் செலுத்தப்பட்டுள்ளது . ஊவா மாகாண ஆளுனரின் கையொப்பத்துடன் கூடிய ஊவா மாகாண பிரதான செயலாளரிற்கு அனுப்பப்பட்டுள்ள இலக்கம் 1/3/7-ix மற்றும் 2018 செப்டம்பர் 29 திகதிய கடிதம் மூலமும் பதில் கடமைபுரியும் அதிபர்களிற்காக விஷேட படிகளை செலுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் அனைத்து வலய கல்வி பணிப்பாளர்களிற்கும் பிரதியுடன் ஊவா மாகாண கல்வி பணிப்பாளரிற்கு அனுப்பப்பட்ட இலக்கம் 9/ஆ/8 மற்றும் 2018 ஒக்டோபர் 03 திகதிய கடிதம் மூலமும் பதில் கடமைபுரியும் அதிபர்களிற்கு விஷேட படிகயை செலுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறித்த சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு அதிபர்களிற்காக அதிபர் படிகள் செலுத்தப்பட்டுள்ளன

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | ஊவா மாகாணத்தினுள் ஆய்வுகூடம் அற்ற 27 பாடசாலைகளிற்காக 32 ஆய்வுகூட உதவி ஊழியர்களையும், நூலகம் இல்லாத 14 பாடசாலைகளிற்கு 17 நூலக உதவி ஊழியர்களையும் நியமித்து அந்த ஊழியர்களை நியமித்த நோக்கத்தை அடைந்து கொள்ளாது விளைவற்ற ஆளணியினரை பேணிக் கொண்டு 2022 சனவரி 01 முதல் 2023 திசம்பர் 31 வரையான காலத்தினுள் அவர்களிற்கு சம்பளமாக ரூபா 28,621,714 செலுத்தப்பட்டிருந்தது. | 2023<br>) 1.5.10ஈ ( )iv) | ஆய்வுகூட உதவி ஊழியர்கள் மற்றும் நூலக உதவி ஊழியர்களை அந்த வசதிகள் காணப்படும் பாடசாலைகளில் சேவைக்காக ஈடுபடுத்த வேண்டும். | .<br>ஆய்வுகூட உதவி ஊழியர்கள் மற்றும் நூலக உதவி ஊழியர்களை ஆய்வுகூடம் மற்றும் நூலகங்கள் செயற்படும் பாடசாலைகளிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 18 | காணிகளை நீண்ட காலம் குத்தகை வழங்கியதற்காக காணி ஆணையாளர் நாயகம் வர்த்தக அடிப்படையில் குத்தயைாக வழஙய்கியிருந்த 122 நீண்ட கால குத்தகை அனுமதிப் பத்திரங்களிற்குரிய 122 குத்தகைதாரர்களிடம் இருந்து 2023 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 139,242,705 ஆன | 2021,2022 மற்றும் 2023<br>) 1.5.14அ( | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 122 குத்தகைதாரர்கள் தொடர்பாக வெவ்வேறாக குத்தகை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், குத்தகை செலுத்துவதனை புறக்கனிப்பவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இந்த திணைக்களத்திற்கு இல்லாததால் காணி ஆணையாளர் நாயகத்திற்கு | நிலுவைத் தொகையை அறவிட சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிலுவை தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | முன்நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளன. | |
| 19 | ஊவா மாகாண சபையின் அமைச்சு, திணைக்களம் மற்றும் அலுவலகங்களிற்கு வெளியில் இடமாறிச் சென்ற, அலுவலர்களிடம் இருந்து ரூபா 36,203,255 ஆன மீதி மற்றும் மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற, பணித் தடை செய்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற ஏனைய அலுவலர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 22,378,751 கடன் மீதி தொடர்பாக தாபன விதிக் கோவை XXIV அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் 2019 ஜுன் 27 திகதிய இலக்கம் 05/2019 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 03(அ)(ஆ)(உ) ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ) 1.5.19இ( | தாபன விதிக் கோவை XXIV அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீதிகளை அறவிட மாகாண சபைகளிற்கு இடையில் மற்றும் மத்திய அரசை அறிவூட்டி கலந்துரையாடி உள்ளதுடன் அம் மீதிகள் படிக்படியாக தீர்க்கப்படுகின்றது. அவ்வாறே மாகாண சபை அலுவலர்கள் இடமாறிச் செல்லும் சந்தர்ப்பத்தில் மொத்த கடன் மீதியையும் ஒரே முறையில் அறவிட நடவடிக்கை எடுக்க அனைத் நிறுவனங்களைளும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளை ஓய்வூதிய திணைக்களத்தின் ஊடாக தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதும் அத் திணைக்களத்தில் காணப்படும் திரவத்தன்மை பிரச்சினை காரணமாக கடன் தீர்ப்பனவு தாமதித்துள்ளது. மரணித்த மற்றும் கடமையை விட்டுச் சென்ற அலுவலர்களின் கடன் மீதியை தீர்த்துக் கொள்வதற்கு உரிய அறிவுரை குறித்த நிறுவனங்களிற்கு | அறவிடப்பட வேண்டிய தொகை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வழங்கப்பட்டுள்ளது. | |
| 20 | ஊவா மாகாண சபையின் அமைச்சு, திணைக்களம் மற்றும் 07 அலுவலகங்களில் இருந்து இடமாறி வந்த அலுவலர்களிடம் இருந்து ரூபா 31,104,029 ஆன கடன் மீதியை தீர்த்திருக்கவில்லை. | 2023 ) 1.5.19ஈ ( (i) | கடன் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏனைய மாகாண சபைகள் மத்திய அரசு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து வந்த அலுவலர்களின் கடன் மீதிகள் இதனுள் உள்ளடங்கும். இந்த மீதிகளை தற்போது படிப்படியாக தீர்க்கப்படுகின்றது. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 21 | ஊவா மாகாண சபைக்குரிய 04 நிறுவனங்களின் பெயரில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்துள்ள 12 வாகனங்கள் மற்றும் 04 மோட்டார் சைக்கில்களின் பௌதீக இருப்பை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | 2023 )1.5.20ஈ( | குறித்த வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கில்களின் பௌதீக இருப்பை அல்லது பராதீன தகவல்களை உறுதி செய்வதற்கு உரியதான சான்றுகளை கணக்காய்விற்கு அறிக்கையிட வேண்டும். | **80-9282, 36-0136, 71-4458, 42-0319, 42-2182, 42-4236 மற்றும் GB 4823 கொண்ட வாகனங்கள்** வருமான அனுமதிப் பத்திரம் பெறப்படாததால் இந்த வாகனம் பயன்படுத்தப்படவில்லையெனவும் உற்பத்தி ஆண்டின் பிரகாரம் இதற்கு 10 ஆண்டுகளிற்கு முந்திய காலத்தினுள் இந்த வாகனங்களை பராதீனத்திற்காக அனுப்பப்பட்டிருக்க முடியுமாவதுடன் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் தகவல்கள் நாளாதுவரையாகாது இருக்க இயலும். **53-5063 கொண்ட வாகனம்** 53-5060 முதல் 53-5080 வரை அனைத்து வாகனங்களும் இருந்துள்ளது உள்ளூராட்சி | இந்த வாகனங்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

நிறுவனங்களிற்கு 1993 ஆண்டில் சபைகளிற்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்கள் தவிர ஏனைய அனைத்து வாகனங்களும் 2012 ஆண்டு முதல் பல சந்தர்ப்பங்களில் பராதீனம் செய்யப்பட்டுள்ளன. கடந்த காலங்களினுள் யுத்த நடவடிக்கைகளிற்கு இலங்கை தரைப்படையினால் மாகாண சபைகளில் காணப்பட்ட இந்த வாகனங்களை பயன்படுத்தியுள்ளதுடன் அந்த வாகனங்களை மீண்டும் ஒப்படைக்கும் போது பழுதடைந்த நிலையில் காணப்பட்டதால் அந்த வாகனங்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்களின் பதிவு சான்றிதழ் அலுவலகத்தில் இருந்த போதும் வாகனங்களை மீள் ஒப்படைத்திருக்கவில்லை. அதனால் அக்காலத்தினுள் வாகனம் அழிவடைத்திருக்க முடியுமென அவதானிக்கப்படுகின்றது.

**GG-3905, XZ-9423 மற்றும் XZ-9439 கொண்ட வாகனங்கள்**

நிலையான சொத்துக்கள் தொடர்பான தரவுகளை கணனி தொகுதிக்கு உட்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**HK, 5808, RW 0501 மற்றும் SP 1349 கொண்ட வாகனங்கள்**
ஓப்படைப்பை மாற்றுவதற்கு அறிவுறுத்த குறிப்பு இடப்பட்டுள்ளது.

**17-1012, 16-7667**
10 ஆண்டுகளிற்கு முந்திய காலத்தினுள் இந்த வாகனங்களை பராதீனத்திற்கு உட்பட்டுள்ளதுடன் மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் தகவல்கள் நாளாதுவரையாகாது இருக்க இயலும்.

## 3.6 மத்திய மகாண சபை

| | மொத்த சொத்து ரூபா. | மொத்த பொறுப்பு ரூபா. | உரிமையாண்மை ரூபா. | வரிக்கு முந்திய இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 11,293,518,648 | 6,822,755,407 | 4,470,763,241 | (40,297,646,972) | முனைப்பழியுள்ள |
| **2022** | 9,257,890,058 | 7,664,707,228 | 1,593,182,829 | (45,730,819,954) | முனைப்பழியுள்ள |
| **2023** | 13,755,650,851 | 12,093,224,677 | 1,662,426,174 | (45,340,002,526) | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆறிக்கையின் வருடம் | தலைமை கணக்காய்வு அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிறுனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதியில் பரிந்துரை அமுல்படுத்தும் நிலைமை. |
|---|---|---|---|---|---|
| 1 | 2009 யூன் 17 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 09/2009 (i) மற்றும் 2021 ஒக்தோபர் 01 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 02/2021 (v) இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்கள் சேவைக்கு வருகை தரல் மற்றும் வெளியேறல், பெற்றுக் கொள்ளப்பட்ட விடுமுறைகள் போன்ற தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் இல்லாது ஆளுனரின் தனிப்பட்ட பதவியணியின் 09 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 1,990,147 ஆன சம்பளம் மற்றும் வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்த | 2021 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் வருகை தரல் மற்றும் வெளியேறல், பெறப்பட்ட விடுமுறை போன்றவற்றைப் பற்றிய ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு, அதற்கேற்ப ஊதியம் செலுத்தப்படுகிறது என்பதை அறியத்தருகின்றேன். | வழங்கப்பட்ட ஊதியம் தொடர்பாக வருகை தரல் , வெளியேறல் மற்றும் விடுமுறைகள் பற்றிய எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தல் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போது வருகை தரல் பற்றிய பதிவேடு பராமரிக்கப்படுவதுடன் கைரேகை இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை. |

து.

| | | | | |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு மற்றும் 03/202 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் XIII ஆம் பந்தியின் பிரகாரம் உண்மையாக சேவையில் ஈடுபட்டுள்ளதாக உறுதிப்படுத்திக் கொள்ளாது ஆளுனரினால் அலுவலக வளவில் பல்வேறு உத்தியோகபூர்வ ஒன்றுகூடல் மற்றும் கலந்துரையாடல்களுக்காக பங்குபற்றியிருந்த திகதியில் காலி, கொழும்பு, நுவரெலியா ஆகிய கண்டி நகரத்திற்கு தூரத்திலுள்ள வெளிப் பிரதேசங்களில் ஆளுனருடன் உத்தியோகபூர்வ வாகனங்களினதும் பாதுகாப்பு வாகனங்களினதும் சாரதிகளால் சமர்ப்பித்த ஒட்டுதல் பொழிப்புக்களுக்காக முறையான மேற்பார்வையின்றி பிழையாக மேலதிக நேரப்படிகளும் இணைந்த படிகளுமாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,206,215 தொகை | 2022 | தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கையின் பரிகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகபூர்வ காரின் ஓட்டுநர் மற்றும் பாதுகாப்பு காரின் ஓட்டுநர் ஆகியோர் கௌரவ ஆளுநரின் திட்டமிடப்பட்ட கடமைகள் மற்றும் அவசரகால கடமைகளுக்குப் பணியமர்த்தப்பட்டுள்ளனர், மேலும் அவர்களின் கடமைகள் கௌரவ ஆளுநரின் ஒருங்கிணைப்புச் செயலாளரால் பரிந்துரைக்கப்பட்டு பணம் செலுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளன. கௌரவ ஆளுநர் அவர்களே, அலுவலக வளாகத்தில் பல்வேறு உத்தியோகபூர்வ சந்திப்புகள் மற்றும் கலந்துரையாடல்களில் பங்கேற்கும் சில சந்தர்ப்பங்களில், உத்தியோகபூர்வ வாகனம் சிறப்பு நோக்கங்களுக்காக கண்டி நகரத்திலிருந்து காலி, கொழும்பு, நுவரெலியா போன்ற தூர இடங்களுக்கு அனுப்பப்பட்டது, ஆனால் இவை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டு இருந்தன. இதன் பின்னர் சாரதிகளின் மேலதிக நேர கொடுப்பனவுகள் மற்றும் பயணச் செலவுகள் கொடுப்பனவுகளின் போது விசேட | மேலதிக நேர மற்றும் இணைந்த படி கொடுப்பனவுகள் தவறாக செலுத்தப்பட்டமைக்கு பொறுப்பான தரப்புக்களில் இருந்து மீள அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆளுனரின் தனிப்பட்ட பதவியணியிலுள்ள சாரதிகளுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | | | கவனம் செலுத்துமாறு கௌரவ ஆளுநரின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அறியத்தருகின்றேன். | |
| 2 | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய சீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றறிக்கையின் 7.3 ஆம் பந்தியின் ஆலோசனைகளுக்கு இணங்க ஆளுனர் பயன்படுத்துகின்ற 02 உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு 2020 மே மாதத்திலிருந்து 2022 ஏப்ரல் மாதம் வரை 24 மாத காலப்பகுதிக்காக எரிபொருள் படிக்கு மேலதிகமாக மேலதிக எரிபொருள் படியாக 6720.21 லீற்றர் தொடர்பாக ரூபா 930,020 செலுத்தப்பட்டிருந்தது. | 2022 2023 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 செப்டம்பர் 22, அன்று நடைபெற்ற ஆளுநர் ஒன்றியத்தின் முடிவின்படி, மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் மாகாணத்திற்கு வெளியே கடமைக்காகப் பயணிக்கும்போது அதற்காக செலவாகும் மேலதிக எரிபொருளுக்கான தொகை மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செலவழிக்கப்படாத ரூபா 930,020 மேலதிக எரிபொருள் கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களிடமிருந்து மீள அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 3 | 2009 யூன் 17 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 09/2009 (i) மற்றும் 2021 ஒக்தோபர் 01 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 02/2021 (v) இன் 07 ஆம் பந்தியின் | 2021 | சுற்றறிக்கையின் பிரகாரம் வருகை தரல் மற்றும் வெளியேறல் பற்றிய அறிக்கை பேணப்படல் வேண்டும். | கடந்த ஆண்டுகளில் போன்று, மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிலும், தனிப்பட்ட பதவியணியின் சம்பளம் மற்றும் ஊதியம் செலுத்தப்பட்டு இருப்பது, ஒவ்வொரு மாதமும் தனியார் | வழங்கப்பட்ட ஊதியம் தொடர்பாக வருகை, வெளியேறல் மற்றும் விடுமுறைகள் பற்றிய எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தல் எதுவும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் ஊழியர்கள் சேவைக்கு வருகை தரல் மற்றும் வெளியேறல், பெற்றுக் கொள்ளப்பட்ட விடுமுறைகள் போன்ற தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் இல்லாதும், மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் எவ்வித கடமைப் பணிகளுமின்றி இருக்கும் வேளையிலும் மத்திய மாகாண சபையின் தவிசாளரின் தனிப்பட்ட பதவியணியின் 13 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 7,260,274 ஆன சம்பளம் மற்றும் வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | | | பதவியணியின் வருகை தரல் குறித்து கௌரவ தவிசாளரினால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தலின் படி என்பதுடன் 2022 ஆகஸ்ட் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் 18வது பொதுவான படிவத்தின்படி, தவிசாளரின் தனிப்பட்ட பதவியணியின் வருகை தரல் மற்றும் வெளியேறல் பதிவேடு பராமரிக்க அறிவுறுத்தப்பட்டது. | சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போது வருகை பதிவேடு பராமரிக்கப்படுவதுடன் கைரேகை இயந்திரம் பயன்படுத்தப்படுவதில்லை. |
| 4 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை வருமான கணக்கில் 04 விடயங்களுக்குரிய ரூபா 135,833,299 ஆன நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாத நிலுவை வருமானம் ரூபா 28,513,534 ஆகும். அது மொத்த | 2021<br>2023 | நிலுவை வரி உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடனடியாக நிலுவை வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணம் உள்ளது. | 2024 ஜுன் 30, 2024 திகதிக்கு நிலுவை காணி வரி ரூபா.93,068,441 வும், நிலுவை முத்திரை வரி, கனிம வரி மற்றும் விற்றுமுதல் வரி ரூபா .81,647,146 வும் அறவிடப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருமானத்தில் 21 சதவீதம் ஆகும். 2023 | | | | |
| 5 | மத்திய மாகாண வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம், 2020 நவம்பர் 11 திகதிய மாகாண நிதி விதி 422 (பெறுகைகள் குழு எல்லை திருத்தங்கள்) மற்றும் பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் 3.5.1 பிரிவுகளுக்கு முரணாக திணைக்கள தலைவரின் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,587,200 ஆன நேரடி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டு பெறுகைகளின்போது 05 நிறுவனங்களுக்கு குறையாத எண்ணிக்கையில் விலைமனுக்கள் கோரப்பட வேண்டும் என்ற போதிலும் 02 நிறுவனங்களில் மிகவும் மட்டுப்படுத்த விலைமனுக்கள் கோரப்பட்டு ரூபா 1,339,380 தொகைக்கு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2021<br>2023 | நிதி விதிமுறை மற்றும் உரிய கடிதத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டில், மாகாண நிதி விதி 457 (அ) க்கு இணங்க மத்திய மாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து உலர் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில், 02 அரச சார்ந்த நிறுவனங்களான சதொச மற்றும் வ.ப. பலநோக்கு கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் இருந்து விலைமனுக்கள் கோரப்பட்டு குறித்த கொள்வனவுகள் செய்யப்பட்டுள்ளன. | மாகாண நிதி விதி மற்றும் பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்காத வகையில் கொள்வனவுகள் செய்யப்பட்டுள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 2013 தொடக்கம் 2022 வரையிலான காலப்பகுதிக்குள் 06 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தம் ரூபா 9,704,687 ஆன 15 மிகைக்கட்டணங்களை அறவிடுவதற்கு சட்டநடவக்கைகள் எடுப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் இறுதித் தினமாகும் வரை கூட உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | மிகைக் கட்டணங்கள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவீடுகளின் முன்னேற்றத்தின் படி மேலும் அறவிடவுள்ள தொகை ரூபா 9,704,687.32 வாகும். | மிகைக் கட்டணங்கள் பொறுப்புக் கூற வேண்டிய தரப்புக்களிலிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 7 | மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் அங்குராங்கெத்த வலயக் கல்வி அலுவலகத்தில் சம்பளம் செலுத்தும் போது இடம்பெற்ற ரூபா 14,239,938 தொகை நிதி மோசகளுக்குரிதாக ரூபா 3,816,950 தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போதும் அறவிடப்படாமல் காணப்பட்டது. 2023 திசெம்பர் 31ஆம் திகதியாகும் போதும் குறித்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபனவிதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்ககைள் எடுக்கப்படவில்லை. | 2021<br>2022<br>2023 | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆசிரியர் சேவையின் இருவர் மற்றும் பாடசாலை தொழிலாளருக்கு முறைப்படி குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டு ஒழுக்காற்று விசாரணைகளுக்காக விசாரணை சபை நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக விசாரணைகள் தாமதமாகியுள்ளன. 07 மேற்பார்வை நிலை அதிகாரிகள் தொடர்பாக, தாபன விதிக் கோவையில் II தொகுதியின் XLVIII அத்தியாயத்தின் 25 வது பிரிவின்படி, ஒரு நபருக்கு 2023 நவம்பர் 07 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் கடுமையாக எச்சரிக்கப்பட்டார் | பொறுப்புக்கூற வேண்டிய தரப்புக்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,789,300.84 தொகையில் தற்போது இறந்த ஊழியரிடமிருந்து ரூபா.767,215.75 அறவிடவுள்ளது. அந்தக் கடன் தொடர்பில் அடுத்த கட்ட நடவக்கைகள் பற்றி ஆலோசனை பெறுவதற்கு கல்வி மற்றும் முதுலமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. தாபன விதிக் கோவையின் II |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மற்றும் மூன்று நபர்களுக்கு 2023 ஒக்டோபர் 16 திகதியிட்ட கடிதம் மூலம் குறுகிய ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் தண்டிக்கப்பட்டனர். | ஆவது வகுதியின் XLVIII ஆவது அத்தியாயத்தின் 25 ஆவது பிரிவின் பிரகாரம் மூன்று அதிகாரிகளுக்கு குறுகிய நடவடிக்கையின் படி தண்டனை வழங்கப்பட்டது. மற்றும் ஒரு அதிகாரிக்கு கடுமையாக எச்சரித்து கடிதம் வழங்கப்பட்டது. ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக 3 பேரின் ஒழுக்காற்று விசாரணை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 8 | நிதி விதிமுறை 179.1 இன்படி காசோலையை பணமாக மாற்றி உரிய பெறுநருக்கு நேரடியாக செலுத்தும் இயலுமை இருந்தும் மாகாண கல்வித் திணைக்களத்தின் கலேவெல மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபரினால் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை பகல்நேர காவலாளி, இரவுநேர காவலாளி மற்றும் சுத்தம் | 2023 | நிதி விதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | (4)104இன்படி விசாரணை நடத்தப்பட்ட வண்ணம் உள்ளது. எதிர்காலத்தில் கணக்காய்வுக்கு அறிவிக்கப்படும். | இது தொடர்பில் நி.பி. (4)104 இன்படி விசாரணை நடத்தப்பட்டு அந்த அறிக்கை அங்கீகாரத்திற்காக முதலமைச்சு மற்றும் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யும் பணியாளர் ஆகிய பதவிகள் வகிக்கும் மூன்று நபர்களுக்குரிய மொத்த வேதனமான ரூபா 1,843,850 தொகையை 23 சந்தர்ப்பங்களில் பாடசாலையின் பகல்நேர காவலாளியின் பெயரில் பாடசாலையின் அபிவிருத்தி கணக்கில் இருந்து காசோலைகளை எழுதி செலுத்துதல். | | | | |
| 9 | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை யின் XXX ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாம ல் மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 12 உத்தியோகத்தர்கள் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 சனவரி வரையான காலத்தில் வ/ப மத்திய மாகாண கல்வி சேவை தயாரித்தல் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை கூட்டங்களுக்கு தமது கடமை நேரத்தில் பங்குபற்றி கூட்டுமொத்தமாக ரூபா 3,674,354 படிகளை | 2023 | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடாத்தப்படும் விசாரணைகள் முடிவடைந்த பின்னர் உடனடியாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | ஒரு அதிகாரியிடம் இருந்து ரூபா 219,000 தொகை மிகைக் கட்டணமாக அறவிடப்பட்டு ள்ளது. மீதமுள்ள 11 அதிகாரிகள் தொடர்பான விசாரணைகள் முடிக்கப்படவில் லை. |

பெற்றிருந்தனர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கம்பளை மற்றும் ஹற்றன் வலயங்களுக்குரிய பாடசாலைகளில் சேவையாற்றிய ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் 27 பேர்கள் வெளிநாட்டு விடுமுறை வழங்கி வெளிநாடு சென்றமை மற்றும் பதவியை விட்டுச் சென்றிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 854,912 சம்பளம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 2023 | மேலதிகமாக செலுத்திய சம்பளப்பணத்தை அதற்கு பொறுப்பான தரப்பிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். | பணம் அறவிடுதல் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதாக. | 02 அதிகாரிகளிடம் இருந்து ரூபா 89,443 தொகை மட்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 11 | மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கலேவேல மத்திய மகா வித்தியாலயத்தில் மீளாய்வாண்டிலும், கடந்த 02 ஆண்டுகளின் போதும் தனியார் நிறுவனமொன்றிலிருந்து கட்டிடப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான செலுத்துதலாகக் குறிப்பிடப்பட்டு போலியான பட்டியல் தயாரித்து பாடசாலை அபிவிருத்தி நிதியத்தில் இருந்து கூட்டுமொத்தமாக ரூபா 710,533 ஆன | 2023 | நிதி முறைகேடுகள் குறித்து, திணைக்கள விசாரணை நடத்தி, உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பில் 104(4) விசாரணை நடைபெறுகின்றது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு கணக்காய்வுக்கு அறிவிக்கப்படும். | நி.பி. 104(4) விசாரணை அறிக்கை முதலமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 07 காசோலைகள் பாடசாலையின் அப்போதைய அதிபரினதும், அவரின் மனைவியினதும் வங்கிக் கணக்குகளுக்கு செலவுவைத்து மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | | |
| 12 | மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் க/புனித அந்தோணி மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் பாடசாலைக்குரிய வேன் வண்டியைப் பயன்படுத்தி 2018 சனவரி 15 ஆந் திகதி முதல் 2023 யூன் 16 ஆம் திகதி வரை பாடசாலைக்கு வருவதற்கும் செல்வதற்கும் நாளொன்றுக்கு 04 பிரயாணத் தடவைகள் வீதம் ஒரு நாளைக்கு 112 கிலோ மீற்றர் வீதம் பிரயாணம் செய்வதற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் மூலம் அங்கீகாரம் இன்றி கூட்டுமொத்தமாக ரூபா 1,283,037 தொகை அண்ணளவான தொகையொன்று எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்தது | 2023 | நிதி விதிமுறைகளுக்கு அமைய மற்றும் தாபன விதிக் கோவை ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் 104(3) விசாரணை நடைபெறுகின்றது. அதன்படி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | இது தொடர்பில் நி.பி. 104(3) அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் படி, நி.பி. 104(4) பிரகாரம் விசாரணை நடாத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி நி.பி. 104(4) விசாரணைக்காக விசாரணை சபை நியமிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின 2018 முதல் 2022 வரையான காலப்பகுதியில் க.பொ.த.(சா.தரம்) பரீட்சைக்குத் தோற்றியிருந்த மத்திய மாகாண மாணவர்களின் பெறுபேறுகளின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் மாகாண வெற்றி மட்டம் 05 இற்கும் 08 இற்கும் இடையிலான இடத்திற்கு உட்பட்டிருந்த மேலும் அந்தப் பெறுபேறுகளின் பிரகாரம் மத்திய மாகாணத்தில் 15 வலயங்களில் 10 வலயங்களின் பெறுபேறுகள் நாடளாவிய வலய மட்டத்தின் பிரகாரம் 50 ஆவது இடத்தில் உயர்வடைந்திருந்தது. | 2023 | மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மத்திய மாகாணத்தினால் பெறப்பட்ட 72.73 வீதமான பெறுபேறு குறைந்த அளவு மட்டமொன்றல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். 50 வது இடம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். சித்தியடையாத மட்டத்திலுள்ள மாணவர்களை சித்தியடையச் செய்ய வலயக் கல்விப் பணிப்பாளருடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | எதிர்வரும் பரீட்சைகளின் பெறுபேறுகளை மேம்படுத்தவும், நாடலாவிய திறமை மட்டத்தை உயர்த்தவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |
| 14 | மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் 2018 முதல் 2022 வரையான காலப் பகுதியில் நடைபெற்ற மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மத்திய மாகாணத்திற்கு தோற்றியிருந்த மாணவர்களை 70 புள்ளிகளைப் விஞ்சி பெற்றுக்கொள்ளும் சதவீதத்தின் பிரகாரம் மத்திய மாகாணம் | 2021<br>2023 | நாடலாவிய திறமை மட்டம் மற்றும் வலய மட்டத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புள்ளிகள் 70 க்கு குறையும் சதவீதம் ஆண்டுதோறும் 19 முதல் 25 சதவீதம் வரை உள்ளது. இந்த சதவீதத்தை குறைக்க ஆண்டுதோறும் பல்வேறு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தேசிய அளவோடு ஒப்பிடும் போது இது 2.1 என்ற சிறிய அளவாகும், இது குறிப்பிடத்தக்க குறைவாக கருத | எதிர்வரும் பரீட்சைகளின் பெறுபேறுகளை மேம்படுத்தவும், நாடலாவிய திறமை மட்டத்தை உயர்த்தவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நாடளாவிய சித்தி மட்டத்தில் ஏழாவது மற்றும் எட்டாவது இடங்களுக்கு உட்பட்டிருந்தது. அவ்வாறே இந்த பெறுபேறுகளின் பிரகாரம் மத்திய மாகாணத்தில் 15 வலயங்களில் 11 வலயங்களின் பெறுபேறுகள் நாடளாவிய வலய மட்டத்தின் பிரகாரம் ஐம்பதாகவது இடத்திற்கு முன்னேறியிருந்தது. | | | முடியாது. | |
| 15 | 22 பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட 50 பாடசாலைகளில் காணி கைப்பற்றும் நோக்கில் 2010 ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கூட்டு மொத்தமாக ரூபா 64,263,189 மாகாண காணித் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களுக்கு நிதி ஏற்பாடு ஒதுக்கி 01 முதல் 13 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் அந்த காணியைக் கைப்பற்றுவதற்கு முடியாதிருந்தது. | 2021<br>2023 | காணி கையகப்படுத்தும் பணியை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 42 பாடசாலைகளில் காணி கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணம் உள்ளது. | 42 பாடசாலைகளில் பாடசாலை காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவடையாததுடன் பாடசாலைகளில் காணி முரண்பாடுகள் இருப்பதால் 08 பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகளினால் காணி சுவீகரிப்புக்காக வைப்பிலிடப்பட்ட பணம் மீண்டும் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| 16 | மாகாணக் காணித் திணைக்களத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற காணி வாடகை வருமான | 2022<br>2023 | நிலுவை வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி நிலுவை வரி வருமானம் அறவிடல் பிரதேச செயலாளர் செய்வதுடன் அது தொடர்பிலான | நிலுவை வரி அறவிடல் பற்றிய தகவல்கள், முறையாக திணைக்களத்த |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள 36 பிரதேச பிரிவுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 68,561,923 காணி வாடகை வாடகையாளர்களிட மிருந்து அறவிடப்பட்டிருக்கவி ல்லை. | | | பின்னூட்டல் நடவடிக்கை செய்யப்படுவதாக. | ிடம் இல்லை. |
| 17 | 02 பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள 03 நீர்மின் வலுக்கூடம் 03 முதல் 20 வருடங்கள் வரையிலான கால எல்லையில் இருந்து மின்சார உற்பத்தி செய்து தேசிய முறைமைக்கு மின்சாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் அந்த வலுக்கூடத்திற்காக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் நீர் திறத்தல் அனுமதி பத்திரம் விநியோகித்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 4,668,164 வரி வருமானம் மாகாண காணித் திணைக்களத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | 2023 | வரி அனுமதிப் பத்திரம் முறையாக வெளியிட்டு வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரி அறவிடப்படவில்லை. | வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில் லை. |
| 18 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு நிதியில் 09 சங்கங்களுக்காக 1991 தொடக்கம் | 2021<br>2022 | உடனடியாக நிலுவை கடன் தவணையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட | 02 கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிகைக் கட்டண உத்தரவுகள் விடுக்கப்பட்டு நீதிமன்ற | 2024 செப்டம்பர் 30 ஆம் திகதியாகும் போது, மேற்படி 09 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 ஆம் ஆண்டு வரை காலப் பகுதியினுள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 3,695,813 கடன் தொகையில், 2022 ஆம் ஆண்டு இறுதியில், 06 ஆண்டு தொடக்கம் 31 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த ரூபா 2,972,188 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். | நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் 02 சங்கங்கள் மாதாந்தம் தலா ரூ.10,000 மற்றும் ரூபா 5,000 என மாதாந்த கடன் தவணை செலுத்தி வருவதாகவும், மற்றுமொரு சங்கத்தில் இருந்து நீதிமன்ற தண்டப்பணம் மூலம் எதிர்காலத்தில் கடன் தவணைகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும். | சங்கங்களுள் 05 சங்களின் ரூபா 1,306,950 கடன் மீதி அறவிட வேண்டியுள்ளது. |
| 19 | 2016 இலிருந்து 2021 வரையான காலத்தில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சம்பளத்தை தயாரிக்கும் போது சம்பள கடமைகளை நிறைவேற்றிய இரண்டு உத்தியோகத்தர்களால் அவர்களின் மற்றும் அவர்களுக்கு நெருங்கியவர்களின் 14 வங்கி கணக்குகளுக்கு ரூபா 51,961,088 தொகையும் வங்கி கணக்கு இலக்கத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாத ரூபா 1,077,550 தொகையுமாக | 2021<br>2022 | ஏற்பட்ட நஷ்டத்தை முழுமையாக அறவிடுவதற்கும் மோசடி செய்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் | கண்டி பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் சம்பள மோசடிக்காக சம்பளம் வழங்கும் கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களின் சேவை இடைநிறுத்தம் தொடர்பில் சட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் மத்திய மாகாண சுகாதார அமைச்சினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 104(4)ன் படி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறேன். மத்திய மாகாண சுகாதார அமைச்சின் 4 கணக்காய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட | சிவில் வழக்குத் தாக்கல் செய்து, பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடம் இருந்து இழப்பை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தரும்படி மத்திய மாகாண பிரதம செயலாளரினால் 2024 ஆம் ஆண்டு ஜூன் 05 ஆம் திகதிய கடிதம் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைக்கப்ப |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மொத்தமாக ரூபா 53,038,638 பணம் மோசடியாக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இச்சம்பவம் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் முறையான விசாரணைகளை நடாத்தி உரிய பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவக்கைகளை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | | | அவசர விசாரணையின்போது வெளிப்படுத்தப்பட்ட தொகையை செலுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 2022 ஜனவரி 05 மற்றும் 2022 ஜனவரி 10, ஆகிய தேதிகளில் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு பதிலளிக்கும் விதமாக, ஒரு அதிகாரி மட்டுமே ரூபா 200,000 தொகையை கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்கில் வைப்பிலிட்டுள்ளார். | ட்டுள்ளது. இதுவரை அந்தந்த பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடம் இருந்து ரூ.3,920,781 அறவிடப்பட்டுள்ளது. ரூ.50,442,089 தொகை இன்னும் அறவிட வேடியள்ளது. |
| 20 | சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கண்டி மருத்துவ வழங்கல் பிரிவு, கண்டி தோல்நோய் வைத்தியசாலை, மாத்தளை பொது வைத்தியசாலை, மற்றும் பிரதேச வைத்தியசாலைகள் 03 இல் 2021 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 18,665,522 பெறுமதியான மருந்துகள் காலாவதியாகி உள்ளதுடன் அதில் சில மருந்துகள் காலாவதியாகி 03 மாதம் முதல் 14 வருடங்களான | 2021 2023 | மருந்தின் காலாவதி மற்றும் தரம் குறைவு காரணமாக அகற்றுவதற்கு மருந்துகள் முறையாக விநியோகித்தல் மற்றும் மொத்த இருப்பு உகந்த அளவில் பராமரித்தல் செயற்பாடுகளுக்கு உட்படுத்தல். | காலாவதியான மருந்துகள் தொட்பில் மருத்துவ வழங்கல் பிரிவு தலையிட்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணம் உள்ளது. | காலாவதியான மருந்துகள் மற்றும் காலாவதியாக அண்மித்து இருக்கும் மருந்துகள் குறித்து, அனைத்து மருத்துவமனைகளும் மருந்து முகதமைத்துவ தகவல் தொகுதி மூலம் மருந்துகளை வைத்திருக்கும் நிறுவனங்களில் இருந்து மருந்துகள் இல்லாத நிறுவனங்களுக்கு மருந்துகளை பரிமாறிக்கொள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காலப்பகுதிக்கு உட்பட்டிருந்தன. கலகெதர பிரதேச வைத்தியசாலைகளின் ரூபா 398,280 பெறுமதியுடைய மருந்துகள் தரத்தில் குறைந்ததாக 72206 அலகுகள் காணப்பட்டன. | | | | வதில் கவனம் செலுத்துகின்றன. |
| 21 | 2018 நவம்பர் 19 ஆந் திகதி விபத்துக்குள்ளாகிய தெல்தெனிய ஆதார வைத்தியசாலைக்கு இணைக்கப்பட்டிருந்த மருத்துவ ஊர்தி தொடர்பாக பொலிஸ் அறிக்கை மற்றும் மோட்டார் வாகன பரிட்சகரின் அறிக்கையின் பிரகாரம் ஊர்தியின் இயந்திர கோளாறு இன்றி ஓட்டுனரின் அதிக வேகத்தினால் ஊர்தியை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு முடியாமையினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதென குறிப்பிட்டிருந்த போதிலும் அவ் அறிக்கையை கருத்திற் கொள்ளப்படாது குறித்த விபத்தினால் இரசிற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 7,409,132 ஆன தொகை நிதிப் பிரணமாம் 104(4) பரிசோதனை அறிக்கை ஊடாக புத்தகத்திலிருந்து பதிவழிப்பதற்கு அமைச்சின் செயலாளரினால் பரிந்துரை | 2021 | நி.பி. விசாரணைக்காக பொலிஸ் அறிக்கை மற்றும் மோட்டர் வாகன போக்குவரத்து பரிசோதகரின் அறிக்கை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | தெல்தெனிய மாவட்ட அடிப்படை மருத்துவமனைக்குச் சொந்தமான WP LW-1134 இலக்கம் கொண்ட அம்புலன்ஸ் வண்டி 2018 நவம்பர் 19 திகதி விபத்துக்குள்ளாதல் தொடர்பில் ஏற்பட்ட ரூ.5,727,869 நட்டம் இந்த அம்புலன்ஸ் வண்டி ஓட்டுநரின் தவறுதல், அலட்சியம் அல்லது கவனக்குறைவு காரணமாக ஏற்பட்டதாக அறிக்கை பரிந்துரைக்கப்பட்டு 2022 ஒக்டோபர் 20 திகதிய கடிதம் மூலம் அங்கீகாரத்திற்காக மத்திய மாகாண சுகாதார செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பொது 284 அறிக்கையில் உள்ளடங்கிய பெறுமதிக்கும் திருத்தச் செலவுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்திற்கான காரணங்கள் கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திடம் இருந்து கேட்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட்டு பிரதான செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு நட்டம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | | | |
| 22 | 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் மாகாண சுகாதாரத் திணைக்களம் மூலம் அமுல்படுத்திய ஆரம்ப சுகாதார சேவை தொகுதி வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் நோக்கத்திற்கு முரணாக 33 விடயங்களுக்காக ரூபா 64,787,183 தொகை செலவு செய்திருந்தமை. | 2021<br>2022 | ஆரம்ப சுகாதார சேவை தொகுதியை வலுப்படுத்தும் செற்றிட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். | மத்திய மாகாண சுகாதார திணைக்களத்தின் (திகன புனர்வாழ்வு வைத்தியசாலை) நிறுவனங்களுக்கு தளபாடங்கள் கொள்வனவு மற்றும் திகன வைத்தியசாலைக்கு சாப்பாட்டு மேசை மற்றும் 06 கதிரைகளை கொள்வனவு செய்தல், நுவரெலியா பிராந்திய சுகாதார பயிற்சி நிலையத்தில் உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பழுதுபார்த்தல். அலுவலகத்தில் கேட்போர் கூடத்தை சீர் செய்தல், மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் காரியாலயத்தை சீர் செய்தல் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல், கண்டி பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் காரியாலயத்தை சீர் செய்தல், ரிக்கிலகஸ்கட | செயற்றிட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படும் வகையில் ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆதார வைத்தியசாலையில் உள்ள விசேட வைத்தியரின் உத்தியோகபூர்வ இல்லத்தை சீர் செய்தல், பயிற்சி திட்டங்கள் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் 2021 எசல பெரஹெரா தன்னார்வலர்கள் பணியாளர் நுழைவுப்பத்திரங்கள் /புத்தக அட்டைகளை அச்சிடுவதற்கு செலவு செய்தல். பொதுமக்களுக்கு அத்தியாவசியமான, அடிப்படை சுகாதாரம் தொடர்பான முதலுதவி மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு மேற்கூறிய செலவுகள் என்பதால், இது நோக்கத்திற்கு எதிரான செயல் அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | |
| 23 | சுகாதார சேவைத் திணைக்களத்தின் கண்டி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மூலம் சுகாதார உபரணங்களில் மருத்துவ உபகரனங்களுக்கு வர்ணம் | 2021<br>2022<br>2023 | மிகைக் கட்டணமாக்கப்பட வேண்டிய பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கும் உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை | 08 உத்தியோகத்தர்களிடம் இருந்து மேலும் மிகைக் கட்டணம் செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 1,594,455 வாகும். | 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து மேலும் ரூபா 1,464,072 அறவிட இருப்பதுடன் உரிய உத்தியோகத்தர்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பூசுவதற்காக பிழையாக செலுத்தப்பட்ட ரூபா 3,114,905 தொகை 2019 மே 09 ஆம் திகதி மத்திய மாகாண பிரதம செயலாளரால் உரிய பொறுப்புவாய்ந்த 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 08 உத்தியோகத்தர்களிடமிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 1,618,191 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | | தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. |
| | சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வைத்தியசாலைகளில் 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 6,075,049 தொகை பெறுமதியுடைய மருந்து பற்றாக்குறை காணப்பட்டது. | 2022<br>2023 | குறைபாடுகள் தொடர்பில் நிதி விதிமுறையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறியப்படும் குறைபாடுகள் தொடர்பில் எதிர்காலத்தில் நிதி பி.குறிப்பின் படி நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிதி விதிமுறையின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 24 | சுகாதார சேவைத் திணைக்களத்தின் தெல்தெனிய ஆரம்ப வைத்தியசாலையில் சேவையாற்றிய மருத்துவ உத்தியோகத்தர் 2016 மே 02 முதல் 2021 மே 01 வரையான காலத்தில் சம்பளமற்ற | 2023 | ஒப்பந்தத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளச் செலுத்துவதற்கு உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. செலுத்தத் தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதாக. | ஒப்பந்தத்தின் படி செலுத்த வேண்டிய ரூபா 1,175,220 பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உரிய உத்தியோகத்தரின் உள்நாட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விடுமுறை அங்கீகரித்து வெளிநாடு சென்றிருந்த போதும் 2023 ஒக்டோபர் வரையிலும் சேவைக்கு அறிக்கையிடாதிருந்தமையால் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 1,175,222 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | மற்றும் வெளிநாட்டு விலாசத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 25 | ஆயுர்வேத திணைக்களத்தால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் திணைக்களத்தின் உள்ளக தொழிலாராக சேவையாற்றிய 26 ஊழியர்களுக்கு மருந்துவக் கவனிப்பாளர் பதவி iii தரத்திற்கு சேர்க்கப்படும் போது, தாபனவிதிக் கோவையின் vii அத்தியாயத்தின் 05.03.01 ஆம் பிரிவுக்கு ஏற்புடையற்ற வகையில் கவனிப்பாளர் பதவி ii தரத்தின் ஆரம்ப சம்பள அளவுத்திட்டத்தில் வைத்தல் காரணமாக சம்பள படியேற்றங்கள் 10 கூடுதலாக வைக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 | 2023 | மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிடப்பட வேண்டும். | சரியான சம்பளத்தை அமைத்து அந்த நேரத்தில் செய்யப்பட்ட சம்பள மாற்றங்கள் திருத்தப்பட்டுள்ளது. மேலதிக செலுத்தல்களை தவணை முறையில் அறவிடுவதாக. | மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையை தவணை முறையில் மீட்பதற்கு அமைச்சின் செயலாளர் ஒப்புதல் அளித்துள்ளதுடன், முதல் தவணையாக 2024 செப்டம்பர் சம்பளத்தில் இருந்து ரூ.93,133 மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து ரூ.240,760 அறவிடப்பட்டுள்ளது. அதன்படி, ரூ.3,925,984 மேலும் அறவிடப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆம் ஆண்டு வரையிலான 10 வருட காலத்திற்காக மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் பிற கொடுப்பனவுகள் தவிர 26 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,259,877 மேலதிகமாக சம்பளம் செலுத்தப்பபட்டிருந்தது. | | | | |
| 26 | கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ள அதிகார சபையின் 219 கடைகளில் 196 கடைகளுக்காக 2001 ஆம் ஆண்டிலிருந்து 2022 திசெம்பர் 31 வரையான காலப்பகுதி தொடர்பாக அறவிட வேண்டிய நிலுவையான கடை வாடகை ரூபா 15,565,370 ஆக இருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையும் அப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதில் 13 கடைகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை | 2022 | நிலுவை வாடகைக் கணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடை அறை குத்தகைதாரர்களுக்கு நிலுவைத் தொகையை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தம் செய்து கொள்ளாத 13 கடைகளில் 03 கடைகளில் மட்டும் புதிய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. 02 கடைகளுக்கான வழக்கு நிலுவையில் உள்ளதுடன், எஞ்சிய 08 கடைகளுக்கான ஒப்பந்தங்கள் முடிக்கப்படவில்லை. ஒப்பந்தங்கள் தொடர்பாக புதிய ஒப்பந்தங்கள் செய்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | கடை அறை குத்தகைதாரர் களிடம் இருந்து மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள தொகை ரூபா 13,137,781 வாகும். |
| 27 | கண்டி பல்வகை போக்குவரத்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டம் முடிவடைந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2022 | ஒப்பந்தத்தின் படி பதவியணிக் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும். | கண்டி பல்வகை போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கண்டி பஸ் கட்டுப்பாட்டு செயற்றிட்டம் தொடர்பான மத்திய மாகாண போக்குவரத்து | 2021 ஆம் ஆண்டில் செயற்றிட்டம் ஊடாக செலவு மீளளிப்பு செய்யப்படும் போது, உண்மையாக செலவினத்தை விட செலவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மிகுதியாக இருந்த ரூபா 24,228,128 தொகையான செயற்திட்ட பணத்தை பயன்படுத்தி அதிகார சபையின் அனைத்து பதவியினர்களில் 71 சதவீதமானர்களுக்கு KMTT படிகளாக ஒரு மேலதிக படி செலுத்தப்பட்டது. | | | சேவை அதிகார சபையுடனான ஒப்பந்தம் 2021.12.31 அன்று முடிவடைந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட கண்டி பல்துறை அபிவிருத்தி நிறுவனமும் 2021.12.31 திகதியுடன் காலாவதியாகியிருந்ததால், புதிய ஒப்பந்தம் எதுவும் கைச்சாத்திடப்படவில்லை. இந்த செயற்றிட்டத்தின் ஆரம்ப கட்டத்தின் ஒப்பந்தத்தின் படி பதவியணிக் கொடுப்பனவு 2022ஆம் ஆண்டில் ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைச் செலுத்த பயன்படுத்தப்பட்டுள்ளன. | அதிகமாக இருந்ததற்கான ஆதாரத்தை சமர்ப்பிப்பதன் மூலம் செயற்றிட்டத்தில் இருந்து ரூ.24,228,128 மேலதிகமாக நிதியமாக செயற்றிட்டத்தில் இருந்து பெறப்பட்டுள்ளதுடன் அந்த பணத்தை ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| 28 | மத்திய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இயந்திர பொறியியல் பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள 04 லொறிகளின் ஓட்டக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் முதலாவது குறிப்பிடப்பட்டுள்ள 03 லொறிகளின் எரிபொருள் லீட்டரொன்றில் 4 கி.மீ உம் மற்றைய லொறி எரிபொருள் லீட்டருக்கு 03 கீ.மீ ஆகிலும் குறைந்த | 2021 | கணக்குக் குழுவின் தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சகல வாகனங்களும் இயந்திரங்களும் பாவனைக்குரிய உள்ளக வழிமுறைகள் வலப்படுத்தப்பட்டுள்ளது. | கணக்குக் குழுவின் கட்டளைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பட்சம் இயக்கப்பட வேண்டிய போதிலும், அவ் வாகனங்களில் எரிபொருள் லீட்டருக்கு இயக்கப்படுகின்ற தூரம் முறையே 03 மற்றும் 02 கி.மீ என கருதப்பட்டு எரிப்பொருள் சீராக்கப்படுவதற்கு வசதியளிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையினுள் ஆரம்பத்திலிருந்து அவ் வாகனத்திற்காக மேலதிகமாக எரிபொருள் அளவு 169,229 லீட்டராவதுடன் அதன் பெறுகைகள் பெறுமதி ரூபா 13,572,166 ஆகும். மேலதிகமாக பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருளுக்காக அறவிடப்படுவதற்கு கணக்குகள் செயற்குழு கட்டளை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை | | | | |
| 29 | கடனேதென்ன மெதகம்மெத்த வீதிக்கு காபட் பரப்பி அபிவிருத்தி செய்யும் வேலையின் திருத்திய மதிப்பீட்டின் 2.10 (ஆ) ஆம் வேலை விடயத்தின் 244.5 மெட்ரிக்தொன் Asphalt Binder களானது ஒரு | 2022 | மேலதிக செலுத்தல்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | Asphalt Binder நிர்மாணித்தல் சம்பந்தமாக நியம ஆலோசனைகள் கையேற்றில் (S.S.C.M) வழிமுறைகளை பின்பற்றி கைத்தொழிற் மேற்பார்வையாளர் விடயங்களை மேற்கொள்ள | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அலகு ரூபா 13,892 வீதம் மொத்தமாக ரூபா 3,396,594 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக அதிகாரசபை Core thickness சராசரியாக 62.5 மில்லி மீற்றராக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த விலைப்பட்டியலில் அளவீட்டுப் பத்திரத்தின் பிரகாரம் 244.5 மெட்ரிக் தொன் Asphalt Binder களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 05 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட ABB ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைக்கு இணங்க Core thickness சராசரியானது 30.8 மில்லி மீற்றாக இருந்ததனால் பயன்படுத்தப்பட்ட 123.5 மெ.தொன் Asphalt Binder இன் அளவினை மிகைத்து ஒப்பந்தக்காரருக்கு 121 மெட்ரிக் தொன்களுக்காக ரூபா 1,680,932 பணம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது | | | வேண்டும் என சகல பொறியியாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 30 | 2018 ஒக்டோபர் 18 ஆம் திகதிய மத்திய மாகாண | 2023 | செலவு செய்யும் போது, அதற்கு பின்பற்றக்கூடிய | வேறு நிறுவனங்களில் இணைக்கப்பட்டுள்ள | 2023 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் |

| | | | |
|---|---|---|---|
| சபை கலைக்கப்பட்டதன் பின்னர் 05 அமைச்சுக்களின் அமைச்சர்கள் மற்றும் பிரத்தியோக பதவியணியினர் பயன்படுத்திய 61 வாகனங்கள் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு கையளிக்கும் போது இந்த வாகனங்கள் தேவைகளின் பிரகாரம் வீதி அதிகார சபைக்கு பெற்றுக் கொள்ளும் இயலுமை அதாடர்பாக கவனத்தில் கொள்ளாமல் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அதன் பிரதான/ நிறைவேற்று பொறியியலாளருக்காக பிரிவின் வீதி பரிசோதனை நடவடிகட்கைகள் மற்றும் பல்வேறு கூட்டங்களுக்கு பங்குபெற்றுவதற்கு இரட்டை பணிகளுக்கு 12 வாகனங்கள் 2018 முதல் 2023 ஆகஸ்ட் வரையான காலத்தில் வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்த வாடகையாகவும் கூட்டுமொத்தமாகவும் ரூபா 75,092,077 சைனா தரப்பினருக்கு செலுத்தப்பட்டிந்தது. | மாற்று நடைமுறைகளை மதிப்பீடு செய்து, மிகவும் பயனுள்ள சிறந்த மாற்று நடைமுறையை எடுக்க வேண்டும் | தொகுதி வாகனங்களாக பயன்படுத்துவதாக. | வாகனங்கள் வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31 | 1994 ஆம் ஆண்டிலிருந்து 2001 வரையான காலப்பகுதியில் வீடமைபபுத் திணைக்களத்தன் வீடமைப்பு கடன் நலளாளிகள் 880 பேர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,682,579 கடன் பணத்தை அறவிடுவதற்கு சட்ரீதியான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 2023 | நிலுவை வீட்டுக் கடன் அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நி.பி. 104(4) விசாரணைக்கு பிரதம செயலாளரின் அங்கீகாரம் இல.CPC/RM/6/5/13 மற்றும் மற்றும் 2023.11.03 திகதிய கடிதம் மூலம் நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளை தள்ளுபடி செய்வதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அதன்படி நடவடிக்கை எடுத்து நிலுவையில் உள்ள கடன் பாக்கியை தள்ளுபடி செய்வதற்கு 109 அறிக்கையை பிரதம செயலாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவையில் உள்ள கடன் பாக்கிகளை தள்ளுபடி செய்வதற்கு பிரதம செயலாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 32 | மத்திய மாகான விளையாட்டுத் திணைக்களத்தின் விளையாட்டுவியல் நிறுவனத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் மூலம் 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 நிதி ஒதுக்கீடுகளை பயன்படுத்தி பல்வித விளையாட்டு நிலையம் நிறுவும் செயற்றிட்டத்தின் கீழ் மத்திய மாகாண முதலமைச்சு மற்றும் கல்வி | 2022 2023 | நிதி ஒதுக்கீடுகளை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் விளையாட்டு உபகரணங்களை விளைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டு பல்வித விளையாட்டு நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா மில்லியன் 03 நிதி ஒதுக்கீட்டிற்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அந்த ஆண்டில் பணம் கிடைக்காத காரணத்தால் இந்தப் பணத்தை பயன்படுத்தியதாகவும் மற்றும் குறித்த தொழிற்சார் முனைப்பான பங்குபற்றல் கொண்ட உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்றங்களில் இல்லாத காரணத்தினாலும், | கண்டி மாவட்டம் உள்ளடங்கும் வகையில் 20 பல்வித விளையாட்டு பயிற்சி நிலையங்களும் மாத்தளை மாவட்டம் உள்ளடங்கும் வகையில் 11 பல்வித விளையாட்டு பயிற்சி நிலையங்களும் நுவரெலியா மாவட்டம் உள்ளடங்கும் வகையில் 5 பல்வித விளையாட்டு பயிற்சி நிலையங்களும் என பிரதேச செயலகங்களி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமைச்சினால் ரூபா 2,049,192 தொகைக்கு விளையாட்டு உபகரனங்கள் 1332 கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பல்வித விளையாட்டு நிலையம் நிறுவப்பட்டிருக்கப்படாமை காரணமாக அந்த விளையாட்டு உபகரனங்கள் மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது டன் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு இறுதியிலும் கூட அவை எந்த பயன்படுத்தலுமின்றி களஞ்சியங்களில் தக்க வைக்கப்பட்டிருந்தது | | | அவ்வாறான தொழிற்சார் முனைப்பான பங்குபற்றல் கொண்ட உத்தியோகத்தர்கள் மாகாண விளையாட்டு திணைக்களத்துடன் தொடர்புடைய பிரதேச செயலகங்களில் இருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. | ல் இருக்கும் மாகாண விளையாட்டு திணைக்களத்துடன் தொடர்புடைய விளையாட்டு உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது |
| 33 | 2021 ஆம் ஆண்டில் சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் விவசாயத் திணைக்களத்திற்குரிய நவயால தென்ன மாவட்ட விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிலையத்தில் மண் ஆய்வுகூடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் மண் பரிசோதனை உபகரணங்களுக்காக முறையே ரூபா 3,000,000 மற்றும் ரூபா 14,518,059 ஆக கூட்டுமொத்தமாக | 2023 | மூலதன வழங்கலை பயனுள்ளதாக உபயோகப்படுத்த நடவடிக்கை எடுத்தல். | 2024 ஆகஸ்ட் மாதம் அளவில் உரிய முறையில் மண் பரிசோதனையை ஆரம்பிப்பதாக. | இன்றளவில் மண் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 17,518,059 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மண் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் அதற்காக வழங்கப்பட்ட உபகரணங்கள் உறைகளில் வைத்து பயனற்றுக் காணப்பட்டது | | | | |
| 34 | 2012 மார்ச் 29 ஆந் திகதிய PS/PCMD/SD/01/08 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படுகின்ற படிகளுக்காக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் மற்றும் நிதி ஆணைக்குழுவின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளாது மாகாண ஆளுனரின் அங்கீகாரத்தில் திரண்ட பயணச் செலவுப் படிக்கு தகமையுள்ள | 2022 | சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். | இன்றளவில் மாகாண சபையின் அதிகாரங்கள் அமுல்படுத்தப்படாத காரணத்தால், கௌரவ மத்திய மாகாண ஆளுநரின் அங்கீகாரத்தின் கீழ், விலங்கு அபிவிருத்தி ஆலோசகர்களுக்கு ஒரு செயற்கை கருவூட்டலுக்கு பன்னையாளரிடம் இருந்து அறவிடப்படுகின்ற ரூபா 700 தொகையை திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிட்டதன் பின்னர், வைப்புத் தொகையில் 90 சதவீதம் மீளளிப்பு செய்யப்படும் என்பதாக அறியத்தருகின்றேன். | இது சம்பந்தமாக தேசிய மட்டத்தில் தீர்மானம் எடுக்ககுழு அறிக்கையை பணிப்பாளர் நாயகத்தால் பரிந்துரைக்கப்பட்டு விவசாயம் மற்றும் கால்நடை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி ஆலோசனை உத்தியோகத்தருக்கு செயற்கையாக தெளித்தல் சேவையை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் சனவரியிலிருந்து நவம்பர் வரை ரூபா 7,106,823 தொகையான போக்குவரத்து செலவு படிகள் செலுத்தப்பட்டிருந்தது | | | | |
| 35 | 2021,2022,2023 ஆண்டுகளுள் மத்திய மாகாணத்தின் 08 நிறுவனங்களுக்குச் சொந்தமான கூட்டுத்தொகை ரூபா 830,611,345 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் வாகன சொத்துக்கள் 17,586 அலகுகள் எவ்வித பயன்பாடுமின்றி காணப்பட்டன. | 2021 2022 2023 | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயலற்ற விரிவுரை மண்டபங்கள் வழமையான கட்டண முறையின் கீழ் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்றும், ஆயுர்வேத ஆரோக்கிய நிலையம் தம்புள்ளை மாநகர சபை அல்லது ஆயுர்வேத நிலையத்திற்கு மாற்றப்படும் என்றும் கல்விக் கட்டடங்கள் வருடாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்றும் எனக்குத் தெரிவிக்கப்படுகிறது. மும்முனை மின்சாரம் வழங்காதது, ரசாயன ஊழியர்களுக்கு விழிப்புணர்வு இல்லாதது, பயிற்சி பெற்ற பணியாளர்களை | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை |

நியமிக்காதது, சில இயந்திரங்களுக்கு அதிக அளவில் மனித உழைப்பை பயன்படுத்த வேண்டிய நிலை போன்ற காரணங்களால், இயந்திரங்கள் செயலிழந்து காணப்படுகின்றது. பழுதுபார்த்து பயன்படுத்த முடியாத அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். செயலற்றதாக பட்டியலிடப்பட்ட உபகரணங்கள் தேவை ஏற்படும் போது விநியோகத்திற்காக வைக்கப்பட்டுள்ளன என்பதையும், சில செயற்றிடங்கள் முடிவடையாததால் தொடர்புடைய உபகரணங்களை விடுவிக்க முடியவில்லை என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பழுதுபார்க்க முடியாத வாகனங்களை அப்புறப்படுத்தி, செயல்படாத வாகனங்களை சரிசெய்து பயன்படுத்த அல்லது தேவைப்படும் நிறுவனங்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36 | மத்திய மாகாண நிதி விதி 54.1.2, 54.1.3 மற்றும் 54.1.6 இற்கு இனங்க நடவடிக்கை எடுத்து மத்திய மாகாண சபையின் 02 நிறுவனங்களின் 09 வாகனங்களுக்கு உரியதாக இடம் பெற்ற ரூபா 1,798,533 ஆன விபத்துக்கள் தொடர்பாக இழப்பு நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. | 2023 | அறவிடப்படாத சேதங்களை அறவிட்டுக் கொள்ளவும், அறவிடப்பட்ட சேதங்களுக்கான சான்றுகளையும் சமர்ப்பிக்க வேண்டும். | செலுத்தப்படாத மதிப்பை சாரதியிடம் இருந்து அறவிட்டக் கொள்வதற்கும், பணம் செலுத்தாமை தொடர்பில் வழக்கு தொடரவும், காப்பீட்டில் இருந்து திருப்பிச் செலுத்தப்படாத பகுதியை சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களிடமிருந்து மீட்டெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அறவிடப்படாத சேதங்களை அறவிட்டுக் கொள்ளவும், அறவிடப்பட்ட சேதங்களுக்கான சான்றுகளையும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 37 | மத்திய மாகாண நிதி விதி 54.5, 54.6 இற்கு இனங்க மத்திய மாகாண சபையின் 04 நிறுவனங்களின் 10 வாகனங்களுக்கு உரியதாக இடம் பெற்ற ரூபா 3,720,072 ஆன விபத்துக்கள் தொடர்பாக இழப்பு நட்டங்கள் இருந்த போதிலும் 2023 ஜுன் 30 வரையிலும் அது தொடர்பில் எவ்வித ஆரம்ப விசாரணையோ இறுதி விசாரணையோ நடாத்தப்படவில்லை. | 2023 | நிதி விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விசாரணை அறிக்கைகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் | நடத்தப்படாத நி.பி.104(4) விசாரணைகளை நடாத்துவதற்கும், பெறப்படாத விசாரணை அறிக்கைகளை வரவழைக்க ஏற்பாடு செய்வேன். நி.பி.104(4) விசாரணை அறிக்கை கிடைத்துள்ளது. | மாகாண நிதி விதிகள் பிரகாரம் சேதங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 38 | 2018 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதிய வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 1/2018 கொண்ட நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் | 2023 | வாகனங்களை முனைப்பாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிறுவனத்தின் பாவனைக்குத் தேவையில்லாத வாகனங்களை வேறு நிறுவனங்களுக்கு வழங்கவும், அப்புறப்படுத்த வேண்டிய வாகனங்களை | வாகனங்கள் முனைப்பாக பயன்படுத்தவும் அகற்றல் நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ”அரசாங்கத்தின் நிதியல்லாத சொத்துக்களை முகாமைத்துவம்- இயக்க முடியாத நிலையில் உள்ள மோட்டார் வாகனங்களை அகற்றுதல்” தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை பின்பற்றப்படாமல் மத்திய மாகாண சபையின் 04 நிறுவனங்களில் 01 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையிலான காலம் முதல் இயக்க முடியாத நிலையில் உள்ள 23 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | | | அனுப்புவதற்கும் 02 வாகனங்களை ஏலத்தில் விடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 39 | நுவரெலியா பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் பயன்படுத்திய பெறுமதி அடையாளம் காண முடியாத அம்புலன்ஸ் வண்டி ஒன்றின் பதிவு உரிமையானது தனியார் பெருந்தோட்ட நிறுவனம் ஒன்றின் பெயரில் இருந்ததுடன் முதலமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் ரூபா 8,000,000 பெறுமதியான மோட்டார் | 2023 | பதிவு உரிமைகள் மாற்றம் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட வேண்டும். | மோட்டார் வாகனம் நிதிக் கூற்றில் இருந்து நீக்குவதற்கும், அம்புலன்ஸை அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | பதிவு உரிமைகள் மாற்றம் தொடர்பான தகவல்கள் கண்டறியப்பட வில்லை என்பதுடன் அம்புலன்ஸ் வண்டியை அப்புறப்படுத்தும் நடவடிக்கை நடைபெறவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| வண்டியின் பதிவு உரிமையும் தனியார் தரப்பின் பெயரில் இருந்தது. | | | | |
| நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் 07 கால்நடை வைத்திய அலுவலகங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமான 08 வாகனங்கள் விபத்துக்குள்ளானதுடன், பழுதுபார்ப்பு செய்யப்படாமல் 07 வாகனங்கள் அந்தந்த கால்நடை அலுவலகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததோடு, ஒரு வாகனத்தின் பழுதுபார்த்தல் செலவு ரூபா 16,500,000 என அடையாளம் காணப்பட்டுள்ளது. | 2023 | பழுதுபார்க்கக்கூடிய மற்றும் பயன்படுத்தக்கூடிய வாகனங்கள் மற்றும் பிற வாகனங்கள் தொடர்பாக அகற்றல் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | நி.பி.104(4) விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும், பழுதுபார்த்து பயன்படுத்தக்கூடிய வாகனங்களை பழுதுபார்க்கவும், நிறுவனத்திற்கு தேவையில்லாத வாகனங்களை தேவைப்படும் பிற நிறுவனங்களுக்கு விடுவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | பழுதுபார்க்கக் கூடிய மற்றும் பயன்படுத்தக்கூடிய வாகனங்கள் மற்றும் பிற வாகனங்கள் தொடர்பாக அகற்றல் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 3.7 தென் மாகாண சபை

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்பு ரூபா | தொகை ரூபா | மிகை (பற்றாக்குறை) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 55,372,283,976 | 1,711,798,447 | 53,660,485,529 | 558,915,389 | முனைப்பழியுள்ள |
| **2022** | 58,357,835,649 | 1,627,103,945 | 56,730,731,704 | (777,611,692) | முனைப்பழியுள்ள |
| **2023** | 60,745,155,722 | 2,211,653,348 | 58,533,502,374 | (850,674,421) | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு கண்காணிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் | கணக்காய்வு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கையின் திகதிக்கு பரிந்துரையின் நடைமுறை நிலைமை |
|---|---|---|---|---|---|
| **01.** | **சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு ம இணங்காதது** | | | | |
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க உடைய பிரதேச சபை சட்டத்தின் 172 (8) மற்றும் (9) பிரிவின் படி , கூடுதல் கட்டணம் தொடர்பான கணக்காய்வாளரின் தீர்மானம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள், கூடுதல் கட்டணம் பெறுபவரால் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உரிய தொகையை செலுத்த வேண்டும் என்றும் அவ்வாறு அந்தத் தொகை செலுத்தப்படாமல் | 2023 | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டும். | கூடுதல் கட்டணச் 11 சான்றிதழ்கள் தொடர்பாக தற்போதைய நிலை மற்றும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக சுருக்கமான அறிக்கையை தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளுகின்றேன். | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் 07 மேலதிக கட்டணச் சான்றிதழ்கள் தொடர்பில் மேலதிகமாக 7,249, 098 ரூபாவை வசூலிக்க உத்தரவு வழங்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் மேல்முறையீடு செய்யப்படாதிருந்தால் , சம்பந்தப்பட்ட நபர் வசிக்கும் பகுதியில் உள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து உரிய பணத்தைப் பெற்றுக் கொள்ள உள்ளூராட்சி ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கணக்காய்வாளரால் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மதிப்பு ரூ.8,649,112 ஆகும் கூடுதல் கட்டணச் 11 சான்றிதழ்களை க்காக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதிக்குள், அந்த விதிமுறைகள் படி நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | | | | |
| (ஆ) | சிரேஷ்ட முகாமைத்துவ சேவைப் பிரிவின் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.1 பிரிவின் படி , சிரேஷ்ட முகாமைத்துவ சேவைப் பிரிவின் பதவிக்கான ஆட்சேர்ப்பு மேற் கொள்ளும் போது வெளி விண்ணப்பதாரர்களுக் கு இருக்க வேண்டிய தகுதியாக அங்கீகரிக்கப்பட்ட பட்டத்துடன் முதுகலைப் பட்டம் வரை குறிப்பிடப்பட்டிருந் தாலும், தற்போது பணிபுரியும் அதிகாரி | 2023 | ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி நடவடிக்கை செய்யப்பட வேண்டும். | வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், இதுவரையில் குறித்த வழக்கு 07 தடவைகள் அழைக்கப் பட்டுள்ளதாகவும் அதனால் பணிப்பாளர் நாயகம் பதவிக்கான ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன . அதனால் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி ,ஆளுநரின் பரிந்துரைகளின்படி இந்த ஆணையத்தின் இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலின் பேரில் | .இந்நிலையில், ஆட்சேர்ப்பு நடைமுறைப்படி நடக்காமல் ஆளுநரின் பரிந்துரையின்படி இந்த ஆணையத்தின் இயக்குநர் குழுவின் ஒப்புதலின் பேரில் அவர்கள் நியமிக்கப்பட்டுள் ளனர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அந்த தகுதியை பூர்த்தி செய்யவில்லை. | | | தற்போதைய செயல் இயக்குநர் ஜெனரல் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது | |
| (இ) | 2010ஆகஸ்ட் மாதம் 09 ந் திகதி தென் மாகாண ஆளுனரின் செயலாளரின் இலக்கம் G/SP/1/57 கோவை 01உடைய கடிதத்திற்கு இணங்கவில்லை என 2020 ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2022 ஒக்தோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் தென் மாகாண சபைத் தலைவருக்கு வீடு ஒன்றை வாடகைக்கு எடுப்பதற்காக ரூபா 1,350,000 கொடுப்பனவு, தென் மாகாண சபை செயலாளரின் அலுவலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது | 2023 | சுற்றறிக்கை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பீஎஸ்/ஸீஎஸ்ஏ/11-18(1) மற்றும் பீஎஸ்/ஸீஎஸ்ஏ /11-18 (11) ஆகிய ஜனாதிபதியின் செயலாளரின் சுற்றறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் இந்த கொடுப்பனவு வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின்படி, 2022 ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இந்த உதவித்தொகை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது, ஆனால் வழங்கப்பட்ட உதவித்தொகை குறித்து தேவையான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | 2019ஆண்டு மெய் மாதம் 31ந் திகதி 13/2008 (IV) இலக்கம் உடைய மாநில நிர்வாகச் சுற்றறிக்கை திருத்தப்பட்ட 2011 ஆண்டு பெப்ரவரி 09ந் திகதி ) 2008/13IV) இலக்கமுடைய மாநில நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2014ஆண்டு ஜனவரி மாதம் 02ந் திகதி 2014/01இலக்க தேசிய வரவுசெலவு சுற்றறிக்கையின் 2.1.3 (ii) பிரிவுகளின் படி அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வரம்புகள் மற்றும் | 2023 | சுற்றறிக்கை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருளின் வகைக்கு ஏற்ப, அதிகாரிகள் பயன்படுத்தும் வாகனங்களுக்கு இரண்டு வகைகள் அடையாளம் காணப்பட்டு, அதன்படி, உண்மையான எரிபொருளின் அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. | 2023ஆம் ஆண்டு ஏப்ரல் 01ஆம் திகதி முதல் வழமையான பெற்றோல் மற்றும் சாதாரண டீசலுக்கான எரிபொருள் கொடுப்பனவை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்ட போதிலும், செலுத்தப்பட்ட எரிபொருள் கொடுப்பனவுகள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.. |

எரிபொருகளின் வகை குறித்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், அது தொடர்பான வழங்கப்பட்ட பரிந்துரைகளை பொருட் படுத்தாமல் பிரதம செயலாளரின் பரிந்துரைகளின் பேரில் ஆளுநரின் அங்கீகாரம் மூலம் 2019 ஆண்டு மே முதல் 16 ந் திகதி இலக்கம் 2019-02 உடைய பிரதம செயலாளரின் சுற்றறிக்கை) நிதி (

வெளியிடப்பட்டதுடன் அதன் படி தென் மாகாண சபையின் தாபனம் 22க்கு தொடர்பாக 44 பதவி உடைய 73 அதிகாரிகளுக்கு 2019 ஆண்டு மெய் மாதத்திலிருந்து 2023 ஆண்டு ஜுன் மாதம் வரை காலப்பகுதியுடன் தொடர்புடைய வகையில், மேலதிக எரிபொருள் கொடுப்பனவுகளாக ரூபா 22,135,624 மற்றும் சுப்பர் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலுக்கு ரூபா 8,801,977 செலுத்தப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ) | **ஜனாதிபதி செயலாளர் சுற்றறிக்கை** | | | | |
| (i) | 2018ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ந் திகதி இலக்கம் பீஎஸ்/ஸீஎஸ்ஏ 18-11/ ஜனாதிபதியின் செயலாளர் சுற்றறிக்கையின் 1வது பிரிவின் படி , மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் அலுவலக கொடுப்பனவுகளை செலுத்த முடியாது என்றாலும், தென் மாகாண சபையின் தலைவருக்கு 2019 ஒக்டோபர் மாதத்திலிருந்து சபை செயலாளர் அலுவலகத்திலிருந்து அலுவலக கொடுப்பனவாக ரூ.1,850,000 செலுத்தப்பட்டது. | 2023 | சுற்றறிக்கை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பீஎஸ்/ஸீஎஸ்ஏ/ (1)18-11 மற்றும் பீஎஸ்/ஸீஎஸ்ஏ/ (11)18-11 ஆகிய ஜனாதிபதியின் செயலாளரின் சுற்றறிக்கையின்படி, 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் படி, 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இந்த உதவித்தொகை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது, ஆனால் வழங்கப்பட்ட உதவித்தொகைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (ii) | 2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ந் திகதியிட்ட ஜனாதிபதியின் செயலாளர் சுற்றறிக்கை இலக்கம் பீஎஸ்/ஸீஎஸ்ஏ/11-18 உடைய 4.1 பிரிவின் படி, மாகாண சபைத் தலைவருக்கு பெற்றோல் வாகனத்திற்கு 600 லீற்றரும், டீசல் வாகனத்திற்கு 500 லீற்றரும் வழங்கலாம் என கூறப்பட்ட போதிலும்' அந்த விதியை மீறி, தென் மாகாண ஆளுநரின் இல. ஜீ/எஸ்பீ/1/2/1/3/19 | 2023 | சுற்றறிக்கை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆளுநரின் செயலாளரின் இலக்கம் ஜீ/எஸ்பீ/ 19/3/1/2/1 மற்றும் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ந் திகதியிட்ட கடிதத்தின் படி , மாண்புமிகு தலைவருக்கு வழங்கப்பட்ட இரண்டு அதிகாரப்பூர்வ வாகனங்களுக்கும் ஒரு வாகனத்திற்கு 600 லிட்டர் டீசல் எரிபொருள் கொடுப்பனவு 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அங்கீகரிக்கப்பட்டது. | சுற்றறிக்கைகளுக்கு மாறாக ஆளுநரின் ஒப்புதலின் பேரில் கூடுதலாக செலுத்தப்பட்ட எரிபொருள் லீற்றர் தொகைக்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ந் திகதியிட்ட கடிதத்தின்படி, தலா 600 லிட்டர் டீசலைப் பெறுவதற்கான 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் வரை சுற்றறிக்கைக்கு இணங்காமல், டிஸல் லீட்டர் 3,900 க்காக ரூ.708,000 வை சபை செயலாளர் அலுவலகத்தி லிருந்து செலுத்தப்பட்டது. மேலும், சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்காமல் சுப்பர் டீசல் விலையின் அடிப்படையில் செலுத்தியதன் காரணமாக ரூ.682,525 அதிகமாக செலுத்தப்பட்டது. | | | | |
| (iii) | 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ந் திகதியிட்ட ஜனாதிபதியின் செயலாளர் சுற்றறிக்கை இலக்கம் பீஎஸ்/ஸீஎஸ்ஏ/11-18 இன் 4.2 ம் பிரிவுக்கு மாறாக, தென் மாகாண சபைத் தலைவரின் ஒருங்கிணைப்பு மற்றும் மக்கள் தொடர்பு செயலாளர்களுக்கு 2019ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் முதல் 2022ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் வரை | 2023 | சுற்றறிக்கை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பீஎஸ்/ஸீஎஸ்ஏ/ (11)18-11 சுற்றறிக்கைகளின் படி, 2022 ஆம் ஆண்டு அக்தோபர் மாதம் முதல் இந்த உதவித் தொகையை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், இந்த கொடுப்பனவு வழங்குவது நிறுத்தப்பட்டு, 2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தலைவரின் தனிப்பட்ட செயலாளருக்கு மட்டுமே உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டது, அதற்காக சாதாரண டீசல் விலையின் அடிப்படையில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாதத்திற்கு ரூபா 50,000படி ரூ 3,700,000 . வாகன கொடுப்பனவும் மற்றும் அதிகாரப்பூர்வ வாகனம் வழங்கப்படாதபோது, 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டு அக்டோபர் வரை ரூ. 2,516,680 ரூபாய் எரிபொருள் கொடுப்பனவு சபை செயலாளர் அலுவலகத்தால் செலுத்தப்பட்டது. | | | | 150 லிட்டருக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படுகிறது, ஆனால் சுற்றறிக்கைக்கு எதிராக செலுத்தப்பட்ட கொடுப்பனவு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. |
| (ஊ) | 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 தேதியிட்ட நிதி அமைச்சின் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் 03(vii) பிரிவின் இன் படி, பணியாளர்கள் ஆட்சேர்ப்புக்கான முதற்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டா லும், இதுவரை நியமிக்கப்படாத பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பு ஒத்திவைக்கப்பட வேண்டும் என்றாலும், அதற்கு மாறாக, தென் மாகாண சாலைப் பயணிகள் போக்குவரத்து அதிகாரியால் 2022 ஆம் ஆண்டு ஜூன் 24, 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் 12 ஊழியர்களை சேர்த்து 2022ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் 31ந் | 2022 ( 1.5.5.1ஆ) | அரசாங்க கொள்கைகளை கடைபிடிக்கவும் மற்றும் சுற்றறிக்கை விதிகளை பின்பற்றவும். | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது ஆனால் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 05வது விடயத்தை அதன் முக்கிய நோக்கத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அதனை யதார்த்தமாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி, ஆணையத்தின் உறுப்பினர் குழு நியமன அதிகாரியாக நியமிக்கப்பட்டுள் என பணிப்பாளர் சபையின் அங்கீகாரத் திற்கு உட்பட்டு உரிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்ப ட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு ள்ள போதிலும்,சுற்ற றிக்கைக்கு எதிராக மேற்கொள்ளப்ப ட்ட ஆட்சேர்ப்புகளுக் கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திகதி வரை மொத்தம் ரூ.2,896,161 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. | | | | |
| (எ) | திறைச்சேரி செயலாளரின் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 திகதியிட்ட இலக்கம் 2022/03 உடைய சுற்றறிக்கை , 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ந் தேதியிட்ட இலக்கம் 08/2022 உடைய தேசிய வரவுசெலவு சுற்றறிக்கை மற்றும் ஜனாதிபதி செயலாளரின் 2022ஆம் ஆண்டு அகஸ்ட் மாதம் 15ந் திகதி இலக்கம் பீஸீ/எஸ்பீ / சுற்றறிக்கை/ 2-2022/10 உடைய சுற்றறிக்கைக்கு முரணாக தென் மாகாண கல்வி அமைச்சினால் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ந் திகதி ரூபா 4,864,268தொகையை செலவுசெய்து 2020 ஆண்டில் க.பொ.த )சா.த (அழகியல் தேர்வு முடிவுகள் மதிப்பீட்டு நிகழ்ச்சி நடந்தப் பட்டன. பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தில் இருந்து நிதி அதன் நோக்கங்களுக்கு மாறாக இந்தத் திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டது. | 2023 | சுற்றறிக்கை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் .. | க.பொ.த) சா.த ( 2020 ஆண்டின் முடிவுகளை மதிப்பிடுவதற்கான நிகழ்ச்சி திட்டத்திற்காக ஆளுநரின் ஒப்புதலின் பேரில் 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ந் திகதி அன்று இந்த நிகழ்ச்சி நடைபெற்றது, இதில் கிட்டத்தட்ட 1500 ஆசிரியர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு பரிசுகளை வழங்குதல் உட்பட மொத்த செலவு ரூ.4,864, 268என்று தெரிவிக்கப்பட்டுள்ளது | இது வரை தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை . |
| **02** | **மற்ற முன்கூட்டிய கணக்குகள்** | | | | |
| | பரிசீலனைக்குட்பட்ட ஆண்டின் டிசம்பர் 31ஆம் திகதிதேதியின்படி, மாகாண அரசு | 2023 | நிலுவையில் உள்ள கடன் தொகையை உடனடியாக வசூலிக்க ஏற்பாடு செய்ய | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது . | 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் குள் மேலும் மொத்தம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அதிகாரிகளின் முற்பணக் கணக்குகளின் மொத்த இருப்பு ரூ.1,577,211,969 ஆகவும், அந்த மீதியிலிருந்து, இடமாற்றம்/ஓய்வு பெற்ற, இறந்த, இடைநிறுத்தப்பட்ட மற்றும் சேவையை விட்டு வெளியேறிய 3,609 அதிகாரிகளிடமிருந்து வரவேண்டிய மொத்தத் தொகை ரூ.53,726,173 கடன் பாக்கிகள் சேர்க்கப்பட்டன. | | வேண்டும். | | ரூ.48,125,278 கடன் மீதியை மீளப் பெற வேண்டியுள்ளது. |
| **03** | **நிர்வாகத்தின் திறமையின்மை** | | | | |
| (அ) | 1994 ஆண்டு முதல் 2020 வரையிலான காலகட்டத்தில், 18 கூட்டுறவு சங்கங்களுக்கு பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்ட 45,418,396 கடன் தொகையில் 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ந் திகதி நிலவரப்படி மொத்தம் ரூ.23,695, 696 நிலுவையில் உள்ளது. | 2021 | நிலுவைத் தொகையை வசூலிக்க அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க, பின்தொடர்தல் செயல்முறை சரியான நேரத்தில் மற்றும் சரியான மேற்பார்வையுடன் செய்யப்பட வேண்டும். | ஆளுனருடன் கலந்தாலோசித்து வட்டி சலுகைகளை திரும்ப பெறுவதற்கோ அல்லது ரத்து செய்யவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ந் திகதி நிலவரப்படி, ரூ.68,699, 013கடன் பாக்கி நிலுவையில் உள்ளது. |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில், கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியத்தின் ஆலோசனைக் குழுவின் தலைவர் உட்பட 06 உறுப்பினர்களால் ஓய்வூதிய நிதியிலிருந்து கொடுப்பனவுகளை செலுத்த | 2021 | கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியத்தின் உத்தரவு தொடர் பின்பற்றப்பட வேண்டும். | உத்தரவுகளின் தொடர் படி விதிகளை ஒதுக்கி வைக்க வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் உத்தரவுகளின் 27வது பிரிவு மற்றும் 2020 செப்டம்பர் 27, திகதியிட்ட ஆளுநரின் கடிதம் மூலம் ஆலோசனைக் குழு மற்றும் மாகாண அரச | தற்போது வரை இந்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முடியவில்லை . ஆளுநரின் அங்கீகாரத்தின் மூலம், 08 பணியாளர் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 878,139 மற்றும் ரூபா 1,204,139 வழங்கப்பட்டது. | | | சேவை கொமிஷன் சபையின் அங்கீகாரத்துடன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன என்பதை தெரிவிக்கப்பட்டுள்ளது | |
| (இ) | 2021 டிசம்பர் 31 ந் திகதி நிலவரப்படி, 1999 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை கிராம வளர்ச்சி நிதியத்தால் வழங்கப்பட்ட கடன் மற்றும் வட்டி யாக ரூ.16,011,413 நிலுவையில் அறவிட உள்ளது.. | 2021 | நிலுவைத் தொகையை உடனடியாக வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். | மேலும், 2019-1999ஆம் ஆண்டுக்கான கடன் மற்றும் வட்டி நிலுவை ரூ.16,011, 413என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2024 ஆகஸ்ட் 15, நிலவரப்படி, மேலும் ரூ.7,601, 941கடன் மீதியை அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டின் கிராமிய சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கம்புருபிட்டிய மற்றும் தங்கல்ல வைத்தியசாலைகளுக்கு வழங்கி பொறுத்தி செயற்படுத்தும் நொக்கத்திற்காக )Supply Installation And Commission ( 13,681, 000ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்பட்ட 04 இயந்திரங்கள் 2022 டிசம்பரில் பெற்ற பிறகு வைப்புப கணக்கிகல் நிறுத்திவைக்கப்பட்ட பணம் விடுவிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டாலும், ஆனால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில், இயந்திரங்களுக்கான பராமரிப்பு உபகரணங்கள் மற்றும் உருதிபாகங்கள் | 2022 | தேவைகள் அடையாளம் காணப்பட வேண்டும், கொள்முதல் செய்யப்பட வேண்டும் மற்றும் கொள்முதல் நிபந்தனை களை பூர்த்தி செய்து பணம் செலுத்த வேண்டும். | 2021 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டின் மூலம் உபகரணங்களைப் பெறுவது மிகவும் சாதகமானது என்பதால் பொது வைப்புத்தொகையில் வைத்திருக்கும் பணம் மற்றும் 2022 விநியோகத்திற்குப் பிறகு பணம் விடுவிக்கப்பட்டது. | இதுவரை, இந்த இயந்திரத்தை திறம்பட பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இல்லாததால், , அவை செயல்படுத்தப்படாமல் உள்ளன. | | | | |
| (உ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் வாகனங்களை திருத்துவதற்காக தனியான பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், மீளாய்வாண்டில், அதிகார சபைக்கு சொந்தமான வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு வெளி நிறுவனங்களிடமிருந்து 7,400, 200ரூபா செலவிடப்பட்டுள்ளது. | 2022 | வாகனம் பழுதுபார்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள அலகின் செயல்திறன் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் வெளிப்புற முகவர்களால் செய்யப்படும் பராமரிப்பைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும். | இந்த நோக்கத்திற்காக அலகின் வரையறுக்கப்பட்ட மனித வளம் பயன்படுத்தப் படுகிறது முழுமையாக பழுதுபார்க்கப்படும் வாகனங்கள், இயந்திர பொறியாளர் பரிந்துரையின்படி முறையான டெண்டர் நடைமுறைக்கு ஏற்ப வெளி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. | இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள பொறுப்பான தரப்பினரை அடையாளம் காணுவதற்கு இது வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |
| (ஊ) | 2022டிசம்பர் 31ந் திகதி நிலவரப்படி, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் நீதிமன்ற அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.40,215,178ஆகும். நீதிமன்ற அபராதத் தொகையை தீர்க்க வேண்டிய நிலை இருந்தது இதற்கிடையில், சம்பந்தப்பட்ட பயனாளிகள் சங்கங்கள் அடையாளம் காணப்பட்டு, இந்தத் தொகை உடனடியாக வழங்கப்பட வில்லை. மேலும், இந்த | 2022 | நீதிமன்ற அபராதமாக வசூலிக்கப்பட்ட இந்த பணம் பயனாளிகள் சங்கங்களை கண்டறிந்து உடனடியாக தீர்வு காண வேண்டும். | நீதிமன்ற அபராதத் தீர்வு செயல்முறை கணிசமான நேரம் எடுக்கும் என்பதால், அதற்கான மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | 2024 ஜூலை 31 ந் திகதி க்குள் ரூ.16,781,525 தொகையை செலுத்தப்பட உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிலுவையில், 2022ஆம் ஆண்டுக்கு முந்தைய காலப்பகுதியுடன் தொடர்புடைய ரூ.27,837, 307 அடையாளம் காணப்படாத நிலுவையாக இருந்தது. | | | | |
| (எ) | கடனை செலுத்தும் போது தவணை முறையில் செலுத்த கடனாளிகளுக்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியத 41 கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்தும் மொத்தக் கடன் நிலுவையான ரூ.7,298,697 இல், தவணை செலுத்தாத காரணத்தால், மதிப்பாய்வின் ஆண்டு டிசம்பர் 31ஆதிகதி வரை ரூ.4,750,269 கடன் நிலுவைத் தொகை நிலுவையில் உள்ளது. | 2022 | அந்தந்த கடன் நிலுவைகளை உடனடியாக வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் . | நிலுவையில் உள்ள கடன்கள் தொடர்பாக மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது . | 2024 ஆகஸ்ட் 26 திகதிக்கு மேலும் ரூ.4,020,763 நிலுவையில் உள்ளது |
| (ஏ) | 2019 ஆம் ஆண்டு மே மாதம் 02ந் திகதி மற்றும் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ந் திகதியிட்ட அமைச்சரவை முடிவுகளின்படி, 2019 ஆம் ஆண்டு ஜுனி மாதம் 25ந் திகதி முதல் ஆளுநரின் ஆலோசகருக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.75,000 மற்றும் வரி அமைச்சகத்தில் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிக்கு உரிய வசதிகள் மற்றும் அதிகாரப்பூர்வ கார் ஆகியவை வழங்கப்பட்டன. அதன்படி, ஆளுநரின் ஆலோசகராக இருந்த | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இந்த அதிகாரிக்கு 2019 ஜூன் 25 முதல் 2023 ஆகஸ்ட் 31 ந் திகதி வரை எரிபொருள் கொடுப்பனவுகளாக மொத்தம் ரூ.3,203,409 வழங்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | | |
| (i) | ஆளுநரின் ஆலோசகராகப் பணியாற்றிய போது, 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ந் திகதி அரச சேவை கொமிஷன் சபை அங்கத்துவராக இந்த அதிகாரியை நியமிக்கப்பட்டார் மற்றும் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ந் முதல் பணியை ஏற்றுக்கொண்டு அன்று முதல் 2023 ஆகஸ்ட் 31 ந் திகதி வரை ரூ.1,166 838, கொடுப்பனவுகளைப் பெற்று இருந்தார். | 2023 | அமைச்சரவை யின் தீர்மானங்களின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 33 ஆவது பிரிவின்படி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, G/SP/ Legal/ 108 மற்றும் 2020ஆம் ஆண்டு மார்ச் 18 ந் திகதியிட்ட கடிதத்தின்படி சம்பந்தப்பட்ட அதிகாரியை தென் மாகாண அரச்சேவை ஆணைக்குழு சபையின் உறுப்பினராக நியமித்துள்ளார். குறித்த பதவிக்கான கொடுப்பனவுகள் மற்றும் இதர கொடுப்பனவுகள் அரச சேவை ஆணைக்குழு சபையால் மேற்கொள்ளப் படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. | இதுகுறித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை . |
| (ii) | மேலும், ஆளுநரின் ஆலோசகராகவும், பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றிய போது காலி மரபு அறக்கட்டளையின் பணிப்பாளராகவும் 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ந் திகதி முதல் நியமிக்கப்பட்டார் மற்றும் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ந் திகதி | 2023 | அமைச்சரவை யின் தீர்மானங்களின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | காலி மரபு அறக்கட்டளை ஆளுநரின் கீழோ அல்லது தென் மாகாண சபையின் கீழோ உள்ள நிறுவனம் அல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது. | இதற்கான முறையான விசாரணை நடத்தப்பட்டு, இதுவரை மேல் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அன்று பணியை ஏற்றுக்கொண்டார் மற்றும் அன்றிலிருந்து 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ந் திகதி வரை ரூ . 2,354,639 தொகையை கொடுப்பனவாக வழங்கப்பட்டன. | | | | |
| (iii) | ஆளுநரின் ஆலோசகர் உத்தியோகபூர்வ காரைப் பயன்படுத்தி எரிபொருள் கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளார், மேலும் காரை தனது வீட்டில் நிறுத்துவதற்கான அனுமதியையும் பெற்றுள்ளார், மேலும் காலி உறுமய அறக்கட்டளைக்கு சொந்தமான காரைப் பயன்படுத்தி 2450 கிலோமீட்டர் தூரம் ஓட்டியுள்ளார். அதுமட்டுமல்லாமல், ஆளுநரின் செயலகத்தினால் வழங்கப்பட்ட வாகனத்திற்காக, 2022 ஜூலை மாதம் முதல் மதிப்பாய்வின் ஆண்டின் டிசம்பர் 31 வரை, ரூ.142, 280 பெறுமதியான 410 லீற்றர் எரிபொருள் காலி மரபு அறக்கட்டளையிலி ருந்து பெறப்பட்டது. மேலும், காலி மரபு அறக்கட்டளையின் பணிப்பாளர் கடமைகளை அவர் முழுநேர அடிப்படையில் செய்யவிருந்த போதிலும், அவர் | 2023 | அமைச்சரவை யின் தீர்மானங்களின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | காலி மரபுரிமை அறக்கட்டளையானது மாகாண சபையின் நிறுவனமோ அல்லது ஆளுநரால் நிர்வகிக்கப்படும் நிறுவனமோ அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் ஏற்பாடுகளின்படி நிறுவனம் செயல்படுவதாகவும், சம்பந்தப்பட்ட ஆய்வுகள் நிறுவனத்தின் பொறுப்பாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | இதற்கான முறையான விசாரணை நடத்தப்பட்டு, இதுவரை மேல் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவ்வாறு செய்யவில்லை | | | | |
| (ஐ) | ஆளுனரின் செயலாளர் அலுவகத்தில் அதிகாரப்பூர்வ வாகனங்களை ஆய்வு செய்தல் | | | | |
| | ஜனாதிபதியின் செயலாளரின் 2018 ஒக்டோபர் 12ஆம் திகதிய இலக்கம் PC/CSA/18-11 உடைய சுற்றறிக்கையின் 4.2 பிரிவு மற்றும் 2021ஆம் ஆண்டு டிஸம்பர் 29ந் திகதி இலக்கம் 2018/13 )IV) உடைய திருத்தப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவை செலுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது . தென் மாகாண ஆளுனர் செயலாளர் அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரிக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ காருக்குப் பதிலாக தென் மாகாண ஆளுநரின் அதிகபூர்வ வாகனம் அல்லது ஆளுநரின் பாதுகாப்பு கார் 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அகஸ்ட் மாதம் வரை கால கட்டத்தில் உத்தியோகபூர்வ பணிக்காக பயன்படுத்தப்பட்டது, மேலும் மக்கள் தொடர்பு அதிகாரிக்கு ஒதுக்கப்பட்ட காருக்கு எரிபொருள் கொடுப்பனவுகளாக ரூ601., 512மாதத்திற்கு | 2023 | சுற்றரிக்கை யின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஜனாதிபதி செயலாளரினால் பொதுச் செலவு முகாமைத்துவத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஜனாதிபதி சுற்றறிக்கையின் பிரகாரம், மக்கள் தொடர்பு அதிகாரி பயன்படுத்தும் உத்தியோகபூர்வ காருக்கு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது. இதே சுற்றறிக்கையின் விதிகளின்படி ஆளுநரின் பாதுகாப்பு வாகனங்களுக்கு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எரிபொருள் லீற்றர் தொகைக்கு மாதாந்தம் எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக வும் அறிவிக்கப் பட்டுள்ளது. | இதுவரை இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 213லிட்டர் எரிபொருள் மற்றும் 1704லிட்டர் எரிபொருளாக வழங்கப்பட்டது . மேலும், அதே காலக்கட்டத்தில் ஆளுநரின் பாதுகாப்பு வாகனத்திற்காக ஆளுநரிடம் மாதந்தோறும் 495 லிட்டர் படி லீட்டர் 3960 க்காக ரூ.1,397,880 தொகையும் செலுத்தப்பட்டது.. | | | | |
| (ஒ) | 06 உறுப்பினர்களைக் கொண்ட தென் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தற்போதைய தலைவருக்கு 78 வயது. ஒரு உறுப்பினரின் வயது 54 ஆகவும், மற்ற உறுப்பினர்களின் வயது 65 முதல் 77 வயது வரையிலும் அவர்களது சேவைக் காலம் 03 முதல் 29 வயது வரையிலும் இருந்தது. மேலும், 77 மற்றும் 78வயதுடைய இரண்டு உறுப்பினர்கள் 1994 மற்றும் 1997ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக மீண்டும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவில் அவர்களின் பதவிக்காலம் முறையே 29மற்றும் 26 | 2023 | கொமிஷன் சபையின் உறுப்பினராக தகுந்த மற்றும் வயது வரம்பு உள்ள உறுப்பினர் களை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். | தென் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தென் மாகாண சபையில் அந்தந்த பதவிக்காலத்தில் கடமையாற்றிய பல்வேறு ஆளுநர்களினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாவர். எந்தவொரு உறுப்பினரின் புதிய நியமனத்திற்கும் அத்துடன் மேற்கண்ட விதிகளின் கீழ் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட ஒருவரை மீண்டும் நியமிக்க மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் எந்தவொரு சட்ட ஏற்பாடுகளாலும் வரையறுக்கப்பட வில்லை. மேலும் இது மாகாண ஆளுநரின் விருப்புரிமைக்கு அமைய நடைமுறைப்படுத்தப்ப டும் விடயம் எனவும் | இதுகுறித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆண்டுகள் ஆகும். எனவே, ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிப்பதில் ஆளுநர் வயது வரம்பைக் குறிப்பிடாவிட்டாலும், பணிகளைச் செய்யும்போது சரியான நேரத்தில் மற்றும் பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு மிகவும் பொருத்தமான அதிகாரிகளை நியமிப்பது மிகவும் பொருத்தமானது என்று அவதானிக்கப்பட்டது. உறுப்பினர்களின் தொடர்ச்சியான நீண்ட கால சேவையின் மூலம் தனிப்பட்ட ஆதிக்கம் உருவாகிறது. | | | தெரிவிக்கப் பட்டுள்ளது. | |
| (ஓ) | ரூ.10,484,810 செலவில் 51 மடிக்கணினிகள், 54 டேப்லெட்டுகள் மற்றும் ஒரு கணினி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் 25ஆம் திகதி வழங்கப்பட்டு 2019 ஏப்ரல் 10ஆம் திகதி மாகாண சபை கலைக்கப்பட்ட போதிலும், அவை மீளாய்வுக்குட் பட்ட டிசம்பர் 31ஆம் திகதி வரை அவை மீண்டும் சபை செயலகத்தில் ஒப்படைக்கப்பட வில்லை, ஆனால் இதுவரை தேவையான | 2023 | உரிய மடிக்கணினிகள், டேப்லெட்கள், கணினிகள் ஆகியவற்றை மீட்டெடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். | மேலதிக பணிகளுக்கு உரிய நடவடிக்கைகளை பின்பற்றுமாறும், மீண்டும் மாகாண சபையொன்று அமைக்கப்படும் வரை இது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2024 செப்டம்பர் 30 ந் திகதி வரை தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை. | | | | |
| (ஔ) | 2019 ஆம் ஆண்டு முதல் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட நிலையான வைப்புத் தொகையான ரூ.626,355,000க்கான வட்டி வருமானம் ரூ.34,023,029 பெறப்பட்டது. வங்கியால் கழிக்கப்பட்டு உள்நாட்டு வருவாய் துறைக்கு நேரடியாக அனுப்பப்படும்உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்திட மிருந்து ரூ. 1,790,685 அல்லது அதிகாரசபைக்கு வரிப் பொறுப்பு இல்லை என்பதால், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட அனுமதிச் சான்றிதழின் அடிப்படையில் நிறுத்திவைப்பு வரியைக் கழிக்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட வங்கியிடம் கோரப்பட வில்லை. | 2023 | அதிகாரியால் செலுத்தப்படும் வரியை நிறுத்தி வைத்தல் ) WHT) தொடர்புடைய விதிகளின் படி கையாளப்பட வேண்டும் | வரி பிடித்தம் செய்வது தொடர்பாக உள்நாட்டு வருவாய் திணைக்களத்திற்கு பிடித்தம் செய்யும் வரி தொடர்பாக அறிவிக்கப் பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் எதிர்காலத்தில் பின்பற்றப் படும். | 2024 செப்டம்பர் 30ந் திகதி வரை தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில் லை |
| (ஃ) | 2015ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி, இமதுவ மாவட்ட வைத்தியசாலைக்கு சொந்தமான ஆம்புலன்ஸ் வாகனம் விபத்துக்குள்ளானமை தொடர்பில், விபத்து | 2023 | நிதி விதிகளை பின்பற்றி விசாரணை அறிக்கையின் பரிந்துரை களை அமல்படுத்த வேண்டும். | 2015 ஆம் ஆண்டு மே மாதம் 21 ந் திகதி ஆம்புலன்ஸ் விபத்து உள்ளானதொடர்பாக, , கோப்புகளை ஆய்வு செய்த போது குறிப்பிடப்பட்ட | முதற்கட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்ப ட்டு அது தொடர்பான இழப்புகளை மீட்பதற்கான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இடம்பெற்று ஒரு வருடத்திற்குப் பிறகு காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதன் காரணமாக காப்புறுதி இழப்பீடு கிடைக்கவில்லை. 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ந் திகதி மூவரடங்கிய குழுவின் அறிக்கையின்படி, பழுதுபார்ப்பு பலனளிக்காததால், வாகனம் கழிவுப் பொருளாக அகற்றுவதற்காக 2017 ஜனவரி 10 திகதி அன்று வாகனத்தை சுகாதார அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக, 2015 நவம்பர் 23 ஆம் தேதி நியமிக்கப்பட்ட முதற்கட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்படவில் லை மற்றும் விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளின்படி மதிப்பாய்வின் ஆண்டு டிசம்பர் 31 வரை இழப்பு மீட்கப்பட வில்லை. | | | முதற்கட்ட விசாரணை அறிக்கைகளுக்கும் மற்றும் நிதி ஒழுங்கு முறை அறிக்கைகளுக்கும் முரண்பாடு காணப்பட்டதால், இது தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்க முதல் பிரதான அமைச்சுவின் செயலாளருடன் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு பெற்றுத் தருமாறு 2024 ஆம் ஆண்ட ,மார்ச் மாதம் 13 ந் திகதி அன்று சமர்ப்பிக்கப்பட்டன | நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட வில்லை. |
| (க) | அலுவலகத்தில் இடப்பற்றாக்குறை காரணமாக, மாத்தறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அறை அலுவலகத்தின் முன் கொண்டு வரப்பட்டு திருத்தப்பட்டு வதற்காக 2,711,538 ரூபாய் என மதிப்பிடப்பட்டு 2023 | 2023 | பொதுச் செலவினங்கள் வட்ட விதிகளின்படி திட்டமிட்ட முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். | நிறுவனத்திற்கு வருகை தரும் வாடிக்கையாளர்களின் வசதிக்காக முன் அலுவலகம் அமைப்பதே இந்த புனரமைப்பின் முதன்மை நோக்கமாக இருந்ததாலும், முந்தைய உதவி ஆணையாளர் அலுவலகம் மின்சாரம் | மாகாண சபை நிதி பயனற்ற முறையில் செலவிடப் பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வில்லை . |

ஆண்டு அக்டோபர் மாதம் 27ந் திகதி அன்று ஒப்பந்தம் செய்யப்பட்டது 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தை நவீனப்படுத்து வதற்காக ரூபா 5,249,116 செலவிடப்பட்ட நிலையில், 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ந் திகதியிட்ட இலக்கம் BD/CBP/ 2022- 04/01/01 உடைய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இற்கு இணங்காமல் 04 வருடங்களுக்கு முன்னர் ரூபா 5,249,116 செலவழித்து நவீனப்படுத்தப்பட்ட அலுவலக வளாகம் போதுமானதாக இல்லை என்று குறிப்பிட்டு சுற்றறிக்கையின் விதிகளுக்கு மாறாக, 2023 ஆம் ஆண்டில், மீண்டும் ரூ.2,711,538-க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு, சீரமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது

(ஙு) தென் மாகாண சபையினால் புதுப்பிக்கத்தக்க சூரிய சக்தியை உற்பத்தி செய்து 50மெகாவாட் மின்சாரத்தை தேசிய மின்சக்தி அமைப்பில் சேர்ப்பதுடன் மாகாண சபையின் புதிய

| 2 | பத்துபிட்டியவல மருத்துவமனையில் ரூபா 1,955,745 பெறுமதியான 46 மருந்து வகைகளும் மீரிகம மருத்துவமனையில் ரூபா 69,945 பெறுமதியான 06 மருந்து வகைகளும் ஹொரண ஆதார வைத்தியசாலலயில் ரூபா 130,021 பெறுமதியான 14 மருந்து வகைகளுமாக 03 மருந்துவமனைகளில் ரூபா 2,155,711 பெறுமதியான 66 மருந்துவகைகளும் மீளாய்வாண்டில் காலாவதியாகியிருந்தது. காலவதியடைவதற்கு முன்னர் இந்த | **2021** | காலாவதி அடைவதற்கு முன்னர் இந்த மருந்துகளை பயன்படுத்தக்கூடிய மருத்துவ மனைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையிலான சிகிட்சைகளுக்காக மருத்துவமனைகளுக்கு வருகைதந்த நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது. மேலும் இந்த நிலைமை நாடு முழுவதும் அனைத்து மருத்துவமனைகளில் நிலவிய காரணத்தினால் பெரும்பாலான மருந்துகளை ஏனைய மருத்துவமனைகளுக்கு மாற்றுதல் சிரமமாக காணப்பட்டது. | காலாவதி அடைவதற்கு முன்னர் இந்த மருந்துகளை பயன்படுத்த நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மருந்துகளை பயன்படுத்துவதற்கு அல்லது பயன்படுத்தக்கூடிய மருத்துவமனைகளுக்கு மாற்றும் நடைமுறையொன்றினை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 3 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க வீட்டினை வழங்கக்கூடியதாக இருந்த போதிலும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் மாதாந்த வீட்டு வாடகையாக ஒரு படியினைச் செலுத்துவதற்கு எதுவித இயலுமையும் இல்லாதிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாது உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்கும் வரை தற்காலிகமான கொடுப்பனவாகக் காட்டி மேல் மாகாண சபையின் உயர் பதவிகளை வகிக்கும் 11 உத்தியோகத்தர்களுக்கு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 20,054,032 தொகை மாதாந்த உத்தியோகபூர்வ இல்ல வாடகை செலுத்தப்பட்டிருந்தும் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்கு மேற்கூறிய 05 | **2022** **2023** | தாபன விதிகோவையின் ஓஐஓ ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எை.ۘ.100.ۘ.11-2017-01(ைைை) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் அதற்கான 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(5) ஆம் பிரிவின் கீழ் கௌரவ ஆளுனருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் படிகள் செலுத்தப்படுகின்றது. | 2024 ஆம் ஆண்டு வரையிலும் செலுத்தப்பட்ட வாறு உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆண்டுகளுக்குள் ஒரு திட்டமேனும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 4 | 2014 சனவரி 01 ஆந் திகதிய 01.⁚.2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் 2.1.3 (ை) ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் படியினை செலுத்தும் போது உரிய மாதத்தின் முதலாம் திகதி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள சாதாரண பெற்றோல் மற்றும் டீசல்களின் விலையினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். மேற்கூறிய அறிவுறுத்தல்களை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13.⁚.2008(ஐஏ) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றிக்கை மற்றும் 2019 மே 31 ஆந் திகதிய 13.⁚.2008(எ) ஆம் இலக்க திருத்திய அரசாங்க நிருவாக சுற்றிக்கைக்கு இணங்க உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள 52 | **2022** | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிரதம செயலாளர் அலுவலகத்தில் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படியினை வழங்கும் போது அது தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13.⁚.2008 (ை) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றிக்கையின் பிரகாரம் எரிபொருள் படியினை செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த சுற்றிக்கையில் எரிபொருள் சம்பந்தமாக காட்டப்பட்டுள்ள விடயங்களில் எந்த முறைமையிலும் எரிபொருளின் வகை தொடர்பாக காட்டப்பட்டிருக்கவில்லை என தயவாக தெரிவிக்கிறேன். | இரு உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் சுப்பிரி டீசல் மற்றும் சுபிரி பெற்றோல் ஆகியவற்றின் விலைகளை அடிப்படையாக படிகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுக்கு மாதத்தின் முதலாம் திகதியில் காணப்பட்ட ஒரு லீற்றர் எரிபொருளின் விலையாக கப்பர் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலின் விலையினை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த எரிபொருள் படி கணிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஒக்தோபர் மாதம் வரையான காலத்தில் ரூபா 6,183,569 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | | | |
| 5 | மாகொல சான்றுபடுத்திய பாடசாலையில் கணனி பிரிவு, சிற்றூழியர் இல்லம் மற்றும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 11,222,740 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டரங்கு 2023 யூன் மாதம் வரையும் விளைவற்றுக் காணப்பட்டன. | **2022**<br>**2023** | துரிதமாக பயன்படுத்தும் நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும். | விளையாட்டு மைதானத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் திஸ்ஸ வதிவிடம் பயன்படுத்தும் நிலையில் உள்ளது எனவும் சிற்றூழியர் இல்லம் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. | 2024 செப்தம்பர் வரையிலும் கணினி அலகொன்று மற்றும் சிற்றூழியர் இல்லம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 6 | 1992 இன் 01 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் மாகாண சபை வீதிப் பயணிகள் சேவை நியதிச்சட்டத்தின் கீழ் 2007 மார்ச் 16 ஆந் திகதிய 1488.᛬.32 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிட்ட 3.1 ஆம் இலக்க | **2022**<br>**2023** | நியதிச் சட்டத்திற்கும் நடைமுறைகளுக்கும் இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அனுமதிப்பத்திர பணிப்புரைகயையும் நிபந்தனைகளையும் மீறுகின்ற விசேட சந்தர்ப்பங்களின் போது தவிர அதிகார சபையின் நடைமுறைப் பாவனையில் அனுமதிப்பத்திரங்களை செல்லுபயற்றதாக்காது அந்த அனுமதிப்பத்திரங்கள் | கேள்வி முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

கட்டளையின் பிரகாரம் வெற்றிடங்களைப் பூர்ணப்படுத்துவதற்காக ஓட்டுனர்களைத் தெரிவுசெய்யும் போது மேல் மாகாணத்தில் செயற்படுகின்ற பயணிகள் போக்குவரத்திற்காக பஸ் ஓடக்கூடிய வீதிகளில் காணப்படுகின்ற அல்லது உருவாகும் வெற்றிடங்களின் தேவைப்பாட்டிற்காக பஸ்களை ஈடுபடுத்தும் வகையில் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதானது கேள்வி முறைமையின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற பஸ்ஸிற்கு சொந்தமான ஓட்டுனர்களுக்கு மாத்திரமாகக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக அதிகார சபையினால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சாதாரண சேவை, அதிசொகுசு சேவை, அதிவேக சேவை என்பவற்றின் கீழ் 6,161 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 5,064 அனுமதிப்பத்திரங்கள் அல்லது வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்க

வருடாந்தம் நீடிப்புச் செய்து இன்றுவரை பேணப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ளின் எண்ணிக்கையில் 82 சதவீதமானவை முறையான கேள்வி நடைமுறையினை பின்பற்றாது வழங்கப்பட்டிருந்தது. | | | | |
| 7 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாது மாகாண ஆளுனரின் அங்கீகாரத்தின் அடிப்டையில் மாத்திரம் மேல் மாகாண சபைக்கும் மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் நாடளாவிய பதவிகளுக்காக 50 உத்தியோகத்தர்கள் சட்டரீதியற்ற முறையாக ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் மேற்கூறிய உத்தியோகத்தர்களின் ஒப்பந்த காலத்தை அவ்வாறே நீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | **2022 2023** | ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். | தற்பொழுது அரசாங்க நிருவாக அமைச்சின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 8 | மேல் மாகாண சபையின் 10 நிறுவனங்களின் 14 பதவிகளுக்குரிய 39 உத்தியோகத்தர்களுக்கு பொது நிர்வாக சுற்று நிறுபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லையை விஞ்சி மாகாண ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாதாந்த | **2022 2023** | சுற்றுநிபத்தின் பிரகாரம் எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும். | பிரதான செயலாளரின் பரிந்துரை மற்றும் ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக. | 2024 செப்தம்பர் வரையிலும் செலுத்தப்பட்டவாறு காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எரிபொருள் எல்லையை அதிகரித்துக் கொண்டு 2012 ஆம் வருடத்தில் இருந்து 2023 டிசம்பர் 31 ஆம் தேதி வரை ஆன கால் பகுதிக்கு உரிய ரூபா 16 மில்லியன் கூடுதலாக எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. மேலும், குறித்த சுற்றுநிருபத்தின் உத்தியோகத்தர்களினால் மாதாந்தம் மேலதிக கடமை பயணங்களை மேற்கொள்ளும் போது மாத்திரம் பயணம் செய்த அளவின் பிரகாரம் மேலதிக எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு வல்லமையொண்டு காணப்பட்ட போதிலும் அந்த ஏற்பாடுகளின் கவனத்திற்கு கொள்ளாமல் மேலதிகமாக பயணம் சென்ற தூரத்தையும் கருதாமல் சுற்றுநிருபத்திற்கு முரணாக கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | | |
| 9 | சிறீ ஜயவர்த்தன புர கோட்டே மாநகர சபைக்குச் சொந்தமான ரூபா 7,000,000 மதிப்பீட்டுப் பெறுமதியான ஒரு கெப் வாகனம் 2017 ஆகஸ்ட் 31 ஆந் | **2022** | நிதிப்பிரமாணம் 104 அறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 104(4) அறிக்கை சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு எதிராக மேல் மாகாண ஆளுனரின் செயலாளரால் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள | நி.பி. 104 பரிசோதனைகள் நிறைவு செய்யப்பட்டு எஞ்சிய பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

திகதி ஆளுனரின் செயலாளரது தனிப்பட்ட வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த போது கீயால் முழுமையாக அழிவடைந்துள்ளது நி.பி 104(4) அறிக்கையின் பிரகாரம் வாகனத்திற்குப் பொறுப்பான சாரதியும் வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தரும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்கள் என நியமிக்கப்பட்டிருந்த துடன் அரசாங்கத்தின் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது தவறாகப் பயன்படுத்துவதற்கு இடமளித்தல் மூலம் அரசாங்கத்திற்கு மேற்கூறிய நட்டம் ஏற்படுவதற்கு அல்லது நட்டம் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தர் மாகாண அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தும் இன்னும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

து.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவரின் உத்தியோகபூர்வ கடமைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிகழ்கால மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,500,000 தொகையான ஒரு கெப் வாகனம் 2021 மே 09 ஆந் திகதி நாட்டில் காணப்பட்ட சச்சரவான சூழ்நிலையின் கீழ் ஆர்ப்பாட்டக்காரர்களால் மொரட்டுவை பிரதேசத்தில் தீ வைக்கப்பட்டிருந்ததுடன் அத்தீயினால் கெப் வாகனம் முழுமையாக அழிவடைந்திருந்தது. தலைவரினால் கணக்காய்வின் போது வழங்கிய கூற்றிற்கு இணங்க கெப் வாகனம் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது உத்தியோகபூர்வ வாகனத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட சாரதி இன்றி வெளிநபரினால் கெப் வாகனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் உத்தியோகபூர்வ பயணம் இல்லாது அரசியல் கலந்துரையாடல்.'. கூட்டத்திற்காக பங்குபற்றி திரும்பி வரும் போது வாகனம் விபத்துக்குள்ளாகியி | **2022** | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய மொத்த பெறுமதியான ரூபா 23,125,000 காப்புறுதி இழப்பீடாக ரூபா 10,000,000 கிடைத்திருந்ததுடன், பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ருந்தது என்பது வெளிப்படுத்தப்பட்டது. | | | | |
| 11 | ரூபா 158,000,000 பெறுமதியான 02 கொங்கிரீட் பரப்பும் இயந்திரங்கள் 2012 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் ஒரு இயந்திரம் கொள்வனவு செய்த திகதியிலிருந்து எந்த செயற்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாது விளைவற்ற ஒரு சொத்தாக மாறியிருந்ததுடன் மற்றைய இயந்திரம் கொள்வனவு செய்த திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையான 10 ஆண்டுகள் காலத்தில் 15 வீதிகளின் 420 மணித்தியால நிர்மாணிப்பிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததனால் குறைபயன்பாடுள்ள இயந்திரமாக மாறியிருந்தது. | **2022** | சொத்துக்கள் தேவைப்பாட்டிற்கு இணங்க கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கொங்கிரீட் பரப்பும் இயந்திரத்தின் மூலம் பல செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடன் நிலவியது. |
| 12 | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 6,000,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட கேப் இயந்திரமானது கொள்வனவு செய்த திகதியிலிருந்து எந்த செயற்திட்டத்திலும் சேவையில் | **2022** | சொத்துக்கள் தேவைப்பாட்டிற்கு இணங்க கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2023 ஆம் ஆண்டில் நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு மட்டத்தில் ஊரசடி றுயடட நிர்மாணிப்பதற்கு ஆலோசனை வழங்கி தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றது. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் விளைவற்ற சொத்தொன்றாக திவுலப்பிடிய பழைய நிலையத்தில் தரித்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்படாது திவுலபிடிய பழைய வேலைத்தளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததனால் அந்த இயந்திரம் விளைவற்ற சொத்தாக மாறியிருந்தது. | | | | வைக்கப்பட்டிருந்தது. |
| 13 | பொருளாதார மேம்பாட்டு பணியகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப் படுகின்ற விஸ் ப்ரோ அச்சகத்தில் முறையான உள்ளக கட்டுப்பாட்டு பிரமாணம் ஒன்று தாபிக்கப்படாமை மற்றும் அச்சகத்தின் மேற்பார்வை நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக 2023 ஆகஸ்ட் 08 ஆம் திகதியில் கணக்கிடப்பட்டிருந்த பௌதீக இருப்புக்கு உரிய பராமரிக்கப்பட்டிருந்த களஞ்சிய பேரேடு பணி பத்திர பொழிப்பு (துழடி ஊயசன)இ கொள்வனவு கட்டளை பொழிப்பு ரீசஉாயளந ழுசனநச ளூரஅஅநசல) என்பவற்றை அடிப்படையாக வைத்து 38 உருப்படிகளின் அச்சு பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது ரூபா 42 மில்லியன் | **2023** | முறையான விசாரணை ஒன்றின் பின்னர் நட்டங்களை அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | களஞ்சிய பொறுப்பாளரினால் மோசடி தன்மையான நோக்கத்தில் புசுே விநியோகிக்கப்பட்டு மற்றும் உண்மையாக இருப்புகள் களஞ்சியத்துக்கு கிடைக்கப் பெற்றதாக உறுதிப்படுத்தப்படாமல் அங்கீகாரம் வழங்கப்பட்டதன் மூலம் புசுே இடம்பெற்ற உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தகர்த்தெறியப்பட்டுள்ளதாக. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெறுமதியான அச்சு இருப்புகள் பற்றாக்குறை ஒன்று அவதானிக்கப்பட்டது டன் குறித்த இருப்பை கொள்வனவு செய்யும் போது ஒரு சில அச்சு பொருட்கள் நிருவனத்திற்கு கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றதாக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு சான்றுறுதி படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | | |
| 14 | சுற்றுலாத் துறையில் ஈர்ப்பை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்திற்காக மாகாண உள்ளூராட்சி அமைசசினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 14 மில்லியன் ஏற்பாட்டின் அடிப்படையில் பிழிகுத்துவ நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை ஆரம்பித்திருந்ததுடன் சுற்றுலா சபையினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை அடையாளம் கண்டு நடைமுறைப்படுத்தாததனால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தது. | **2023** | பிரச்சினைகளை அடையாளம் கண்டு செயற்த்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். | செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் சமூகம் மற்றும் பொறுப்புள்ள அரச நிறுவனங்களுடன் பட்டறை ஒன்றை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் கௌரவ விகாரையின் தலைமை மத குருவின் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப செயற்பாடுகளை அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக. | செயல்திட்டத்தின் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | 2012 ஆம் வருடத்தில் மாகாண அபிவிருத்தி நன்கொடையின் கீழ் ரூபா 156 மில்லியன் ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு மின்வான்கூட ரெஜினா தூங்க கனிஷ்த வித்யாலயத்தில் நீச்சல் தடாகம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது நீச்சல் தடாகம் வாகன நிறுத்துமிடம் ஆடைகளை மாற்றிக் கொள்ளும் அறை கழிவறைகள் வியாபார நிலையம் உட்பட 03 மாடிகளினாலான நிர்மாண பணிகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 187 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. நீச்சல் தடாகம் செயல் திட்டம் திட்டமிடப் பட்டதன் பிரகாரம் ஒரு வருடத்திற்குள் நிறைவு செய்வதற்கு தவறு இருந்தலுடன் தவறி இருந்தலுடன் செயல் திட்டம் 2012 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் செயற் படுத்தும் நிலைமைக்கு மாற்றுவதற்கு முடியாது போயிருந்தது. | **2023** | உரிய காலத்திலும் செயல் திட்டம் நிறைவு செய்யப்பட வேண்டும். | ஏற்பாடுகள் உரிய வகையில் கிடைக்கப்பெறாத காரணமாக தாமதம் அடைந்ததாக மற்றும் எஞ்சிய 04 மாதங்களுக்குள் வேலைகளை நிறைவு செய்து பொறுப்பளிப்பதற்கு உள்ளதாக. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவ்வாறே எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள் செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு முடியாததன் அடிப்படையில் ரூபா 156 மில்லியன் க்கு மதிப்பிடப்பட்டிருந்த செயற்திட்டத்திற்காக மீண்டும் ரூபா 277 மில்லியன் மதிப்பிடப்பட்டு இருந்ததுடன் குறித்த காலத்திற்குள் செயல் திட்டத்தை நிறைவு செய்ய முடியாததன் காரணமாக, மாகாண சபைக்கு ரூபா 31 மில்லியன் ஆன மேல் அதிக கிரயம் ஒன்றை மேற்கொள்வதற்கு நேர்ந்திருந்தது. | | | | |
| 16 | அரசினால் புதிய வியாபாரங்களை ஆரம்பித்தல் மூலதன செலவுகளை மேற்கொள்ளுதல் முழுமையாக கைவிடுமாறு அறிவிக்கப்பட்டு இருந்தபோதிலும் இது தொடர்பாக கவனத்தை மேற்கொள்ளாமல் மற்றும் முறையான சாத்திய வள ஆய்வொன்று.˙. செயற்திட்டமொன்று இல்லாமல் மினுவன் கொட வழ்பிட்ட மீன்களை தயாரிக்கும் செயல் திட்டம் ஒன்று 2020 ஆம் வருடத்தில் ஆரம்பிப்பதற்கு விவசாய | **2023** | செயற்திட்டம் உரிய வகையில் திட்டமிடப்பட வேண்டியதுடன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சுற்று நிருபம் வெளியிடப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தற்போது பொதி செய்கின்ற களஞ்சியம் பாவனைக்கு உட்படுத்தப்படுவதுடன் வுநளவ சுரெ சிலவும் மேற்கொள்ளப்பட்டதனால் இயந்திர சாதனங்கள் விளைவற்று காணப்படாது உள்ளத்துடன் சில இயந்திர சாதனங்களுக்கு 2023 செப்டம்பர் வரையும் உத்தரவாத காலம் காணப்படுவதாக. | செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப் படவில்லை. |

அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. டின் மீன்களை தயாரிப்பதற்காக தொழிற்சாலை ஒன்று நிர்மாணிக்க படாத போது டின் மீன்களை தயாரிக்கும் இயந்திரத் தொகுதியை கொள்வனவு செய்திருந்ததுடன் அமைசசினால் செயற் திட்டத்திற்காக ரூபா 94 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பல வருடங்களின் பின்னர் தொழிற்சாலை நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டு 2023 ஆம் வருடத்தில் உற்பத்திகளை ஆரம்பிக்கின்ற சந்தர்ப்பங்களில் செய்யப்பட்டிருந்த இயந்திரங்களின் உத்தரவாத காலமும் கடந்திருந்தது. மேலும் புதிய தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஆட் சேர்த்தல் மற்றும் இயந்திரத்த தொகுதியின் பொதி செய்யும் களஞ்சியம் மற்றும் கழிவு நீரை அகற்றும் கட்டமைப்பொன்று மற்றும் புதிய நிர்மானத்திற்காக ரூபா 213 மில்லியன் உள்ளடங்களாக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை ரூபா 307 மில்லியன் ஆகும். | | | | |
| 17 | கல்வி அமைச்சுக்கு உரித்தான மோட்டார் வாகனமொன்று 2016 ஏப்ரல் 16 ஆம் தேதி தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவை நுழைவிலே திடீர் தீப்பிடித்தலுக்குள்ளாக இருந்த உடன் அதன் முழுமையான நட்டமான ரூபா 2.7 மில்லியன் ஆண் மோட்டார் வாகனத்தை செலுத்திச் சென்ற உதவி செயலாளர் இடம் இருந்து அளவிடப்பட வேண்டிய அளவிடப்பட வேண்டிய ரூபா 2.6 மில்லியன் ஆன தொகையை அறவிடப்பட்டிருக்கவில்லை. | **2023** | நட்டத்தை உரிய தரப்பினரிடம் இருந்து துரிடிதமாக அறவிட்டுக் கொள்ளப்பட வேண்டும். | இந்தப் பெறுமதியை அறவிட்டுத் தருமாறு கேட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதிகளுடன் பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கும் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக . | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் ரூபா 2.6 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 18 | மேல் மாகாண சபையின் கொழும்பு களுத்துறை மற்றும் கம்பகா ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளின் குறைபாடுகள் மற்றும் அவற்றின் வசதிகளை மேம்படுத்துவதற்கு போதுமான அளவு நிதியங்கள் காணப்படாத போது கல்வி அமைச்சின் ஊடாக 2023 ஆம் வருடத்தில் | **2023** | அத்தியாவசியமான நடவடிக்கைகளுக்காக அரசு நிதி பாவிக்கப்பட வேண்டும். | மேல் மாகாண வெஸக் உற்சவம் ஆக ஏற்பாடு ஆகி வந்ததுடன் மகர பிரதேச செயலாளர் போக்குவரத்து இராஜாங்க அமைச்சும் அமைப்பின் உதவியோடு மற்றும் இணைப்பை ஏற்படுத்தியுள்ள ஜனாதிபதி செயலாளரினால் விடயத்திற்காக உதவுமாறு ஆளுநருக்கு கடிதம் ஒன்று | 2024 ஆம் ஆண்டின் மஹர பொசன் வலயத்திற்கு நிதி வழங்கப்பட்ட நிதி வழங்கப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடவத்தை மஹர வெஸக் வலயத்துக்காக நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக கூடுகள் ஒளிபரப்பு இயந்திரம் மற்றும் அலங்கார நடவடிக்கைகளுக்காக ரூபா 10 மில்லியன் தொகை அன்று மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக செலவிடப்பட்டிருந்தது. | | | சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | |
| 19 | 2022 மார்ச் 07 மற்றும் NSCC/10/79/GE/AL ஆம் இலக்க தேசிய சம்பள ஆணை குழுவின் கடிதம் 2019 மார்ச் 29 ஆம் திகதிய மற்றும் ஆம் இலக்க PS/PCMD/SD/01/08 ஜனாதிபதி செயலாளர் சுற்றறிக்கை மற்றும் 2018 ஜூலை 18 ஆம் திகதிய 03.⁚.2018 இலக்க முகாமைத்துவ சேவை சுற்று நிறுபங்களுக்கு முரணாக பாதீட்டு பிரிவின் உத்தியோகத்தர்களின் சாதாரண கடமையான பாதிட்டை தயாரித்தல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலுக்காக பிரதான செயலாளர் உதவி பிரதான செயலாளர் (நிதி) பணிப்பாளர (பாதிடு) | **2023** | சுற்று நிறுபத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சிக்கலான பணிகளின் தொகுதி ஒன்று செயல்படுத்தப்படுவதாக. | 2024 ஆம் ஆண்டின் போதும் செலுத்தப்பட்டவாறு காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உள்ளடங்களாக பாதிட்டு பிரிவின் 06 உத்தியோகத்தர்களுக்கு சுற்று நிறுபத்திற்கு முரணாக 2020 ஆம் வருடத்தில் இருந்து 2023 ஆம் வருடம் வரை அவர்களின் சம்பளத்துக்கு மேலதிகமான சம்பளத்தின் 1/3 ஆக ரூபா 3.6 மில்லியன் கொடுப்பனவொன்று 05 மாத காலத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது. | | | | |
| 20 | மாகாண நிதி விதி 416.1 மற்றும் 2006 பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் மேல் மாகாண சபையின் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு சுகாதார சேவை மற்றும் பாதுகாப்பு சேவைக்குரிய பெறுகைகள் செயற்பாட்டுகளின் அல்லாமல் பெற்றுக் கொள்ளப்பட்டு 2023 வருடத்திற்காக ரூபா 101 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | **2023** | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக. | 2024 ஆம் ஆண்டின் போது சேவைகளை பெற்றுக்கொள்ள பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| 21 | கூட்டு மொத்தம் ரூபா 5 மில்லியன் ஆன 17 சொத்துக்களின் அளவுகள் 03 வருடங்களிலிருந்து 05 வருடங்கள் வரையான காலம் | **2023** | சொத்துக்களை பயன்பாட்டுக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்வதாக. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விளைவற்று அல்லது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | | | | |
| 22 | பிரதான செயலாளரின் பெயரில் மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 13 வாகனங்களின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. | **2023** | பௌதீக இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாக. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் நிலவுகை உறுதிப்படுத்தப்படவில்லை. |
| 23 | மேல் மாகாண வருமானங்கள் திணைக்களத்தினால் காணிகள் உரிமை வழங்குவதற்காக முத்திரை கட்டணங்களை அறவிடும் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு முறைமையின் பலவீனம் காரணமாக 2017 நவம்பர் 30 ஆம் திகதி 738 ஆம் இலக்க பத்திரத்தை வழங்குவதற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 4 மில்லியன் முத்திரை கட்டணத்துக்கு உரிய முத்திரை கட்டணத்தை குறித்த நொத்தாரிசினால் மேல் மாகாண வருமானங்கள் திணைக்களத்துக்கு செலுத்தப்படாமல் தனிப்பட்ட பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தது. இந்த பணம் மற்றும் | **2023** | வருமானங்கள் அறவிட்டுக்கொள்ளப்பட வேண்டும். | கொழும்பு மஹேஸ்த்ராத் நீதிமன்றத்தில் வழக்கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாக. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அது தொடர்பான தண்ட பணம் என்பவற்றுடன் ரூபா 8 மில்லியனை அறவிட்டுக்கொள்வதற்காக கொழும்பு மஹேஸ்த்ராத் நீதிமன்றத்தின் 47142.˙.5 இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த காலப்பகுதிக்குள் குறித்த நொத்தாரிஸ் இறந்ததன் காரணமாக மேல் மாகாண வருமானங்கள் திணைக்களத்துக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 4 மில்லியன் முத்திரை கட்டணம் அறவிட்டுக் கொள்வதற்கு முடியாது போயுள்ளது. | | | | |
| 24 | சுகாதாரத் திணைக்களத்தின் வாகன அணியில் 2017- 2022 வருடங்களில் இருந்து பாவனைக்குட்படுத்தப்படாத எரிபொருட்கள் பெறப்படாத 42 வாகனங்கள் காணப்படுகின்றது. இந்த வாகனங்களில் 21 வாகனங்கள் 2019 ஆம் வருடத்திலிருந்து நீண்ட காலமாக வாகன தறிப்பிடத்தில் மற்றும் அலுவலக வளாகத்தில் வெயிலுக்கும் மழைக்கும் பாதுகாப்பின்றி | **2023** | திருத்தங்களை மேற்கொண்டு பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு அல்லது நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | திருத்த வேலை நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதாக அல்லது நீக்கும் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதாக. | திருத்தங்களை மேற்கொண்டு பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு இயலுமான வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சிதைவடையும் நிலையில் காணப்படுகின்றது. | | | | |
| 25 | சுகாதார சேவை திணைக்களத்தின் பெயரில் மோட்டார் வாகனத்தினை களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 87 வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. | **2023** | வாகனங்களின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படுவதாக. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் நிலவுகை உறுதிப்படுத்தப்படவில்லை. |
| 26 | கொட்டதெனியாவ கால்நடை கட்டுப்பாட்டு மத்திய நிலையம் மற்றும் புல் வளங்கள் மத்திய நிலையத்திற்காக காணிகள் மறு சீரமைப்பு ஆணைக்குழுவினால் 16 ஹெக்ரேயர் காணியொன்று திணைக்களத்திற்கு 2003 ஜனவரி 28 ஆம் திகதி சுவீகரிக்கப்பட்டிருந்தது. அதற்காக செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டு தொகையான ரூபா 26 மில்லியனில் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 24 மில்லியன் செலுத்துதல் 18 வருட காலமாக தாமதம் அடைந்ததன் காரணமாக ரூபா 32 மில்லியன் வட்டித் தொகை யொன்று திணைக்களத்தினால் விளைவற்று செலுத்தப்பட்டிருந்த | **2023** | அரச பணங்கள் சிக்கனத்தன்மையுடனும் வினைத்திறனுடனும் செலவிடப்பட வேண்டும். | இழப்பீட்டுத் தொகை செலுத்துவதற்கு உரிய தாமதம் தொடர்பாக உத்தியோகத்தர்களின் குறைபாடொன்று காரணமாக இடம்பெற்றதா என்பதை கண்டறிய முடியாது உள்ளதாக. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் இழப்பீட்டுத் தொகை செலுத்துவதற்கு உரிய தாமதத்திற்கான காரணம் கண்டறியப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | து. | | | | |
| 27 | கம்பஹா மாவட்டத்தினுள் 25 சனச சங்கங்கள் கூட்டுறவு நியதிச் சட்டத்திற்கு மற்றும் விதிகளுக்கு முரணாக கூட்டுறவு ஆணையாளரின் அனுமதியின்றி புனுஊ கம்பெனியில் பணத்தை முதலிடுதல் மற்றும் கடன் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சங்கங்களில் காணப்பட்ட நிதி முறைகேடுகள் நிதி மோசடிகள் காரணமாக நிதி நெருக்கடிக்குள்ளாகியதனால் 61,393 உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்களிடம் பெற்றுக்கொண்ட ரூபா 6,761 மில்லியன் வைப்பு பணத்தை மீண்டும் திருப்பி செலுத்துவதற்கு முடியாததன் அடிப்படையில் கம்பஹா மாவட்ட சனச சங்கத்தின் வியாபாரம் சரிவடைந்து. இருந்தது இந்த முதலீட்டு பணத்தை மற்றும் கிடைக்க வேண்டிய வட்டி வருமானங்கள் என்பவற்றை பெற்றுக் கொடுத்தல் புனுஊ நிறுவனத்தினால் தவறியிருந்த போதிலும் இது தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி | **2023** | கூட்டுறவு நியதிச் சட்டம் மற்றும் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இடம்பெற்றுள்ள நிதி இழப்புக்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியவர்களிடம் இருந்து அளவிட்டுக் கொள்வதற்கு காக சங்கத்துக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது உடனடியாக முதலீட்ட பணத்தை உடனடியாக பெற்றுக் கொள்வதற்கும் குறித்த கம்பெனியின் சொத்துக்களை தடை செய்வதற்கும் தேவையான தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதற்கான தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அறிவுரைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதாக. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆணையாளரினால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 28 | கொழும்பு கம்பஹா மாவட்டங்களில் உள்ள 5 கூட்டுரவு சங்கங்களின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி மற்றும் நிதி பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 338 மில்லியன் ஆக காணப்பட்டவுடன் அந்த மாவட்டத்தின் உதவி கூட்டுறவு ஆணையாளரினால் இது தொடர்பான தேவையான நடவடிக்கைகள் மற்றும் நிதி நட்டத்தை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | **2023** | நிதி நட்டத்தை அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்வதற்கு பரிசோதனை ஒன்று மேற்கொண்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பாராளுமன்றத்தினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற அறிவுரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் நிதி நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 29 | கொழும்பு மாவட்டத்தில் நிதி நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள 18 சங்கங்கள் மற்றும் கம்பஹா மாவட்டத்தில் நிதி நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள 24 சங்கங்கள் விநியோகித்துள்ள கடன் பெறுமதி முறையே ரூபா 3,586 மில்லியன் மற்றும் ரூபா 3,545 மில்லியன் ஆக கூட்டு மொத்தம் ரூபா 7,131 மில்லியன் ஆக | **2023** | நியதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படுவதாக. | 2024 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரையிலும் அறவிடப்படாதுள்ள கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

காணப்படுவதுடன்
மீளாய்வாண்டாகும்
போது மொத்த
கடன் அளவுகளும்
அறவிடப்படாமல்
காணப்படுகின்ற
காலம் கடந்த
கடனாக
உள்ளதனால் அந்த
சங்கங்கள்
உக்கிரமான
நெருக்கடிக்கு
உள்ளாகியிருந்தது.

## 3.9 வடக்கு மாகாண சபை

| | மொத்த சொத்து ரூபா. | மொத்த பொறுப்பு ரூபா. | உரிமையாண்மை ரூபா. | வரிக்கு முந்திய இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 24,930,395,055 | 2,295,244,982 | 22,635,150,073 | 1,962,945,042 | முனைப்பழியுள்ளது |
| **2022** | 25,762,571,206 | 2,605,405,884 | 23,157,165,322 | 2,179,700,169 | முனைப்பழியுள்ளது |
| **2023** | 57,686,289,955 | 3,179,292,062 | 54,506,997,893 | 2,640,356,377 | முனைப்பழியுள்ளது |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கை வருடம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தவிர்ப்பு செயற்பாடு | அது தொடர்பில் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | வைத்திய அதிகாரி - 01 தரத்தினை உடைய பிரதி வைத்திய நிர்வாக வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள வைத்திய அத்தியட்சகர் பதவியை கொண்டுள்ள வைத்திய அதிகாரி ஒருவருக்கு 22/99 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாறான வகையில் ஒதுக்கப்படுகின்ற வாகனத்திற்காக வழங்கப்படுகின்ற மாதாந்த போக்குவரத்து மற்றும் எரிபொருள்படி 2015 நவம்பர் மாதத்தில் இருந்து 2020 யூலை மாதம் வரை ரூபா. 3,599,640 கொடுப்பனவு இடம்பெற்றுள்ளது | 2021 | மேற்க்கொள்ளப்பட்ட முறையற்ற கொடுப்பனவுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வழங்கப்பட்ட ஒழுங்கற்ற மாதாந்த போக்குவரத்துப்படி ரூபா 3,599,640 இனை குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு மேற்கொள்வதற்கு மாகாண சுகாதார பணிப்பாளருக்கு சுகாதார அமைச்சின் செயலாளரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அறவிடப்பட்டதும் தங்களுக்கு அறியத்தரப்படும். | ஆக்க” ர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | பருத்தித்துறை வைத்தியசாலையில் 2016 ஒக்டோபர் மாதத்தில் நிறுவப்பட்ட ரூபா. 8 மில்லியன் பெறுமதியான எரியூட்டல் இயந்திரம் (Incinerator) போதிய பாதுகாப்பு இன்றியும், உத்தரவாத காலத்துக்கு பின் ஒழுங்குமுறையாக பராமரிக்கப்படாமையாலும் மற்றும் முறையான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமல் நிறுவப்பட்டதனால் இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. | 2021 | கருத்திட்டங்கள் நிறைவேற்ற முன்னர் உரிய முறையில் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | இன்சினிறேட்டர் இடம் மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதும், பொது மக்களின் எதிர்ப்பின் காரணமாக வேறு இடங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. எனினும் எரியூட்டும் இயந்திரத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பயன்படுத்தப் படாமலேயே செயலிழந்துள்ளது. |
| 3. | (ஏ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறியின் 8.9.1 (ஆ) ஏற்பாடுகளுக்கு மாறாக உடன்படிக்கை கைசாத்திடாமல் கூட்டு மொத்தம் ரூபா.43,436,553 எட்டு பெறுகைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. | 2021 | குறித்த பெறுகை வழிகாட்டிநெறியின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் | இனிவரும் காலங்களில் பெறுகை கைநூல் மற்றும் வழிகாட்டல் 8.9 (ஆ) இற்கு அமைவாக பண்டங்களுக்கான கொள்வனவுகளுக்கும் ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தற்போதும் ஒப்பந்தங்களின்றி பெறுகைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. |
| 4. | ரூபா. 80,855,814 கூட்டுமொத்தமான உள்;ராட்சி சபைகளுக்கு | 2021 | உள்@ராட்சி நிறுவனங்களுக்குரிய தொகையினை | வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாண காணிப் பதிவகங்களிலிருந்து விபரங்களை | முழுமையாக உள்;ராட்சி நிறுவனங்களால் கோரிப் பெறப்பட்டிருக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உரித்தான முத்திரை வரிகள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக உரிய உள்;ராட்சி நிறுவனங்களால் கோரிப்பெற்றிருக்க ாமையால் மீளாய்வாண்டில் மாகாண சபையின் வருமானத்திற்கு மாற்றப்பட்டிருந்தது . | | இனங்காணக் கூடிய வகையிலான நடைமுறை யொன்று தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் காணப்படுகின்றது. மீளளிப்பு கோரிக்கையினை சமர்ப்பித்து இம்முத்திரைத் தீர்வை மீளளிப்பினை பெற்றுக்கொள்வதற்க ான நடவடிக்கைகள் உள்@ராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்படுகி ன்றன | க வில்லை. |
| 5. | வடக்கு மாகாணசபையின் நிதிக்கூற்றின் பின்னிணைப்பு (i) இன் நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் வெளிப்படுத்தப்பட் டிருந்த ரூபா. 20.44 மில்லியன் பணமோசடி தொடர்பில் விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டு மாகாணசபையின் நிதியினை அறவிட்டுப் பெற்றுக்கொள்வத ற்கான நடவடிக்கைகள் நாளதுவரை மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | 2022 | மாகாண சபைக்கான இழப்பு அறவிடப்படல் வேண்டும். | மாகாண சபை நிதியினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தற்போதுவரை அறவிடப்பட வில்லை. |
| 6. | வடக்கு மாகாணத் திறைசேரிக்கு 2016 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டுவரையான காலங்களிற்காக கிடைக்கப்பெற்றிரு ந்த கூட்டுமொத்தம் | 2022 | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வடக்குமாகாண முத்திரைத் தீர்வைக் கைமாற்றுதல் நியதிச் சட்டத்தின் பிரிவு 2 உட்பிரிவு 2 இற்கு அமைவாக கோரப்படாத 02 வருடங்களிற்கு | முழுமையாக விடுவிக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா. 266 மில்லியன் முத்திரைத் தீர்வைகள் பொது வைப்புக் கணக்கில் பேணப்பட்டுவந்த போதிலும் அவற்றைக் குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு உரியகாலப் பகுதியில் வழங்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | மேற்பட்ட முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் நானாவித வருமானத்திற்கு மாற்றப்பட்டது. | |
| 7. | 2000 ஆம் ஆண்டிலிருந்து நாளதுவரை 06 கல்விவலயங்களிலுள்ள 69 பாடசாலைகளில் யுத்தம், களவு காரணமாக காணாமல் போன கூட்டுமொத்தம் ரூபா. 55 மில்லியன் பெறுமதியான நட்டங்கள் தொடர்பில் கடந்த 22 ஆண்டுகளாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தற்போது இது தொடர்பான அறிவுறுத்தல்கள் உரிய வலயங்களுக்கு வழங்கப்பட்டு இது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விரைவில் மேற்படி நட்டங்கள் பதிவளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர் நடவடிக்கை முழுமைப்படுத் தப்படவில்லை. |
| 8. | 10 கல்வி வலயங்களில் நியமனம் பெற்று 03 ஆண்டுகளை கடந்துள்ள நிலையிலும் 01 இலிருந்து 07 ஆண்டுகளாக 639அதிபர், ஆசிரியர் மற்றும் பணியாளர்களிற்கு | 2022 | சேவையில் உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் உரிய காலப்பகுதியில் அலுவலர்களை சேவையில் உறுதிப்படுத்துவதற்கேற்ப பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | முழுமையாக சீர்செய்யப் பட்டிருக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சேவையில் உறுதிப்படுத்தாது தொடர்ந்தும் சம்பளம் வழங்கப்பட்டுவருவதுடன் இதனை சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 9. | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியினூடாக 2019 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தியை நோக்கமாக கொண்டு அங்குள்ள 04 கூட்டுறவுசங்கங்களின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா. 43.84 மில்லியன் பெறுமதியான இயந்திர உபகரண தொகுதிகள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது 03 வருடங்களாக பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | 2022 | பயன்பாடற்ற சொத்துக்கள் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | தற்போதும் பயன்பாடற்று காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | மீளாய்வாண்டில் 03 எண்ணிக்கையான மாகாண அமைச்சுக்கள் மற்றும் 05 எண்ணிக்கையான திணைக்களங்களினால் ஏல விற்பனை செய்யப்படுவதற்காக ரூபா 16,970,739 பெறுமதியான 56 எண்ணிக்கையான மோட்டார் வாகனங்கள் அறிக்கையிடும் திகதி வரையும் ஏல விற்பனை இடம்பெறாத போதும் குறித்த நிறுவனங்களின் நிதிநிலைமைக கூற்றிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | 2023 | நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏலவிற்பனைக்குரிய நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்தமையினாலும் 2023 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் இப் பாவனையற்ற வாகனங்களின் பெறுமதி நிதியல்லாச் சொத்தாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சீர் செய்யப்படவில்லை. |
| 11. | 2006 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி பிரிவு 8.9.1(ஆ) இன் பிரகாரம் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை மற்றும் சுதேச மருத்துவ திணைக்களத்தில் 18 எண்ணிக்கையான சமைத்த உணவு மற்றும் உலர் உணவு வழங்கல்களின் | 2023 | பெறுகை வழிகாட்டியுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சீர் செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்காது சேவை பெறப்பட்டிருந்தது. | | | | |
| 12. | வடக்கு மாகாணசபையின் மாகாண நிதி விதிகள் இல. 131.3 இன் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தின் வியாபார முற்பணக்கணக்கு முயற்சியில் பண்ணை முகாமையாளரினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பணம் சேகரிப்பின் போது கையொப்பங்கள் இடப்படாமலும் பதவி முத்திரை பொறிக்கப்படாமலும் ரூபா. 20,168,905 பெறுமதியான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. | 2023 | மாகாண நிதி விதியுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். | தற்போது அனைத்து பற்றுச்சீட்டுக்களிலும் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை இடப்பட்டு கோவையிடப்படுகின் | பற்றுச்சீட்டு வழங்கலின் போது இணங்கியிருக்கவில்லை. |
| 13. | நிதி அமைச்சின் அரச நிதி சுற்றுநிருப இலக்கம் 01/2021 ஆம் திகதிய 2021 செப்தெம்பர் 29 இன் பந்தி 2.4 இன் பிரகாரம விவசாயத் திணைக்களத்தின் 06 எண்ணிக்கையான ரூபா. 6,725,000 பெறுமதியான சமூக அடிப்படையிலான | 2023 | அரச நிதி சுற்றறிக்கையுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். | இனிவரும் காலங்களில் 03 இற்கு மேற்பட்ட ஒப்பந்த வேலைகள் குறித்த ஒரு சங்கத்திற்கு வழங்கப்படாமல் தவிர்க்கப்படும் | சீர் செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நேரடி ஒப்பந்தங்கள் மாந்தை தெற்கு ப.நோ.கூ சங்கத்திற்கு வழங்குவதற்கு பிரதேச செயலாளரின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 14. | 29 செப்ரம்பர் 2021 திகதியிடப்பட்ட 01/2021 இலக்க நிதி அமைச்சின் சுற்றுநிருபத்தின் பிரிவு 2.4 மற்றும் 2.5 இன் பிரகாரம் குறித்த ஏற்பாடுகளுக்கு மாறான வகையில் 06 எண்ணிக்கையான ரூபா. 2,588,463 பெறுமதியான குறித்த அதிகார வரம்புக்கு உட்பட்டிருக்காத ஒப்பந்தங்கள் ஓரே காலப்பகுதியில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் ஒரே சமூக மட்ட அமைப்புக்கு ஒப்பந்த அளிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2023 | சுற்றறிக்கையுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். | இனிவரும் காலங்களில் சுற்றறிக்கைக்கு அமைவாக ஒப்பந்த அளிப்பினை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது | சீர் செய்யப்படவில்லை. |
| 15. | 2015 யூலை 14 ஆம் திகதியிடப்பட்ட வடக்கு மாகாண நிதிச் சுற்றறிக்கை PF/06/2015 இன் பிரகாரம் 0.5 | 2023 | மாகாண நிதிச் சுற்றறிக்கையுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். | 2024 ஆம் ஆண்டு முதல் இக்கொள்வனவானது தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை மற்றும் பெறுகைக்குழுவின் தீர்மானத்துடன் | சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மில்லியனிற்கு மேற்பட்ட 15 எண்ணிக்கையான ரூபா. 35,955,165 பெறுமதியான பெறுகைகளுக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உருவாக்கப்படாமல் ஆய்வுகூடத்திற்கு தேவையான பொருட்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையால் பெறுகை முன்னெடுக்கப்பட்டுள்ளது. | | | மேற்கொள்ளப்படுகின்றது. | |
| 16. | அனிஞ்சயன்குள இனவிருத்தி பண்ணையில் பால்உற்பத்தி பொருட்கள் தயாரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டளவில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 2,550,504 பெறுமதியான 16 எண்ணிக்கையான இயந்திரம் பொறிகள் 10 வருடங்கள் கடந்த நிலையிலும் பயன்படுத்தமுடியாத நிலையில் துருப்பிடித்து காணப்படுகின்றது. அத்துடன் ரூபா 3,000,000 பெறுமதியான கட்டடமானது 10 வருடங்களாக பயன்பாடின்றி | 2023 | சொத்துக்கள் உச்சளவில் பயன்படுத்தப்படல் வேண்டும். | அனிஞ்சயன்குளம் பண்ணையில் பால் உற்பத்தி இல்லாமையினாலும் ஏனைய வளங்கள் இல்லாமையினாலும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினருக்கு குறிப்பிட்ட காலம் குத்தகையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தற்போதும் பயன்பாடின்றி காணப்படுகின்றது. |

காணப்படுகின்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17. | மீளாய்வாண்டில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஆண்டு 06 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் 2022 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்ட இறுதித் தவணைப் பரீட்சையின் போது ரூபா.18,950,100 பணமானது மாணவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது, ரூபா 13,926,892 பெறுமதியான பணம் செலவு செய்யப்பட்டிருந்ததன் ஊடாக மேலதிகமாக ரூபா 5,023,208 ஆனது மாணவர்கள் மீது அநாவசியமாக சுமத்தப்பட்டிருந்ததுடன் மாகாணக் கல்வித் திணைக்கள வைப்பில் இடப்பட்டிருந்தது. | 2023 | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அடுத்த பரீட்சையின்போது மாணவர்களிடம் குறைவாகக் கட்டணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு சீர் செய்யப்பட்டிருக்கப்படவில்லை. |
| 18. | வேலை மேற்பார்வையாளராக 2014.10.24 ஆம் திகதி நியமனம் பெற்ற கட்டடங்கள் திணைக்களத்தின் 39 உத்தியோகத்தர்களிடமும் வீதி அபிவிருத்தி | 2023 | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | குறித்த உத்தியோகத்தருக்கு முறையான நியமனக்கடிதம் வழங்கப்பட்டதும் தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயரில் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய இலக்கம் | சீர் செய்யப்பட்டிருக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திணைக்களத்தின் 04 உத்தியோகத்தர்களிடமும் 2015 சித்திரை மாதம் தொடக்கம் 2024 மாசி மாதம் வரை ரூபா 5,520,753 விதவைகள், அநாதைகள் ஓய்ூதிய கொடுப்பனவிற்காக அவர்களின் சம்பளத்தில் இருந்து அறவீடு செய்யப்பட்ட போதிலும் குறித்த உத்தியோகத்தர்களின் பெயரில் விதவைகள், அநாதைகள் ஓய்ூதிய இலக்கம் பதிவுசெய்யப்பட்டு குறித்த உத்தியோகத்தரின் ஓய்ூதியப் பங்களிப்பினை இனங்காணக்கூடிய வகையில் ஓய்ூதிய இலக்கம் குறிப்பிடப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வில்லை. | | | பதிவுசெய்யப்பட்டு குறித்த உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | |
| 19. | வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் விபத்திற்குள்ளான வாகனங்கள் தொடர்பாக காப்புறுதி நிறுவனத்தினால் இழப்பீடு வழங்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் 06 வாகனங்களுக்கு ஏற்பட்ட இழப்பீடு தொடர்பாக | 2023 | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | விபத்துக்குள்ளான 06 வாகனங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நட்டம் ஈடுசெய்யப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சொத்தினை வழமையான நிலைக்குக் கொண்டு வருவதற்கு அல்லது ஈடு செய்வதற்கு 01 தொடக்கம் 13 வருட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையினால் ரூபா 22,573,727 தொகை நட்டம் ஏற்பட்டுள்ளது. | | | | |
| 20. | வவுனியா பொது வைத்தியசாலையில் இரண்டு தொலைத்தொடர்பு கோபுரங்களிற்கும் தனித்தனியாக உப மின்மானி பொருத்தப்பட்டுள்ளதுடன் இரு தொலைத்தொடர்பு நிறுவனங்களிடமிருந்தும் மின்சாரக்கட்டணம் உரிய காலப்பகுதியில் அறவிடப்படாததுடன் வவுனியா மாவட்ட வைத்தியசாலையினாலேயே மின்கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 2016 பெப்ரவரி 01 தொடக்கம் 2022 ஜனவரி 31 வரையான காலப்பகுதியில் வவுனியா மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு மாற்றப்பட்டமையால் கோபுரங்களுக்கா | 2023 | வருமானம் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் வைத்தியசாலை நிர்வாகத்தினால் ஒப்பந்தம் மீளமைக்கப்பட்டு வருமானம் அறவிடுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அரச வருமானத்திற்கு மாற்றப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ன வாடகை வருமானம் ரூபா.4,538,106 இழக்கப்பட்டுள்ளது | | | | |
| 21. | பாடசாலை வகைப்படுத்தல் சுற்றுநிருபத்திற்கமைவாக ஆசிரியர்களுக்கான படிகளை வழங்காது 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை தீவக கல்வி வலய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10,230,397 மேலதிக படியானது இன்றுவரை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 | வழங்கப்பட்ட மேலதிக படியானது மீள அறவிடப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக படியினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | மீள அறவிடப்படவில்லை. |
| 22. | 2008 !ன் 26 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 13/2008 இன் பிரகாரம், மீளாய்வாண்டில் ஆளுநர் செயலகத்தில் வாகன ஓட்ட அட்டவணை, இணைப்பு 01 ஆகியன எதுவுமின்றி சாரதிகளுக்கான மேலதிக நேரக்கொடுப்பனவு மற்றும் இணைந்த படிகளாக ரூபா 1,384,407 வழங்கப்பட்டிருந்தது. | 2023 | சுற்றறிக்கை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கௌரவ ஆளுநர் மற்றும் அவரது பிரத்தியேக செயலாளர்களின் பாதுகாப்பு கருதி வாகன ஓட்ட அட்டவணை காலம் காலமாக சமர்ப்பிக்கப்படுவதில்லை | சீர் செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23. | 2018 அக்டோபர் 12 ஆந் திகதிய PS/CSA/11-18 இலக்க ஜனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம், ஆளுநருக்கான உணவு தொடர்பான படிகள் எதுவும் குறிப்பிடப்பட்டிருக் காததுடன் 2021 திசெம்பர் தொடக்கம் 2023 மே வரையான காலப்பகுதிக்கான உணவுக்காக ரூபா.4,037,299 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2023 | சுற்றறிக்கையின் பிரகாரம நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஆளுநர் அவர்களின் பணிப்பின் பிரகாரம் ஆளுநரினால் குறிப்பிடப்பட்ட நபருக்கு கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட வாக்குத்தலைப்பின் ஊடாக உணவுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது. | சீர் செய்யப்படவில்லை. |
| 24. | ஆளுநர் செயலகத்தில் 2021 திசெம்பர் மாதம் தொடக்கம் 2023 மே வரையான காலப்பகுதியில் கூட்டிணைப்பு செயலாளர், பிரத்தியேக செயலாளர், மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் ஆகியோர் தமக்குரிய வாகனமாக தமது வாகனத்தை பயன்படுத்துவதாக குறிப்பிட்டு வாகனப் படியை பெற்றுக்கொண்டே பாதும் சாரதிகள் தேவையற்ற 33 மாதங்களுக்கு மேலதிமாக சாரதிகளுக்கு ரூபா 1,344,644 | 2023 | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 2021 தொடக்கம் 2023 மே வரையான காலப்பகுதியில் கடமையாற்றிய ஆளுநர் அவர்களின் பயன்பாட்டில் இருந்த வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே சாரதிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆளுநரின் பாதுகாப்பு காரணங்களை கருத்திற்கொண்டு சாரதிகள் நியமனங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் கௌரவ ஆளுநரினாலேயே பரிசீலிக்கப்பட்டு கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையிலேயே நியமனங்கள் | சீர் செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சம்பளம் வழங்கப்பட்டதுடன் இதற்கு மேலாக சாரதிகளுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு, இணைந்தபடிக் கொடுப்பனவு ஆகியனவும் வழங்கப்பட்டிருந்தது. | | | | |
| 25. | ஆளுநருக்கான கொழும்பு உப அலுவலக கட்டிட மாதாந்த வாடகையானது பிரதம விலை மதிப்பீட்டாளரினால் மாதாந்தம் ரூபா 100,000 என மதிப்பிடப்பட்டிருந்த போதும் இவ் மதிப்பீட்டிற்கு முரணாக மாதாந்தம் மேலதிகமாக ரூபா 80,000 விகிதம் கொடுப்பனவு செலுத்தப்பட்டமையினால் மாகாண நிதியத்திற்கு ரூபா.1,240,000 நிதி இழப்பு ஏற்பட்டிருந்தது. | 2023 | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பிரதான விலைமதிப்பீட்டாளரினால் மாதாந்தம் ரூபா 100,000 என மதிப்பிடப்பட்டிருந்த போதும் | சீர் செய்யப்படவில்லை. |
| 26. | சர்வதேச தொழிலாளர் சம்மேளனத் திட்டத்தின் கீழ் தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் வழங்கல் பயிற்சி நெறிக்காக மாகாண திறைசேரியினால் 2023 ஏப்ரல் 10 ஆம் திகதி ரூபா 3,299,000 கட்டுநிதி வழங்கப்பட்டிருந்த | 2023 | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | | முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. |

து. 11 மாதங்கள் கடந்த நிலையிலும் 59% ஆன ரூபா 1,950,000 பெறுமதியான நிதியானது வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் வைப்புக் கணக்கில் காணப்படுகிறது.